The Volga is a river that flows through Russia, while the Ganges is a river in India. Thus, this book can be seen as an attempt to present, in a highly engaging manner, the 8,000-year historical continuity of an ethnic group and successive generations journeying from the Volga to the Ganges.

The Volga River is recognized as the longest river in Europe. Originating in northern Russia, it flows through the steppe regions of central Russia and ultimately drains into the Caspian Sea in southern Russia. With a length of 3,531 kilometres, the river traverses a region that can rightly be described as the cradle of significant Indo-European civilizations.

The Ganges River, which flows through both India and Bangladesh, spans a length of 2,525 kilometres. It originates in the Himalayan state of Uttarakhand in India and flows southeast into the Bay of Bengal. The Ganges is formed from several tributaries originating in the mountains of Nepal, including the Yamuna River, which joins the Ganges. In Bangladesh, the river is also known as the Padma. The Jamuna and Brahmaputra tributaries also merge with the Ganges, enhancing its grandeur. The special feature of this book is that its author, Rahul Sankrityayan, interconnects the Volga of Russia and the Ganges of India through the twenty stories he narrates. Each story in the book draws upon elements of the historical narratives often told across generations and transforms them into literary form. These stories are suitable for extended discussion and debate. Among them, the eighth story, Pravahan (set in the 7th century BCE in Panchala, present day Uttar Pradesh), stands out as the central focus of this article.

Sankrityayan's Pravahan is set in 700 BCE Kannauj, where the king candidly admits to Lopa that his promotion of Brahman—an abstract, unseeable deity—and the ideology of rebirth are deliberate strategies to maintain power. "Reincarnation is the most useful," Pravahan declares, explaining how it convinces the impoverished to accept their suffering as karmic retribution for past lives, thereby stifling rebellion. This narrative aligns with Sankrityayan's broader Marxist lens, which views religious doctrines as instruments of economic and social manipulation. His portrayal

of Pravahan's cynicism mirrors his own lifelong resistance to orthodoxy, from his early rejection of Brahminical Hinduism to his later embrace of Buddhism.

**II Rebirth as Cultural Instrumentation**

Pravahan's significance extends beyond historical fiction; it reflects Sankrityayan's intellectual journey as a skeptic who challenged dogmas through travel, scholarship, and activism. His works often interrogate how myths are engineered—a theme echoed in critiques of his From Volga to Ganga for its alleged biases, despite its subversive messaging. By dissecting Pravahan, this study explores how Sankrityayan's rationalist resistance dismantles the myth of rebirth, offering a radical alternative: a worldview rooted in material conditions and human agency. In doing so, it invites readers to question not just ancient hierarchies but the enduring narratives that shape modern inequities.

Sankrityayan's depiction of rebirth in Pravahan is mechanical rather than mystical—an ideological tool wielded by Brahmanical elites. Pravahan introduces reincarnation not as revelation but as invention, crafting a myth to legitimize caste hierarchy and hereditary status. In hierarchical societies, the idea of karma and rebirth served as a mechanism of societal governance. This ideological move dulls class consciousness, presenting inequality as metaphysical destiny. Sankrityayan frames rebirth as power politics cloaked in spiritual narrative.

This narrative occurs as a dialogue between Pravahan, who had long memorized and studied the Vedas in school (குருகுலம்), and Lopa, who would later become his wife.

> Pravahan: By the age of twenty four, I had mastered all the arts and stepped out into the real world. There, I encountered many new things to learn. After entering the realm of state administration, I realized how fragile and unreliable the old boat constructed by the Brahmanas truly was. (This "old boat" metaphorically refers to the early Ṛigvedic and other Vedic texts.)
>
> That is precisely why I have built a new and stronger boat. (Here, "boat" symbolizes the Upanishad concept of Brahman as the foundation of a new philosophical path.)
>
> Lopa, I am not concerned with truth or falsehood. My concern lies with practical feasibility. The concept of rebirth has now emerged as a fresh idea in this world. Moreover, you are well aware of the self-interest concealed within it. However, my students have now begun to spread this notion in all four directions. People are already prepared to dedicate ten to twelve years of their lives to understanding the paths to Pitruloka (the ancestral realm) and Devaloka (the divine realm). Lopa, by then, neither you nor I will be around. But a time will come when the poor will endure all forms of suffering, injustice, and hardship, solely in the hope of their rebirth.
>
> Do you see how simple the method

I have devised is, to make people believe in re-birth, heaven and hell?

Lopa: Yet to fill one's stomach, it is akin to roasting hundreds of generations in fire. (An intensely disheartening and sad tone)

Pravahan: Even Maharishi Vashistar and Visuvamithirar composed the Vedas merely for their own subsistence. The Northern Panchala (Rohilkhand) king Divodasa was praised in poem after poem for his conquest of the Sabara fort.

Provisioning for survival is no crime. But what we have done is not merely for our own survival. We have secured sustenance for our children, grandchildren, and generations yet to come for thousands of years.” (Ṛigveda 6.26.25 is cited here to support the point.)

For this, we deserve eternal renown. What the ancient sages and the Brahmanas who feast upon their legacy could not accomplish, Pravahana has achieved.”

Lopa: Pravahan, you are a cruel man.

Pravahan: Yet I have accomplished my task with unmatched skill and completeness. (Sankriyayan 91-92)

**III. Rationalist Deconstruction and Historical Materialism**

Deeply influenced by Marxist thought, Sankrityayan rewrites myth with historical consciousness. Pravahan's narrative is situated within evolving material conditions, suggesting that myths like rebirth only emerge to accommodate socio-economic shifts. Through dialogue and narrative pacing, the text strips metaphysical beliefs of their eternal stature, revealing them as temporally bound tools. Sankrityayan doesn’t merely critique religious dogma—he offers history as an antidote to myth, presenting critical rationalism as a method of liberation.

This narrative presents, through story form, the idea that Pravahan was the originator of the concept of “Brahmam” as a metaphysical absolute and the doctrine of rebirth, the belief that living beings undergo repeated cycles of death and rebirth. These ideas are said to have been established and systematized in the Upanishads.

Unlike other animals, whose lives revolve around basic needs such as food, shelter, and reproduction, human beings gradually transcended these primary concerns and began shaping their identity through agriculture, animal domestication, and eventually, the development of ritual practices and religious institutions. In these ritual systems, humans introduced many new elements, often motivated by fear and the desire for cosmic order. As rituals evolved, so too did imagined metaphysical constructs, most significantly, the idea of rebirth, which was embedded deeply in the human psyche through religious texts and sustained across generations.

The Vedic texts successfully inculcated this imagined world, with the concept of rebirth becoming central to the human understanding of suffering, ethics, and

the afterlife. Today, this doctrine of rebirth remains an unshakable belief deeply embedded in the minds, particularly of the Indian population. This belief has facilitated numerous superstitions, exploitative rituals, and delusional promises.

What is particularly striking is that even knowledgeable individuals holding higher administrative positions continue to possess an unwavering faith in the construct of rebirth. This belief is not incidental, rather deliberately constructed and codified in the Vedic texts, repeated through ritual recitation, and incorporated into moral narratives, thus embedding itself into the very fabric of Indian cultural life. Over time, this constructed idea gained the force of an unquestionable truth.

**IV. Dialogic Fiction as Cultural Critique**

Rather than presenting a linear myth, Pravahan unfolds as a dialogic contestation. Characters debate, resist, and reinterpret. This format underscores Sankrityayan's commitment to open inquiry over dogma. Fiction here becomes a tool to democratize discourse, where history and belief clash—and sometimes collapse—under the weight of reason. The rebirth myth thus becomes a site of intellectual resistance, not transcendental truth.

The eighth story in the narrative cycle offers a compelling account of how this unnatural philosophical invention called "rebirth" was born during the Upanishads period. Now, many people, perhaps most of society, continue to believe in rebirth. The concept has penetrated the human psyche so deeply that it is no longer perceived as a philosophical theory but as a lived truth. Surrounding this belief, an entire ecosystem of rituals, ceremonies, superstitions, and religious performances has emerged and flourished.

If humanity is to liberate itself from such fabricated beliefs, the first step is to recognize them that they are imaginations, fabricated stories and not realities. Awareness of their constructed nature is essential for human liberation. Only by critically examining the historical role of religion and god-concepts, as purposeful inventions designed to establish control over societies, can humankind begin to truly free itself from their grip.

We have strayed far from nature. Even animals and birds, which possess a form of natural freedom, are not as bound as human beings today, whose lives are constrained by religious mythologies and psychological constructs born of fear and control. The only way to reclaim our lost autonomy is by reintegrating with nature and accepting a naturalistic worldview. Recognizing that humans, too, are animals, one among many species, is the beginning of reclaiming the freedom that our imagined beliefs have taken from us!

**V. Conclusion**

Sankrityayan critiques karma and dharma not merely as metaphysical tenets, but as regulatory mechanisms embedded in caste ideology. These doctrines enforce submission, masking injustice as cosmic balance. Pravahan dismantles these constructs, positioning Enlightenment

rationalism as liberation from metaphysical entrapment. Sankrityayan's atheistic humanism reclaims moral inquiry from religious dogma.

Sankrityayan doesn't critique rebirth in isolation; he dismantles the moral scaffolding that supports it. Karma and Dharma—pillars of the rebirth ideology—are shown to function as social regulators. Pravahan demystifies them, portraying these doctrines as moral surveillance systems that perpetuate submission rather than justice.

Pravahan stands not merely as a literary text but as a philosophical intervention—a deliberate disruption of ideological myths that have long underpinned social hierarchies. Sankrityayan repositions rebirth from cosmic inevitability to cultural strategy, exposing its complicity in caste oppression, moral surveillance, and gendered exclusions. Through historical materialism, dialogic storytelling, and rationalist critique, the narrative rejects transcendental dogma in favour of humanist inquiry. In doing so, it echoes the Enlightenment's call for reason and liberation, urging readers to see myth not as sacred truth but as a political tool—one that can be dismantled to imagine more equitable futures.

### Reference :

*Sankrityayan, Rahul. From Volga to Ganga. Translated by Victor Kiernam, Rahula publications, Missouri, India, 1953.*

### About the Author :

*Dr.Subashini Kanaga Sundaram is an Enterprise Architect at DXC Technologies in Germany. She is also the Chairperson and Founder of the Tamil Heritage Foundation (THF), an international organization.*

*Born in Penang, Malaysia, where she completed her schooling.*

*Pursued higher education in Computer Engineering in Australia and Germany.*

*Earned her PhD from the United Kingdom.*

*Works as an Engineer for the European region at DXC Technologies, residing in the state of Baden-Württemberg, Germany.*

*Delivered over 800 lectures on historical preservation at educational institutions in Tamil Nadu and across the globe.*

*Visited approximately 1,200 museums worldwide for research and authored over 150 articles about them.*

*Member of the editorial board for the University of Malaya's Tamil research journal.*

*She has authored numerous books.*

*Produced over 500 historical videos documenting Tamil history and heritage.*

- ஜாதி வேறுபாடுகளுக்கு எதிராகவும், ஜாதிகளின் பெயரால் நடக்கும் சமூக அடக்குமுறைகளுக்கு எதிராகவும் தொடர்ந்து போராடி,
- ஒதுக்கப்பட்டவர்களுடைய உரிமைகளுக்காகவும், ஒடுக்கப்பட்டவர் களுடைய சமத்துவத்திற்காகவும், வாழ்நாள் எல்லாம் குரல் கொடுத்து,
- எளிய மக்களின் உரிமைகளைப் பற்றி விழிப்புணர்வை ஊட்டிய, நம் அரசியலமைப்புச் சட்டத்தை வகுத்துத் தந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாளில்,
- ஜாதி வேறுபாடுகள் ஏதுமில்லாத சமத்துவ சமுதாயத்தை அமைக்க நாம் அனைவரும் பாடுபடுவோம் என்றும்,
- சக மனிதர்களைச் ஜாதியின் பெயரால் ஒருபோதும் அடையாளம் காணமாட்டேன் என்றும்,
- சக மனிதர்களிடம் சமத்துவத்தை வாழ்நாள் முழுவதும் கடைப்பிடிப்பேன் என்றும் உளமார உறுதி ஏற்கிறேன்!

## சமத்துவ நாள் உறுதிமொழி!

(தமிழ்நாடு அரசு – 14.04.2025)

# தந்தை பெரியாரின் கல்வியியல் சிந்தனைகள்

முனைவர் **உ. பிரபாகரன்**



**ஆய்வுச் சுருக்கம்:**

*இக்கட்டுரை கல்வியை சமூக அறிவியல் நோக்கில் ஆராய்கிறது.தந்தை பெரியார் கல்விக்கூடங்களைப் பகுத்தறிவுக் கூடங்களாக,ஒழுக்கக்கூடங்களாக,சமூகக் கூடங்களாகஅறிவியல் கூடங்களாக எப்படியெல்லாம் பார்த்தார் என்பதை இக்கட்டுரை சுட்டுகிறது.பாடத்திட்டங்களில் எப்படிப்பட்ட பாடங்கள் இருக்கவேண்டும்,எப்படிப்பட்ட பாடங்கள் இருக்கக் கூடாது என்பதை எப்படித் தமிழர்களின் உயர்வுக்கு அடிப்படையாக தந்தை பெரியார் தெரிவித்தார் என்பதையும் அது இன்றைய காலத்திற்கு எப்படிப் பொருந்துகிறது என்பதையும் பல்வேறு தலைப்புகளில் இக்கட்டுரை ஆராய்கிறது. "அவரது நுண்ணோக்குப் பார்வை இன்றைய தேர்வு முறைக்கு முன்னோடியாக அமைந்துள்ளதுபோல் தோன்றுகிறது. அவர் சொல்லும் பகுத்தறிவு (Knowledge) உடல் தேர்வு (Physical Fitness) உலக ஞானத்திறமை (World Current Affairs) முதலியன இன்றைய இந்திய ஆட்சிப் பணியில் (Indian Administrative Service) நடத்தப்படும் தேர்வு முறைகளை ஒத்துவருவது போல் உள்ளது." எனச்சுட்டிக் காட்டும் இக்கட்டுரை, தந்தை பெரியார் எப்படித் " தமிழகம் தழைக்கத் தயங்காமல் கல்வியியல் சிந்தனையை வழங்கிய சிந்தனையாளர் " என்பதைத் தரவுகளோடு முன் வைக்கிறது.*

## முன்னுரை

கல்வியில் பல சிக்கல்களை எதிர்நோக்குகிறோம். இவற்றின் அடிப்படைக் காரணங்களையும், சிக்கல்களைக் களைய உதவக் கூடிய தீர்வுகளையும் முறையாக அணுகி ஆராய்வது இன்றியமை யாததாகும். பொருளறிவியல், வேதியியல் போன்ற துறைகளில் மேற்கொள்ளும் அறிவியல் ஆராய்ச்சிகள் பொருள்களை அடிப் படையாகக் கொண்டவை. ஆனால், கல்வி ஆராய்ச்சி (சமூகச் சூழ்நிலையில்) மனித நடத்தையைக் (மாறுபடும் விதத்தை) கூறும் சமூக அறிவியலைச் சார்ந்ததாகும்.

> "கல்விச் சூழலில் நடத்தைப் பற்றிய ஓர் அறிவியலை வளர்ப்பதற்கான செயலே கல்வி ஆராய்ச்சியாகும். இதன் இறுதி நோக்கம், கல்வியாளர்களுக்குத் தங்களது இலக்குகளை மிகத் திறன்வாய்ந்த முறைகளின் மூலம் எட்ட உதவும் அறிவைத் தருவதாகும்." 1

என ட்ராவர்ஸ் என்ற அறிஞர் கூறியுள்ளார். ஆசிரியர்கள் தங்களது பணியில் மேலும் திறன்களை அடைய, கல்வி ஆராய்ச்சி இன்றியமையாததாகும். பாடத்தில் ஆழ்ந்த அறிவு இருப்பது மட்டும் போதாது. தாம் கையாளக்கூடிய கற்பித்தல் முறைகளில், ஒரு குறிப்பிட்ட ஒரு கல்விச் செயலுக்கு மிக ஏற்றது

எது என்பதை அறிய ஆராய்ச்சி முடிவுகள் உதவுகின்றன. கல்வியாளர்களும். ஆசிரியர்களும் இணைந்து பணியாற்றினால் மிக அதிக அளவிலான மாணாக்கருக்கு அடிப்படையான அறிவு. திறன், மனப்பான்மை ஆகியவற்றைப் புகட்ட முடியும். இந்தியக் கல்வி ஆராய்ச்சி சிறிது சிறிதாக வளர்ந்து வருகிறது. பரோடாவிலுள்ள கல்வி ஆராய்ச்சிக்கான முன்னேற்ற மையம் ஒரு முன்னோடியான ஆராய்ச்சி மையமாகும். பல்கலைக் கழகங்களில் உள்ள பல்வேறு கல்வித் துறைகள் ஆராய்ச்சியை ஊக்குவிக்கின்றன. தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் (NCERT) மாநிலக் கல்வி ஆராய்ச்சி நிலையங்கள் (SCERT), பல்கலைக் கழக மானியக் குழு ஆகிய அமைப்புகள் கல்வி ஆராய்ச்சிக்கு உதவுகின்றன.

கல்வி ஆராய்ச்சியினால் கல்விப் பிரச்சினை களுக்கான தீர்வுகள் பல கண்டறியப்பட்டுள்ளன. கற்பித்தல் அணுகுமுறைகளும், நடை முறைகளும் முன்னேறியுள்ளன. கல்வி பற்றிய கோட்பாடு தெளிவும், விரிவும் பெற்றுள்ளது. பழைய முறைகள் புதிய வடிவம் பெற்று எளிதானவையாகவும், சிக்கனமுடையனவாகவும் ஆக்கப்பட்டுள்ளன. ஆராய்ச்சி முடிவுகளின் அடிப்படையில் கலைத்திட்டம் மாற்றப் பட்டுள்ளது. இவ்வாறு ஆராய்ச்சியின் துணைகொண்டு கல்வியின் பல்வேறு பிரிவுகளும் தொடர்ந்து வளர்ச்சிபெற்று வருகின்றன. எனினும் கல்விக்கூடம். பாடத் திட்டம். ஆசிரியர், மாணாக்கர் எனும் நான்கு நிலைகளே கல்வியின் முக்கிய கூறுகளாகக் கருதப் படுகின்றன. இவையே இவ்வியலில் கல்வியியல் களங்களாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இக்கல்வியியல் களங்கள் பற்றிப் பல கல்வியியல் அறிஞர்கள் கருத்துகள் தெரிவித்துள்ளார்கள். அவர்களுள் அறிஞர் ஆல்பர்ட்டு ஆலிவர் என்பவர் இக்கல்வியியல் களங்கள் பற்றிக் குறிப்பிடும் பொழுது,

> "பாடங்கள், செயல்கள், அறிவுரை பகர்தல், வழிகாட்டல் ஆகியன அடங்கியுள்ள கல்வி நிகழ்ச்சி நிரல்தாம் கலைத்திட்டம்." 2

என்று கூறுகிறார். இவரையடுத்து கில்டா டாபா என்பவர்,

> "பள்ளிகள் பொதுவாக இயங்குகின்ற செயல்முறையே கலைத் திட்டமாகும்." 3

என்று குறிப்பிடுகின்றார். ஆனால். கல்வி நிறுவனங்களில் ஆசிரியர். கற்பித்தல் வழியாக மாணாக்கர்க்கு அளிக்கும் நிகழ்ச்சியே கலைத் திட்டமாகும் என்பது கலைத்திட்டம் பற்றிய பொதுவான கருத்தாகும். இவ்வாறு அறிஞர்களின் கருத்துகளைச் சீர்தூக்கி ஆய்வு செய்தால் ஆசிரியர், மாணாக்கர், பாடத்திட்டம். கல்விக்கூடம் முதலியன கல்வியியல் களங்கள் எனக் கருதலாம். இதுபோலவே பெரியாரின் கல்வியியல் சிந்தனைகளில் கல்வியியல் களங்களாகக் கல்விக்கூடம். பாடத்திட்டம், ஆசிரியர், மாணாக்கர் பற்றிய கருத்துக்கள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. கல்விக்கூடம் என்பது வேற்றுமை உணர்வினை வேரோடு கெல்லி எறிந்துவிட்டுச் சமத்துவ, ஒற்றுமை உணர்வினை வளர்க்கும் சமூகக் கூடமாக இருக்கவேண்டும்; பாடத் திட்டங்களில் மூடநம்பிக்கையும், சமயச் சார்பும் அறவே கூடாது; ஆசிரியப் பெருமக்கள் சமுதாய முன்னேற்றத்தில் மிகுந்த பங்கு கொள்வதோடு மாணாக்கரிடம் அன்புடனும். நட்புடனும் பழக வேண்டும்; மாணாக்கர் புதியன புனைந்து தானாக நினைத்து எதையும் கண்டுரைக்கும் படைப்பாற்றல் மிக்கவராக இருக்கவேண்டும் எனப் பெரியார் விழைந்தார். இத்தகைய விருப்பம் உடைய அவரின் 'கல்வியியல் களங்களை ' ஆராய்வது இன்றியமையாதது.

### கல்விக் கூடங்கள்

கல்விக் கூடமானது சமுதாயத்தின் ஓர் அங்கமாகும். அக்கூடம் மக்களுக்கு அறிவைக் கொடுத்து அதன் மூலம் சமூக முன்னேற்றம். சகோதரத்துவம், சமத்துவம் போன்றனவற்றை உருவாக்க வேண்டும். மேலும் தீண்டாமை, மூடநம்பிக்கை கல்விக் கூடங்களில் தலை காட்டாது பார்த்துக்கொள்ள வேண்டும் எனப் பெரியார் கருதுகிறார். இத்தகைய நிலை உருவாகக் கல்வியில் பல மாற்றங்கள் நிகழ வேண்டுமென எண்ணுகிறார். அதனை

> "இப்போதுள்ள கல்விக்கூடம் எதற்காக, இருக்கிறது? மக்கள் அறிவு பெறவேண்டும். ஒழுக்கமுடையவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காகக் கல்வி கற்கவில்லை. கல்வித் திட்டமும் இவற்றைப் போதிப்பதாக இல்லை."4

எனப் பெரியார் கூறுவதன் நோக்கம், கல்விக் கூடம் என்றால் அறிவை உற்பத்தி செய்யும்

நாற்றங்கால்களாக இருக்கவேண்டும். ஒழுக்கத்தைப் போதிக்கும் உலைக் களமாக இருக்கவேண்டும். அத்தோடு அங்குக் கற்பிக்கப்படும் கல்வியும் மாணவர்களுக்கு அறிவையும், ஒழுக்கத்தையும் வளர்க்கும் தன்மையைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்பதுதான்.

### பகுத்தறிவுக் கூடம்

கல்விக் கூடங்களைப் பற்றிப் பெரியார் கூறும்பொழுது கல்வி நிலையங்கள் பகுத்தறிவுக் கூடமாக அமைதல் இன்றியமையாதது என்கிறார்.

> "கோடிக்கணக்கான பணத்தைச் செலவழித்துப் பல்லாயிரம் கல்வி நிலையங்கள் ஏற்படுத்திக் கல்வி கற்பதைவிடப் பகுத்தறிவுப் பள்ளிகள் என்னும் பெயரால் தேவையான சில பள்ளிகளை மட்டும் வைத்து நிர்வாணமான சிந்தனா சக்தி தரும் படிப்பைக் கொடுத்து மக்களை எதைப் பற்றியும் விருப்பு வெறுப்பு இல்லாமலும் செல்லும் வரைச் சிந்தித்து முடிவிற்கு வர கற்பிப்போமானால்."5

என்று பகுத்தறிவுக் கல்வியின் நோக்கத்தை வெளிக்கொணர்கிறார். இன்று நம் நாட்டில் பாழாகும் செல்வம், அறிவு, ஊக்கம், நேரம் போன்றவை பேரளவு மீதமாகும். மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து ஒழுக்கம், நேர்மை, நல்லெண்ணம், அன்பு, மக்கட் பற்று போன்றவை தாமாக வளரும். இளைஞர்களுக்கு மாறான தன்மைகள் மறைந்து எல்லா மக்களும் குறைவற்ற செல்வத்துடனும், நிறைவுற்ற ஆயுளுடனும் வாழப் பகுத்தறிவுப் பள்ளிக் கூடங்கள் அவசியம் என்பதைப் பெரியார் உணர்த்தியிருக்கிறார்.

### ஒழுக்கக் கூடம்

பல்வேறு உயிரிகளுள் மனிதனிடம் மட்டுமே ஒழுக்கப் பண்புகள் காணப்படுகின்றன.

> "கல்வியின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று, மாணாக்கரிடையே நல்லொழுக்க வளர்ச்சிக்கான (Character Development) வாய்ப்பு களை அளித்தலாகும்."6

என்று ஹெர்பார்ட் (Herbart) கூறுகிறார். மேலும், இது ஒன்றே கல்வியின் நோக்கமாகும் என்றும் கூறுவர்.

நுண்ணறிவைக் காட்டிலும் நல்லொழுக்கம் இன்றைய முக்கியத் தேவை எனப்படுவதில் பெருமளவு உண்மை இருக்கிறது. நுண்ணறிவுத் திறன் மிக்க. ஆனால் ஒழுக்கம் குறைந்த மாணவர்களால் சமூகத் துக்குத் தீமையே எழும். எனவே கற்றல் நிகழும் இடத்தில் நிலைத்த பயனைத் தருவது ஒழுக்கமாகும். உயர்ந்தனவும், சிறந்தனவும் மாணாக்கரிடையே இடம்பெற ஒழுக்கம் உறுதுணையாக இருக்கிறது. கல்வி நிலையத்தினைப் பற்றிக் குறிப்பிடும் பெரியார்.

> "பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளுக்கு முதன் முதலில் ஒழுங்கு முறையைப் புகட்டுவதில்தான் கவலை வேண்டும். அதுதான் முக்கியம். பிறகு அடுத்த படியாக உள்ளதுதான் கல்வி. முதலில் எப்படிப் பழகவேண்டும் என்ற நல்லொழுக்கத்தைப் புகட்ட வேண்டும். நல்லொழுக்கம்தான் ஒரு மனிதனைப் பிற்காலத்தில் சிறந்த பண்புடையவனாக ஆக்குகிறது."7

என்கிறார்.

ஒழுக்கம் பற்றிய இவரது கருத்தும், கவலையும் பள்ளிகளில் மாணாக்கர்க்கு முதன் முதலில் ஒழுக்கத்தைப் புகட்ட வேண்டும் என்பதுதான். கல்விக்கு இரண்டாம் இடத்தை அளிக்கும் இவர். ஒழுக்கத்திற்கு முதலிடம் அளிக்கிறார். பக்தியைப் பற்றிப் பிரிதொரு இடத்தில் குறிப்பிடும் இவர் ஒருவனுக்குப் பக்தியில்லை என்றால் யாருக்கும் எத்தீங்கும் நேராது. ஆனால் ஒழுக்கம் இல்லை என்றால் சமூகத்திற்கே அவனால் தீங்கு விளையும் என்கிறார். ஒழுக்கம் மாணாக்கர்க்கு எவ்வளவு இன்றியமையாதது என்பதில் பெரியார் எவ்வளவு கண்ணும் கருத்துமாக இருக்கிறார் என்பது புலனாகிறது. மாணாக்கர் ஒழுக்கமுடையவர்களாக இருந்தால் நாளைய சமூகம் முழுவதும் ஒழுக்கமுடைய சமூகமாக இருக்கும். இதற்கு நாற்றாங் காலாக விளங்குவது பள்ளிக்கூடமாகும். ஆதலால் பள்ளிக்கூடம் ஒழுக்கக் கூடமாக அமைய வலியுறுத்துகிறார்.

### சமூகக் கூடம்

தனிமனிதன் சமூகத்தின் ஓர் உறுப்பினராவான். சமூகத்தில் பிறந்து, அதன் பல நிலையங்களின்

செல்வாக்குகளுக்குட்பட்டு. அச்சமூகத்தில் தனது வாழ்க்கையினை நடத்துகிறான். அதுபோல் பள்ளியும் ஒரு சமூக நிலையமாகும். பள்ளிக் கல்வியின் அமைப் பிலும் தன்மையிலும் சமூகம் பெரும் ஆர்வம் கொண்டுள்ளது. பள்ளிக் கல்வியின் விளைவாக மாணாக்கர் பல சமூகப் பண்பு களைப் பெற்று, சமூகவியல்பினை (Sociability) அடைந்து, பிறருடன் ஒன்றுகூடி செயற்படும் மனப்பான்மையினைப் பெற்று வளர்தல் வேண்டும். கல்வியின் சமூக நோக்கம் (Social Aim) இக்கருத்தினை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

குழந்தைகளுக்குப் பள்ளியானது சமூக மரபினை அறிமுகப் படுத்துகிறது. சமூக வாழ்விற்கான நடத்தை முறைகள், சமூக நல்வாழ்விற்கு இன்றியமையாத சகிப்புத் தன்மைகள், ஒத்துழைப்பு போன்ற பண்புகள், பள்ளிக் கல்வியின் விளைவாகக் குழந்தைகள் பெறுகிறார்கள். சிறப்புமிக்க ஒரு மாதிரிச் சமுதாயமாகப் (Ideal Community) பள்ளி திகழ்வதால் அங்குத் தீண்டாமை, இனவேறுபாடு, சமயவேறுபாடு இருக்கக் கூடாது எனப் பெரியார் எண்ணினார்.

> "அனைத்துயிரும் ஒன்று என்று எண்ணும் அறிவு வளரக் கல்வி பொதுவாக்கப்பட வேண்டும்."8

என்னும் கொள்கை உடைய பெரியாரின் நோக்கமெல்லாம் பள்ளிக் கூடங்கள் அனனத்தும் பல்வேறு மொழி, இன மக்கள் வேற்றுமை யற்றுக் கூடும் ஒரு சமூகக் கூடமாக இருக்க வேண்டும் என்பதேயாகும். அறிவாற்றலையும், செயல் திறன்களையும் இன்றைய சமுதாயத்தில் வாழும் குழந்தைகள் எளிதில் பெற உதவுதலே பள்ளிகளின் நோக்கமாக இருக்கவேண்டும் என எண்ணினார் என்பது அவருடைய கருத்திலிருந்து வெளிப்படுகிறது.

### அறிவியல் கூடம்

கல்வி நிலையங்கள் பகுத்தறிவுக் கூடமாகவும். ஒழுக்கக் கூடமாகவும். சமூகக் கூடமாகவும் இருந்தால் மட்டும் போதாது. அறிவியற் கூடமாகவும் இருந்தால்தான் பயனுடையதாக இருக்கும். பள்ளிகள் மாணாக்கரிடையே அறிவியல் நோக்கினை (Scientific outlook) உருவாக்கவேண்டும். இக்கல்விக் கூடங்களில் கற்பித்தலும் அறிவியல் நோக்கினைத் தோற்றுவிப்பதாக இருக்க வேண்டும் இன்றைய தொழில் நுட்பச் சமுதாயங்களின் வளர்ச்சிக்கு அறிவியல் நோக்கு முக்கியமானதாகும். மக்களாட்சி நிலவவும், மூடநம்பிக்கைகள் தேவையற்ற - பொருளற்ற பழக்க வழக்கங்கள் மறையவும். அறிவியல் கூடங்களாகக் கல்விக் கூடங்கள் திகழவேண்டும். உண்மை விவரங் களின் (Facts) அடிப்படையில் முடிவெடுத்தல். அவசரப்பட்டு முடிவுக்கு வராமை, பிரச்சினைகளின் பல்வேறு கூறுகளை விருப்பு வெறுப்பின்றி ஆராய்தல், திறந்த உள்ளத்துடன் செயற்படல் (Open Mindedness) கருத்துகளை ஆராய்ந்து ஏற்றல் ஆகிய திறன்களைக் கொண்ட மாணாக்கரை உருவாக்க வேண்டுமெனில் கல்விக் கூடங்கள் அறிவியற் கூடமாகத் திகழ்தல் இன்றியமையாததாகும் எனப் பெரியார் விரும்பினார். இதனை அவர்,

> "அங்குள்ள கலாசாலை, (மேலை நாடுகளில் உள்ள கல்வி நிலையங்கள்) சர்வகலாசாலை என்பவை உலகப் பொது அறிவு பண்டிதத் தன்மைக்குப் பயன்படுபவையாக இருக்கும். பாடப் புத்தகங்களில் மூடநம்பிக்கைச் சாத்திரங்களோ, மத பக்திக் கலைகளோ ஆதிக்கம் செலுத்தாமல் இருக்கும்படியாய் இருக்கும். எப்படிப்பட்ட கல்வியானாலும் அறிவுக்கும், வாழ்க்கைக்கும் எவ்வளவு பயன்படும் என்பதைப் பொறுத்து இருக்கும். பகுத்தறிவையும், விஞ்ஞானத்தையும் அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும்." 9 என்கிறார்.

கல்விக்கூடங்கள் அறிவியல் கூடமாக இருக்கவேண்டும். எனக் குறிப்பிடும் பொழுது மேலை நாடுகளில் உள்ளதுபோல் இந்தியா விலும், கல்வி நிலையங்கள் பகுத்தறிவையும், அறிவியலையும் அடிப்படையாகக் கொண்டு நிலவ வேண்டும் என விரும்புகிறார். அத்தகைய கல்விக் கூடங்கள்தாம் அறிவுக்கும் வாழ்க்கைக்கும் பயன் படும். அவ்வாறு வாழ்க்கைக்குப் பயன்படும் கல்விக் கூடங்கள் தாம் இந்நாட்டிற்குத் தேவை என்றார். மேல்நாட்டுக் கல்விக் கூடங்களை ஒப்பிட்டுக் காட்டுவதை, இந்தியத் துணைக்கண்ட கல்வியிலும், உலக

நாடுகளைப் போல அறிவியல் சார்ந்த கல்வி இடம் பெறவேண்டும் என்ற அவருடைய ஆர்வத்தினைக் காட்டு கிறது. இவ்வாறு மூடநம்பிக்கையும். மதச் சார்பும் பாடப்புத்தகங்களில் இடம் பெறாமல் இருக்கவேண்டும். மேலும் அக்கல்வியானது பகுத்தறிவையும். அறிவியலையும் அடிப்படையாகக் கொண்டு உருவாக வேண்டும். அப்பொழுதுதான் கல்விக் கூடங்கள். எவ்விதப் பாகுபாடும் இல்லாது எல்லோர்க்கும் கல்வி வழங்க இயலும் எனப் பெரியார் கருதுகிறார்.

**பாடத்திட்டம்**

கல்விக் கூடங்களைப் பற்றிச் சிந்தித்த பெரியார் பாடத்திட்டங் களைப் பற்றியும் சிந்தித்துப் பல்வேறு கருத்துகளை முன் வைத்துள்ளார். பொது அறிவும், பகுத்தறிவும் மாணாக்கர்க்கு ஏற்பட வேண்டும் என்றால் சமயக் கருத்துகள் அடங்கிய நூல்களைப் பள்ளிகளில் கற்பிப்பது தவறானது என அவர் எண்ணினார். பள்ளியில் படிக்கும் பொழுது ஒட்டுமொத்தச் சமூகம் பற்றிய செய்திகள் பாடநூல்களில் இடம்பெற வேண்டும் என்பது பெரியாரின் பெரும் விருப்பமாகும். இதனைப் பெரியார் 'குடி அரசு' இதழில் எழுதும்பொழுது,

> ''பள்ளியில் படிக்கும்பொழுது ஏதாவது தெரிந்து கொள்ளலாமா என்றால் அங்குத் தமிழர்களைப் பற்றி ஒரு சேதியும் கிடையாது: எந்தவிதப் பாடப்புத்தகமும் கிடையாது; 'அரிவரி' பால பாடம் படிக்கும்போதும் 'அய்யர் - பிராமணன்' போன்ற வார்த்தைகள் தாம் காணப்படுகின்றனவே அன்றித் தமிழர் - திராவிடர் என்கின்ற வார்த்தைகளுக்கு அங்கு இடமோ, அவகாசமோ கிடையவே கிடையாது." 10 என்பதைத் தெளிவாக எழுதுகிறார்.

தமிழர் - திராவிடர் பற்றிய பாடத்திட்டங்கள் இல்லாதது கண்டு வருந்துகிறார். சாதி, சமய, பேதம் வளர்க்கும் பாடப்புத்தகங்களைப் பள்ளியில் சேர்ந்தவுடன் குழந்தைகள் கற்பதையும், அதனால் சமுதாய நெறிகளும், வருணங்களும் கல்வி வேரை எவ்வாறு கெல்லி எறிந்தன என்பதையும் சுட்டிக் காட்டுகிறார்.

> விரல் தோய்ந்து எழுதத் தொடங்கும்போதே வேண்டாத மூட நம்பிக்கைகளைத் தூண்டி, விளையும் பயிர்களின் நெஞ்சில் வேறு பாட்டு விதைகளை அன்றைய கல்வி விதைத்து வந்தது. அதைத் தொடர்ந்து தொடக்கப் பள்ளியில் தொடக்கத்திலேயே சேணியன் நெய்கிறான், கருமான் இரும்படிக்கிறான். வண்ணான் துவைக்கிறான், ஐயர் வேதம் ஓதுகிறார்.' 11

என்று சாதி வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டி உயர்வு தாழ்வைக் கற்பிக்கும் பாடங்களை இளம் பருவத்திலேயே ஊட்டினர். பின்னர் சமய இலக்கியங்கள் என்ற பெயரில் அவரவர்க்கான சமய உணர்வை மட்டுமே வலியுறுத்தியும், தம்பக்கக் குறைகளை எல்லாம் மறைத்தும், பிறர் பக்கத் தவறுகளை எல்லாம் விரித்தும். ஒருபாற் செல்லும் கல்வி உணர்வை உருவாக்கியது கண்டு உளம் கொதித்தார்.

"எல்லாம் அவன் செயலே' என்று சொல்லி வாழ்வில் சோர்வடைவதற்கும். 'விதியை நம்மால் வெல்லவா முடியும்' என்று வருந்தி வாடுதற்கும். வாழ்க்கையை நுகர்ந்து மகிழ்வதைக் காட்டிலும் வெறுத்து இகழவும், போலித் துறவறப் போக்கைப் போற்றவும் துணை செய்த நூல்களே பாடநூல்களாக அமைந்தன. இப்படி நாட்டில் இருள் நிலைப் படரக் கல்விப் பொய்ம்மையே காரணமாக இருந்தமை கண்டு, தந்தை பெரியார் பாடநூல்களில் தமிழர் - திராவிடர் வரலாறு. அறிவியல், தொழில், தன்மானம் முதலியன பற்றிய செய்திகள் தேவை என்று வற்புறுத்தியுள்ளார்.

**வரலாறு**

தமிழகப் பாடநூல்களில் தமிழ் நாட்டைப் பற்றியோ, தமிழர் களைப் பற்றியோ வரலாறு இல்லாதது கண்டு பெரியார் கவலை யடைகிறார். இராமாயணம், மகாபாரதம், அசோகன் -மவுரிய ஆட்சி, முஸ்லீம் - வெள்ளையர் ஆட்சி முதலியவை பாடங்களாகக் காணப் படுகிறதே ஒழிய, சேர, சோழ, பாண்டியர்களைப் பற்றியோ, திராவிட - தமிழர் ஆட்சி பற்றியோ காண்பது மிகவும் அரிதாக இருக்கிறது என்கிறார். நமது சரித்திர ஆய்வு குறித்து

> ''தமிழ் நாட்டுக்குச் சரித்திரமே இல்லை. இந்து தேச சரித்திரம் என்பதை எடுத்துக் கொண்டால் இராமாயண பாரதமும்.

அசோகன்-மவுரியன் ஆட்சியும். முஸ்லீம், வெள்ளையர் ஆட்சியும்தாம் விளக்கப்படுமே ஒழிய சேர, சோழ, பாண்டியரைப் பற்றியோ, திராவிடர் - தமிழர் ஆட்சியைப் பற்றியோ காண்பது மிகவும் அரிதாகும். அவை எந்த வகுப்புக்கும் பாடமாக இல்லை, அப்படி ஏதாவது எங்காவது காணமுடிந்தால் அதில் பெரும் பித்தலாட்டமும், மோசடியும்தாம் காணப்படலாமே தவிர யோக்கியமாய் சரித்திர ஆதார முறையாகக் காண்பதற்கு இடமே இல்லை." 12

என்றெழுதுகிறார். இதற்குக் காரணம் தமிழர்களுக்கு மான உணர்ச்சி, நாட்டுப்பற்று இல்லாமையே என்கிறார். தமிழர்களின் முற்போக்கைத் தடுக்கக் கூடிய பொருள் பொதிந்த பாடங்களே மாணாக்கர்க்கு வைக்கப்படுகிறது. இதனால் மாணாக்கர் எதிர்காலம் இருள்படர்ந்து உண்மையை அறியமுடியாமல் போகவே வழிவகுக்கும் என்கிறார்.

பாடப்புத்தகக் குழுவையும், அதில் இடம் பெற்றுள்ள தமிழர் களையும் உணர்ச்சி வசப்பட்டுப் பெரியார் சாடுகிறார்.

"பாடப்புத்தகக் கமிட்டியில் உள்ள தமிழர்களுக்கு மான உணர்ச்சி, நாட்டு உணர்ச்சி இருக்குமானால் இராமாயண பாரதக் கதைகள் சரித்திரத்திலும் வசனப் பாடத்திலும் சேர்க்க சம்மதிப்பார் களா? பண்டிதர்கள், உபாத்தியாயர்கள், தமிழ்ச் செல்வர்கள் இக் குறைகளை எடுத்துக் காட்டுவதற்காக நம்மீது பாய்கின்றார்களே தவிர, புராண இதிகாசங்கள் அதுவும் தமிழர்களுக்குச் சம்பந்த மில்லாததும் தமிழர்களுக்கு இழிவைத் தரக்கூடியதும், தமிழர் முற்போக்கைத் தடுக்கக் கூடியதும், பகுத்தறிவுக்கு ஒவ்வாதது மான விஷயங்கள் கொண்ட இதிகாசங்கள் சமய ஆதாரங்கள் போலவும், புண்ணிய சரித்திரங்கள் போலவும் நம் குழந்தை களுக்குக் கற்பிக்கப்படுவதைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை." 13

என்பது பெரியார் கருத்து.

தமிழர்களுக்குச் சம்பந்தமில்லாததும், இழிவைத் தரக்கூடியது மான பாடங்களைப் பாடப்புத்தகக் குழுவில் உள்ள தமிழர்களாவது இன உணர்ச்சியோடு எதிர்த்துக் குரல் கொடுக்கக் கூடாதா எனக் கேட்டுத் தமிழர்களுக்கு வரலாறு வேண்டும் என வாதாடுகிறார்

**தன்மானம்**

தமிழர்களுக்குத் தொடர்பில்லாத பாடங்களையும், தமிழர்களுக்கு இழிவைத் தரக்கூடிய பாடங்களையும் கண்டு எதிர்த்தப் பெரியார் பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்குத் தன்மானக் கல்வியைத் தரவேண்டும் என்கிறார்.

''பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு முதலில் தன்மானக் (Self Respect) கல்வியைத் தரவேண்டும். சமத்துவக் கல்வியைத் தரவேண்டும். மனிதர்களின் நடத்தைகளைக் கண்டறியும் உளவியல் சிந்தனைகள் நிறைந்த கல்வியைத் தரவேண்டும். அதுபோல மதிப்புமிக்க பதவி, புகழ், நற்பெயர் போன்றவற்றை எப்படிக் காப்பாற்றிக் கொள்வது என்பதை மாணவர்களுக்குக் கற்பிக்கவேண்டும். அனைவரிடத்திலும் அன்புகாட்டுவதோடு அவர்களைச் சமமாக மதிக்கவேண்டும். உலகம் முழுவதும் வாழும் மக்கள் அனைவரும் உடன் பிறப்பு என்ற உணர்வை ஊட்ட வேண்டும். நாட்டுப்பற்று மிக்கவர்களாக மாணாக்கரை உருவாக்க வேண்டும்." (To Start with, you must teach Children What self-respect is you must first teach the children what may actions are, You must teach things to make them safeguard their dignity, honour and prestige. Teach them to live with equality. Teach them to be kind towards all. They must be taught to be patriotic.) 14

என்று தன்மானக் கல்விக்கு விளக்கம் தருகிறார் பெரியார். இத்தகைய பண்புகளைத் தரும் கல்வியே வேண்டும் எனப் பெரியார் விழைவதை அறிய முடிகிறது. மேலும், இக்கல்விதான் உலக அரங்கில் தமிழர்களை உயர்த்தும் என்கிறார். இதனை விடுத்து

"நாய்க்கு நாலுகால், பூனைக்கு வாலுண்டு, குருடர்களுக்குக் கண்கள் இல்லை." ("What are we going to gain by merely tutoring

children, that a dog has four legs, a cat has a tail, the blind have no eyes, Do not steal, do not beat and so on. All these things the children could learn by themselves, without the help of a teacher".)15

எனப் பாடம் சொல்லித் தரவேண்டியதில்லை என்கிறார். மாணாக்கர் அதனைத் தானே தெரிந்து கொள்வார்கள். எனவே தன்மானக் கல்வி தான் மாணாக்கர்க்குத் தேவை. அதுதான் மனிதனை, மனிதனாக மதிக்க வழி செய்கிறது. மனிதனை மற்ற விலங்குகளிலிருந்து பிரித்துக் காட்டுகிறது. அனைவரிடமும் அன்பு, சமத்துவம், சகோதரத் தவம் போன்றவற்றை உருவாக்குகிறது. எனவே தன்மானக் கல்வியே முதலில் மாணாக்கர்க்கு அளிக்கப்பட வேண்டும் என்கிறார்.

**அறிவியல்**

பாடத்திட்டத்தின் தரத்தை உயர்த்துதல். சிறப்பாக்குதல் ஆகிய வற்றின் வழியேதான் கல்வியின் தரத்தை உயர்த்திக் காப்பாற்ற இயலும் பாடத்திட்டமானது காலத்திற்கேற்ப அவ்வப்போது மாற்றியமைக்கப் படுவதோடு அதன் தரமும் காப்பாற்றப்பட வேண்டும். இன்றைய உலகில் அறிவியல் துறையிலும் அறிவுத்துறையிலும் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகளும் முன்னேற்றங்களும் நமது பாடத்திட்டத்தில் இடம்பெற வேண்டும். அப்போதுதான் நம் கல்வியின் தரம் பிற நாடுகளின் கல்வி வளர்ச்சிக்குச் சமமாக இருக்குமென்று பெரியார் கருதினார். மேல்நாட்டுக்காரர்களின் நிலையையும், நம் நாட்டுக்காரர்களின் நிலையையும், பின்கண்டவாறு பெரியார் குறிப்பிட்டுள்ளார்.

"மேல் நாட்டுக்காரர்கள் படித்து அறிவின் காரணமாகப் புதுப் புது விஞ்ஞான சாதனங்களை, அதிசய அற்புதங்களைக் கண்டுபிடிக்கிறார்கள். நமது நாட்டில் படித்தவர்கள் முட்டாள் தனமாகக் கோவில் குட்டிச் சுவர்களைக் கட்டிக்கொண்டு இருக்கிறார்கள்."16

என நம் நாட்டினரைச் சாடியுள்ளார்.

கல்வியானது அறிவின் சார்புடையதாக இருக்கவேண்டும். புதுப்புது அறிவியற் கருவிகளையும், அதனால் மக்களுக்குப் பல்வேறு பயன்களையும் உருவாக்கித் தரவேண்டும். அப்படி இல்லாமல் கோவில்களைக் கட்டுவதால் யாதொரு பயனும் இல்லை என்கிறார். மேலும் பாடத்திட்டத்தைப் பற்றி

''மத சம்பந்தமான கொள்கைகள், அபிப்பிராயங்கள் முதலியவை எல்லாம் அந்தக் காலத்திய உலக நிலை அறிவு நிலை ஆராய்ச்சி சவுகரிய நிலை. கல்வி நிலை ஆகியவற்றுக்கு ஏற்றவையாக இருக்கும். ஆதலால், அவை இந்தக்கால அறிவு, ஆராய்ச்சி. சவுகரியம் முதலியவற்றுக்கு இருக்கமுடியாது. இந்தக் குறைபாடானது உலகத் தோற்றத்தில் - மனித வாழ்க்கையில் ஒவ்வொரு தன்மையிலும் இருக்கவேண்டிய தாகிவிட்டது. ஆகையால், கல்வியும் மதமும் கலந்தால் அறிவு சூன்யமாக வேண்டியதே தவிர வேறில்லை."17

எனக் குறிப்பிடுகிறார்.

கல்வியோடு மதம் கலந்தால் அறிவியல் அறிவு சூன்யமாகி விடும். எனவே, பாடத் திட்டங்களில் அறிவுப் பூர்வமான, அறிவியல் பூர்வமான ஆராய்ச்சி பூர்வமான பாடப்பொருள்கள் இடம்பெற வேண்டும் என்கிறார். மனிதனுக்குக் கல்வியின் அவசியமெல்லாம் மனிதன் தன் அறிவை வளர்க்கவும், அவ்வறிவால் தான் இன்புறவும், பிறரை இன்புறச் செய்யும் தன்மை ஏற்படவும் அனுகூலமானதாக இருக்க வேண்டும் என்கிறார். எனவே, அறிவியல் பூர்வமான சிந்தனைகளையும், பயனையும் இன்பத்தையும் உண்டாக்கவல்ல கல்வி அவசியம் எனப் பெரியார் கருதுகிறார்.

**தொழில்**

வரலாறு, தன்மானம், அறிவியல் பாடத்திட்டங்களோடு தொழில் கல்வியும் பாடங்களில் சேர்க்கவேண்டும் இக்கல்வி மிக மிக இன்றியமையாதது என்கிறார். இதனைப் பெரியார்

''ஒரு சமூகத்திற்குச் சுயமரியாதை வேண்டுமானால் தொழிற் கல்விதான் மிக்க அவசியமானது."18

எனக் கூறுகிறார்.

தொழிற்கல்விதான் அவனுக்கு உயர்வை அளிக்கிறது. எனவே ஏட்டுக் கல்வியோடு, தொழிற்கல்வியும் வழங்கப்படவேண்டும். தொழிற்

கல்விதான் இன்றைய சூழலில் நாட்டிற்குத் தேவை என்பதைப் பின்வருமாறு வலியுறுத்துகிறார்.

"இன்றைய படிப்பு முறையால் நாமே பிள்ளைகளைக் கெடுக்கி றோம். நமது தொழிற் பயிற்சி, பயன் பெறாமல் போனதற்குக் காரணம் தொழில் பழக 'எஸ். எஸ். எல். சி.' படித்திருக்க வேண்டும் என்பதேதான். ஆகையால். எழுத்துக் கோப்பது. கொல்லத்து வேலை, தச்சு வேலை, கார் ஓட்டுவது, இயந்திரங் களைக் கையாளும் வேலை முதலியவற்றைப் பிள்ளைகளின் பன்னிரண்டு வயது முதற்கொண்டு கற்றுக்கொடுக்க வேண்டும். மாணவர்களைத் திருத்தவும், அவர்களை உலகுக்குப் பயன் படவும் இதுதான் தக்க மார்க்கமாகும்." 19

என்பது அவர் கருத்து.

தொழிற் பயிற்சியில் பயன்பெறாமல் போனதற்குக் காரணம் நாம் குறிப்பிட்ட படிப்புவரை படித்திருந்தால் மட்டுமே தொழிற் பயிற்சி பெறலாம் என்ற கல்வித் தகுதிதான் என்கிறார். தொழிற் பயிற்சி. பயன்பட வேண்டுமானால் கீழ்வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு அதாவது பன்னிரண்டு வயது நிரம்பிய அனைவருக் கும் தொழிற் பயிற்சி வழங்கப் பாடத்திட்டங்களில் வழிவகை செய்யவேண்டும் எனக் கருதுகிறார். கல்வியறிவோடு கூடிய தொழிற் கல்வி வேண்டுமே தவிர, அதற்கு உயர் கல்வியைத் தகுதியாக்கக் கூடாது என மேலும் அவர் அறிவுறுத்துகிறார்.

**ஆசிரியர்**

கல்விச் செயல் முறையில் ஆசிரியரது பணி இன்றியமையாத தாகும். கல்வியின் நோக்கங்களையும், குறிக்கோள்களையும் பள்ளியில் நடைமுறையில் செயற்படுத்தவதே ஆசிரியருடைய பணியாகும். சிறப்பான சூழ்நிலையைப் பள்ளியில் உருவாக்குவதன் மூலம் மாணாக்கர் ஆளுமையினை வளர்த்துக் கொள்ள காரணமாக இருப்பவர்கள் ஆசிரியர்கள். எனவே, தம்மிடம் கல்வி பயிலும் குழந்தைகளது இயல்புகள், நடத்தை முறைகள், வளர்ச்சி, நிலையான தேவைகள், குறிப்பிட்ட வளர்ச்சியில் பொதுவாகக் காணப்படக்கூடிய பண்புகள் ஆகியன பற்றிய அறிவு ஆசிரியர்க்கு இன்றியமையாத தாகும். தமது பணிகளைச் சிறப்பாக ஆற்றுவதற்கு அவர்களுக்குப் பல இன்றியமையாப் பண்புகள் இருத்தல் வேண்டும். இப்பண்புகள் இயற்கையாகவே சிறப்புமிக்க ஆசிரியர்களிடம் காணப் பெறுவனவா அல்லது பயிற்சி, அனுபவம் ஆகியவற்றின் விளைவாக அவர்களிடம் அமைகின்றனவா என்பது சர்ச்சைக்குரிய ஒரு வினாவாகும். எனினும், இப்பிரச்சினையை நன்கு ஆராய்ந்தால், ஆசிரியப் பணிக்கு இன்றியமையாத பல பண்புகளைப் பயிற்சி. அனுபவம் ஆகிய வற்றினின்றும் ஆசிரியர் பெறவியலும், எனவே பயிற்சி, அனுபவம் இரண்டும் ஓர் ஆசிரியருக்கு இன்றியமையாத பல்வேறு நற் பண்புகளை நல்குகின்றன.

இத்தகைய பயிற்சி, அனுபவம் இரண்டும் உடைய ஆசிரியர்கள் மதத்தால் ஈர்க்கப்படுகிறபொழுது, தனது இயல்பினை இழந்து மூட நம்பிக்கையில் மூழ்குகிறார்கள் எனப் பெரியார் வருந்துகிறார்.

"ஒரே ஆசாமி வான சாஸ்திரியாய் இருந்து பாடம் கற்பிக்கும் பொழுது பூமியின் நிழலால் சந்திரன் மறைக்கப்படுகிறதென்றும், மத சாஸ்திரியாய் இருந்து பாடம் கற்பிக்கும்போது சூரியன் சந்திரன் என்கின்ற தேவர்களை இராகு, கேது என்ற பாம்புகள் விழுங்குகின்றன என்றும் சொல்வான். இது மாத்திரமல்லாமல் வான சாஸ்திரியாய் இருந்து சூரியகிரகணத் தன்மையைப் பிரத்தியட்சப் பாடமாகச் சில சாதனங்களைக் கொண்டு பிள்ளை களுக்குப் பாடம் கற்பித்துவிட்டு, வீட்டுக்குப் போனவுடன் இராகு. கேது என்கின்ற பாம்புகள் விழுங்குகின்றன என்பதற்குத் தகுந்தபடி 'தோஷப் பரிகாரத்திற்கு' ஸ்நானம் செய்யவும், தர்ப்பணம் செய்யவும் சங்கல்பம் செய்து கொள்ளவும், சாந்தி செய்யவுமான காரியத்தில் ஈடுபடுகிறான்." 20

எனக் குறிப்பிடுகிறார்.

ஆசிரியர்கள் அறிவியல் உண்மைகளைக் கண்டு மாணாக்கர்க்குத் தெளிவுபடுத்த வேண்டும். அதற்கான சோதனைகளை மாணாக்கர் முன் நிகழ்த்திக் காட்டி அவர்களது அய்யப்பாடுகளைக் களைய வேண்டும். அதனை விடுத்துத் தோஷப் பரிகாரம், ஸ்நானம்

தர்ப்பணம் சாந்தி செய்வதெல்லாம் மேலும், மேலும் மாணாக்கர்க்கு அறியா மையை உருவாக்குமே தவிர அறிவினை உருவாக்காது. ஆகவே ஆசிரியர். அறிவின் வழி நின்று மாணாக்கரின் அறியாமையை அகற்ற முற்படவேண்டும் எனப் பெரியார் கருதுகிறார். மேலும் ஆசிரியர்கள் மதச் சார்பற்றவராகவும், பகுத்தறிவாளராகவும், தொழிலாளியாகவும், மாணாக்கர்க்கு நல்ல நண்பராகவும் இருக்க வேண்டுமெனப் பெரியார் கருதுகிறார்.

### மதச் சார்பற்றவர்

இன்றைய ஆசிரியர்களில் பலர் சுயசிந்தனையோ, பகுத்தறிவுச் சிந்தனையோ துளியும் இல்லாமல் மதம் என்னும் உலோகத்தால் உருக்கி உருவாக்கப்பட்ட உருவங்களாக உள்ளார்கள். இவர்களால் கல்வியில் புதுமைகளைக் காண இயலுமா என்று பெரியார் சிந்திக் கிறார். அச்சிந்தனையினை.

> "நமது கல்வி போதகர்கள் எல்லாம் மதத்தின் சாக்கினால் மேன்மையடைந்து வருகின்றவர்களாகவே ஏற்பட்டு மதம் என்னும் உலோகத்தால் ஒரே அச்சில் உருவாக்கப்பட்ட உருவங்களேதாம் இன்று பெரிதும் உபாத்தியார்களாக இருக் கின்றார்கள். இம்மாதிரி உபாத்தியார்களிடம் படிக்கும் பிள்ளை களுக்குக் கல்வியினால் எப்படி அறிவும், சுதந்திர அறிவும் உண்டாக்க முடியும்?" 21

என்று வினா எழுப்புகிறார் பெரியார்.

மாணாக்கர்க்கு ஆசிரியர் பாடம் கற்பிக்கும் பொழுது மதச்சார் பற்று, சுதந்திரமாகவும், அறிவு வழியிலும் கற்பிக்கவேண்டும். அப்பொழுதுதான் மாணாக்கர் அறிவுடையவர்களாக விளங்குவார்கள். இத்தகைய பணியினை ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டும் மாறாக மதத்தின் வழிநின்று கற்பிக்கும் பொழுது எதிர் விளைவுகளே உருவாகும். ஆதலால் அறிவு வழியே ஆசிரியர்கட்குச் சிறந்த வழி என்கிறார்.

### பகுத்தறிவாளர்

ஆசிரியர்கள் மதச்சார்பற்றவராக இருப்பதோடு பகுத்தறிவாளராக வும் இருக்க வேண்டும் என்கிறார் பெரியார். மாணாக்கர்க்குச் சரித்திர அறிவினைத் தர மறுக்கும் பாடங்களை நடத்தும் ஆசிரியர்கள் அப்பாடங்களில் மறைக்கப்பட்டு உள்ள வரலாறுகளை மாணாக்கர்க் குப் பகுத்தறிவுடன் எடுத்துரைக்க வேண்டும். இதுபற்றி அவர்.

> "நமது கல்வியின் ஜீவ நாடி எல்லாம் இலட்சியத்திலும், போதனா முறையிலும் தாம் இருக்கும். உபாத்தியாயர்கள் பகுத்தறிவாளர் களாய் இருக்கவேண்டும்: அறிவின் முடிவின்படி நடப்பவர்களாய் இருக்க வேண்டும்." 22

என்கிறார்.

ஆசிரியர்கள் மாணாக்கர்க்குக் கண்மூடித்தனமான செய்திகளை அறவே பதிய வைக்கக்கூடாது. எதனையும் மனப்பாடம் செய்து ஒப்புவிக்கச் சொல்லக் கூடாது. மாணாக்கரிடம் பகுத்தறிவினை வளர்க்கத் தவறிவிடும். ஆதலால், ஆசிரியர்கள் அறிவின் முடிவின் படி நடப்பவர்களாகவும், பகுத்தறிவாளர்களாகவும் இருத்தல் வேண்டும் என எண்ணுகிறார்.

### தொழிலாளி

ஆசிரியர்கள் மதச் சார்பற்றவர்களாகவும், பகுத்தறிவாளர்களாக வும் இருப்பதுடன் நல்ல தொழிலாளர்களாக, பாடம் கற்பிப்பவர்களாக இருக்க வேண்டும் என்கிறார். தொழிலாளர் பற்றிய அவருடைய கருத்தை நோக்குவது சிறப்பாகும்:

> ''தற்கால ஆசிரியர்கள் என்கிறவர்கள் ஒருவிதத் தொழிலாளிகளே. சீவனத்திற்காக வேலையோ. கூலியோ செய்கிற மக்களைப் போல் வயிற்றுப் பிழைப்புக்காரர்களே அல்லாமல் உண்மையான ஆசிரியத் தன்மை உடையவர்கள் அல்லர் என்பதே என் அபிப்பிராயம்." 23

இது தொழிலாளர் நிலையை விளக்குவதாக உள்ளது. ஆசிரியர்கள் வயிற்றுப் பிழைப்புக்காகப் பாடம் நடத்தாமல் ஆசிரியத் தன்மை யுடன் இருக்கவேண்டுமெனக் கருதுகிறார். கூலிக்காகத் தொழிலினை மேற்கொள்ளும் மக்களைப் போன்றவர்கள் அல்லர் ஆசிரியர்கள். மாணாக்கரின் எதிர்காலத்திற்காக தன்னலமற்று உழைக்கும் மெழுகு வர்த்திகள் எனக் கருதுகிறார். சமுதாய மாற்றத்தை

மாணாக்கர்வழி உருவாக்க நினைக்கும் ஆசிரியர்கள் பொதுநல நோக்கோடு உண்மையாய் உழைக்க வேண்டும் அதுதான் ஆசிரியப் பெருந்தகை கட்குச் சிறப்பு எனப் பெரியார் கருதுகிறார்.

### வழிகாட்டி

ஆசிரியர் மதச்சார்பற்றவராகவும், பகுத்தறிவாள ராகவும், தொழிலாளராகவும் இருப்பதோடு, அறிவாளியாகவும் வழி காட்டி யாகவும் இருக்க வேண்டுமெனப் பெரியார் விழைகிறார். இதனை அவர் குறிப்பிடும் பொழுது,

> "ஆசிரியர்கள் தாங்களே வழிகாட்டிகளாக விளங்கவேண்டும். அவர்கள் இனக்காழ்ப் புக்குப் பலியாகாதவாறு உள்ள உணர்வுகளைப் பக்குவப்படுத்திக் கொண்டு மேலும் உழைத்தால் சமூக மாற்றம் உருவாவது எளிதாகிவிடும்." 24

என விளக்குகிறார்.

தமிழர் திராவிடர் வரலாறு இடம் பெறவில்லை என்பது திட்ட மிடப்பட்டுச் செய்யப்பட்ட இருட்டடிப்புக்கு எதிர்க்குரல் கொடுத்த தாகும். இணக்கமான சூழ்நிலையில் இயல்பாகக் கல்வி பயிலும் பொழுது இனக்காழ்ப்புக் கூடாது என்கிறார். ஆசிரியர்கள் மூலம் சமுதாய மாற்றம் நிகழவேண்டுமானால் இனக்காழ்ப்புக்குப் பலியாகாதவாறு இருக்கவேண்டும். மேலும் அவர்கள் மிகச் சிறந்த வழிகாட்டிகளாக இருக்கவேண்டும் எனப் பெரியார் விழைகிறார். இவ்வாறு இருப்பார்களேயானால் சமுதாய மாற்றம் நிகழும், மதச் சார்பற்ற இனச் சார்பற்ற ஒரு சமுதாயம் உருவாகும் எனக் கருதுகிறார்.

### மாணாக்கர்

கல்வியின் இறுதி நோக்கங்களை எய்துவதற்கு ஆசிரியர் மாணாக்கர் தொடர்பு இன்றியமையாதது. பயனுள்ளதும் சிறப்பு மிக்கதுமான ஆசிரியர் - மாணாக்கர் உறவு எத்தன்மையதாக இருக்கவேண்டும் என்பதைச் சொற்களால் எடுத்துக்கூறுவது சிறிது கடினமாகும். வகுப்பறை. பள்ளி ஆகியவற்றில் பரவியுள்ள சூழ்நிலையின் இயல்பிலிருந்து ஆசிரியர் - மாணாக்கர் உறவின் பண்பினை நம்மால் உணரமுடியும். நல்லமுறையில் இவ்வுறவு அமையவேண்டுமாயின் எதிரிடையான இரு தீவிர நிலைகளை இது தவிர்ப்பதாக அமைதல் வேண்டும்.

> ''ஆசிரியர் ஆதிக்க மனப்போக்குடன் மாணாக்கரிடம் நடந்து கொள்ளக்கூடாது. இதேபோல் மாணாக்கரது போக்கிற்கு முழுமையாகத் தாம் வளைந்து கொடுப்பதும் கூடாது." 25

எனப் பால்ராஜ் கூறுவது ஈண்டு நோக்கத்தக்கது.

வெறும் ஆதிக்க மனப்போக்குடன் மாணாக்கரிடம் நடந்து கொள்ளும் ஆசிரியரின் தொடர்பு பயனுள்ளதாக அமையாது. மேலும் மாணாக்கரது சொற்படியெல்லாம் ஆசிரியர் செயற்படுவதோ அவர்களது போக்குக்கு ஏற்றபடி முழுமையாக வளைந்து கொடுப்பதோ நல்ல ஆசிரியர் -மாணவர் தொடர்பினை உருவாக்க உதவாது. இவ்விரு நிலைகளுக்கும் இடைப்பட்டதாக அது அமையவேண்டும். மாணாக்கருடைய உணர்ச்சிகளைப் புரிந்துகொண்டு, பரிவுடன் அவர்களது நடத்தையினைக் கவனித்து. மாணாக்கருடைய ஒத்துழைப்பினைப் பெற ஆசிரியர் முயலுதல் வேண்டும். பரிவு நல்லுறவுக்கு ஆதாரமாகும். இது தன்னம்பிக்கை, மனவுறுதி, திறமை, ஆர்வம் பொறுப்புணர்ச்சி போன்றவற்றினின்று எழுவதாகும். இத்தகைய பரிவு, காப்புணர்வினை (Security) அளிக்கும்; சீரிய ஆசிரியர் - மாணாக்கர் உறவினைத் தோற்றுவிக்கும்.

ஆசிரியர் - மாணாக்கர் உறவில் கல்வி பயிலும் மாணாக்கரிடம் ஆக்கத்திறன் (Creativity), கேள்வி கேட்கும் பழக்கம் தேர்வுப் பயமின்மை, அரசியல் சார்பின்மை முதலியன இடம்பெறவேண்டும் என அவர் கருதுகிறார். மாணாக்கரிடம் இத்தன்மைகள் இயல்பாக அமையுமானால் சிறப்பு மிக்கவர்களாக விளங்குவார்கள் எனக் கருதினார். மாணாக்கரைப் பார்த்துக் கேள்வி கேட்கும் ஆசிரியர் நிலைமாறி ஆசிரியரைப் பார்த்து மாணாக்கர் கேள்வி கேட்கும் பழக்கம் உருவாகவேண்டும். மேலும் மாணாக்கர் புதிதாகப் புனைந்து தானாகக் கண்டுரைக்கும் ஆற்றல் மிக்கவர்களாகவும் இருத்தல் வேண்டும். இப்படிப்பட்ட ஆற்றலுடைய கல்விதான் சிறப்பானதாகும் என்பது அவர் கருத்து.

### ஆக்கத்திறன்

மாணாக்கர் புத்திக் கூர்மையுடையவர்களாக. சமயச் சார்பற்ற வர்களாக இருந்தால் மட்டும் போதாது. அறிவுக் கூர்மையினைப் பயன்படுத்திப் பயன்மிக்கப் படைப்புகளை உருவாக்கித் தர வேண்டும் என்கிறார். இதனை அவர்,

> "புதிதாகப் புனைந்து, தானாக நினைத்து எதனையும் கண்டுரைக் கும் சொந்தச் சிந்தனையைச் சுரக்க வைக்கும் ஆற்றலாகக் கல்வி அமையவேண்டும்." 26

என்று குறிப்பிடுகிறார். அவர் இவ்வாறு குறிப்பிடக் காரணம் மாணாக்க ரிடம் தன்னம்பிக்கை வளர்க்கவேண்டும். ஒன்றினை உருவாக்க வல்ல ஆற்றல் மாணாக்கர்பால் உருவானால் எதிர்காலத்தில் எதனையும் படைக்கும் ஆற்றல் மாணாக்கரிடம் உருவாகும் என்பதுதான்.

### கேள்வி கேட்டல்

1925ஆம் ஆண்டில் ஆசிரியர்கள் மாநாட்டில் தந்தை பெரியார் சொற்பொழிவாற்றிய பொழுது அவர் கூறிய கருத்து இவண் நோக்கத் தக்கதாகும். பெரியார்.

> "கல்விமுறை எப்படி இருக்கவேண்டும் என்றால், மாணவர் களைப் பார்த்து ஆசிரியர்கள் கேள்வி கேட்பதைவிட ஆசிரியர்களைப் பார்த்து மாணவர்கள் கேள்வி கேட்கவேண்டும். நூலகம் மற்ற அமைப்புகளின் மூலம் மாணவர்கள் படிக்க வேண்டும். இதிலே அவர்களுக்கு ஏற்படுகின்ற அய்யங்கள் இடர்ப்பாடுகள் இவற்றை அவர்கள் ஆசிரியரிடம் கேட்க வேண்டும்." 27

என்று கூறுவது எண்ணத்தக்கது.

அனைத்துத் துறைகளிலும் மாற்றம் அவசியம் எனக் கருதிய பெரியார் கல்வியிலும் மாற்றம் தேவை என்கிறார். வழிவழியாக நாம் கடைப்பிடித்து வரும் நம்பிக்கைகளில் நம்பிக்கை வைக்காமல் வழிவழியாக மாணாக்கரைப் பார்த்துக் கேள்வி கேட்ட ஆசிரியர் களிடம், தனக்கு ஏற்படும் அய்யங்களை, மாணாக்கர் கேட்பதே முறையாகும் என்கிறார். இம்முறையில் அவர் சிந்தித்தமை, கல்வியியல் சீர்திருத்தப் புதுமையாகும்.

### மனப்பாடம்

இவ்வாறு ஆக்கத்திறனும், கேள்வி கேட்கும் திறனும் உடைய மாணவர்களுக்கு மனப்பாடம் செய்தல் தேவையற்றது எனப் பெரியார் கருதுகிறார். பள்ளி, கல்லூரிகளில் உருப்போட்டு ஒப்புவித்தலே கல்வி எனக் கருதலாகாது என்கிறார். உருப்போட்டு ஒப்புவித்தலைத் தேர்வில் எழுதித் தேர்ச்சியடைந்துவிட்டால் பல்கலைக் கழகம் பட்டம் கொடுப்பதை அவர் ஏற்கவில்லை.

> "உருப்போட்டு ஒப்புவிப்பதென்பதே எந்தப் படிப்புக்கும் பரிட்சை முறையாக இருக்கக் கூடாது. அப்படியானால் அர்ச்சகனும், புரோகிதனுமே தாம் ஒப்புவிக்க முடியும்."28

என்பது அவர் கருத்து. மேலும் குறிப்பிடும் பொழுது.

> "பகுத்தறிவும். உடல் சக்தியும், உலக ஞானத்திறமையும் இயற்கை நற்குணமும் முக்கிய பரிட்சையாக இருக்கவேண்டும். அந்தப் பரிட்சையும் உத்தியோகம் கொடுக்கப்படும் காலத்தில் தான் பரிட்சிக்கப்படவேண்டுமே ஒழியப் பள்ளிக்கூடத்தில் ஒவ்வொரு வருடமும் பரிட்சை (என்பது) தேவையில்லாததாகும். பரிட்சை மூலம் மக்களைப் பள்ளியில் மேல் வகுப்புக்குச் செல்லவிடாமல் கழிக்கக் கூடாது நிறுத்தக் கூடாது" 29

என்றும் விளக்கியுள்ளார்.

தேர்வினால் மாணாக்கர்க்குத் தேவையற்ற அச்சமும், தாழ்வு மனப்பான்மையும் உருவாகும். எனவே தேவையில்லாமல் ஒவ்வொரு வருடமும் தேர்வினை வைத்து மாணவர்களை மேல்வகுப்பிற்குச் செல்லவிடாமல் தடைசெய்தல், பயத்தினை உருவாக்குதல் போன்ற கேடுகளை உருவாக்க வேண்டாம் எனக் கருதுகிறார். ஆனால், இவர் கூறும் தேர்வுமுறை, பணிகளில் அமர்த்த மட்டுமே பொருந்தும் என்றாலும், அவரது நுண்ணோக்குப் பார்வை இன்றைய தேர்வு முறைக்கு முன்னோடியாக அமைந்துள்ளதுபோல் தோன்றுகிறது. அவர் சொல்லும் பகுத்தறிவு (Knowledge) உடல் தேர்வு (Physical Fitness) உலக ஞானத்திறமை (World Current Affairs) முதலியன இன்றைய இந்திய ஆட்சிப்

பணியில் (Indian Administrative Service) நடத்தப் படும் தேர்வு முறைகளை ஒத்துவருவது போல் உள்ளது. பிரிதொரு இடத்தில் தேர்வைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது.

"நெட்டுருப் போடுதலின் - நினைவாற்றலின் அடையாளச் சீட்டாகத் தேர்வுகள் அமையக் கூடாது." 30

என்கிறார்.

மனப்பாடம் என்ற ஒன்றினை மட்டுமே வைத்துக் கொண்டு ஒருவனை எடைபோடக் கூடாது. அதுவே திறமைக்கு அடையாள மன்று. உலக ஞானமும், உடல் திறனும், எதனையும் பகுத்தறியும் பகுத்தறிவும்தாம் ஒருவனுக்குத் தேர்வாக அமையவேண்டும் எனப் பெரியார் கருதுகிறார்.

### அரசியல் சார்பின்மை

மாணாக்கரிடம் ஆக்கத்திறன். கேள்வி கேட்டல், தேர்வு பயமின்மை முதலியன இருப்பதோடு, அரசியல் சார்பின்மையும் இருக்க வேண்டும் என்றும் அத்தோடு தானே எதையும் சிந்தித்து உணரும் பகுத்தறிவைப் பின்பற்றவேண்டும் என்றும் கூறுகிறார். அவருடைய அரசியல் சார்பின்மை தொடர்பான கருத்துக்களை இங்கு நோக்குதல் சிறப்பாகும். மாணவர்கள் பயன்படுவது குறித்து.

"நான்கூட மாணவர்களை என் கழகத்திற்கென்று எதிலும் கிளர்ச்சிகளில் கலந்து கொள்ளக்கூடாது - கல்விக்கு இடையூறாக எதிலும் ஈடுபடக் கூடாது என்று அடிக்கடி கூறுவதுண்டு. மாணவர்கள் பொதுக் காரியங்களில் சேரவேண்டாம். நாங்கள் செய்யும் போராட்டங்களில் சம்பந்தப்படக் கூடாது, அரசியல் தொடர்புடைய விவகாரங்களில் சேரக் கூடாது என்றும் கூறுவேன்." 31

என்று குறிக்கின்றார்.

மாணாக்கர் அரசியலில் கலந்து கொள்ளக்கூடாது. கல்வி கற்கின்ற காலங்களில் அவர்களுடைய கவனம் முழுவதும் கல்வியில் இருக்க வேண்டும். மாணாக்கர் கிளர்ச்சியில் ஈடுபட்டால் விளைவுகள் தீமையில்கூட போய் முடியலாம். எனவே கற்கின்ற காலம் முழுமையாகக் கல்விக்கே செலவிடவேண்டும். அரசியல் மாணாக்கர்க்கு அப்பாற்பட்டது என அவர் கருதுகிறார். அறிவே வாழ்வின் முதற்படி; அதனை மாணாக்கர் அடைவதே முறையாகும் எனக் கருதும் அவர் அதற்கு மாறான மூடநம்பிக்கைகளைத் தேவையில்லாச் சமயக் கருத்துக்களை, அறிவிற்கும் வாழ்க்கைக்கு ஒத்துவராத கண்மூடிப் பழக்கங்களை மாணாக்கர் கைவிட்டு, பகுத்தறிவுக் கண் கொண்டு கல்வி உலகைக் காண வேண்டுமென வலியுறுத்துகிறார். அவரின் கல்விச் சிந்தனை மாணாக்கர்க்கு மாமருந்து. இம்மருந்து கல்வியைப் பிடித்துள்ள சமயம் என்னும் நோயை விரட்டிப் பகுத்தறிவுக் கல்வி மலர வழிவகுக்கும் எனக் கருதலாம்.

### முடிவுரை

பெரியார், அரைகுறை தொடக்கக் கல்வி பயின்று உலகம் புகழும் அறிவாளர் ஆனார். பகுத்தறிவுப் போருக்கு எழுத்தையும், பேச்சையும் கருவியாக்கினார். கல்வியில் தடைகளை உடைத்து, பகுத்தறிவுக் கல்விக்குப் பாதையமைத்தார். ஆசிரியர் மாணாக்கர் சிந்தனைக்குச் சுதந்திரம் வேண்டுமென்றார். பாடத்திட்டக் குழுவிற்குக் கேள்விக் கணைகளைத் தொடுத்து. நேரிய பாதைக்கு இட்டுச் சென்றார். பெரியாரின் புரட்சிக் கருத்துகள் சிதைந்து கிடந்த மாணவச் சமுதாயத்தைச் சீர்ப்படுத்தின. கல்வியில் பொதுவுடைமைப் பூத்திடப் பகுத்தறிவுப் புதுப்புனலைப் பாய்ச்சினார். மூடநம்பிக்கைக்குச் சாவு மணி அடித்தார். மனித நேயம் வளர்க்க மாண்புடன் உழைத்தார். இவர் கருத்துகள் எல்லாத் துறைகளையும் தொட்டன; தொடாத துறையில்லை எனலாம். இவர் தமிழகம் தழைக்கத் தயங்காமல் கல்வியியல் சிந்தனையை வழங்கிய சிந்தனையாளராவார்.

### அடிக்குறிப்புகள்

1. எஸ்.நடராசன், கல்வி ஆராய்ச்சி ஓர் அறிமுகம், ப. 1
2. எஸ்.சந்தானம், கல்வியியல் தத்துவ சமூக அடிப்படைகள், ப. 354
3. மேலது ப. 359
4 'குடி அரசு' 1-4-1944
5. மா.நன்னன், பெரியாரியல், ப. 70

6. எஸ். சந்தானம். கல்வியியல் தத்துவ சமூக அடிப்படைகள் ப. 385
7. விடுதலை. 1-3-1956
8. பெரியார் ஈ.வெ. ரா. மொழியும் அறிவும், ப. 30
9. பெரியார் ஈ வெ. ரா. மேல்நாடும் கீழ்நாடும். ப.10
10. 'குடி அரசு' 'தலையங்கம்' 12-2-1944
11 ஔவை நடராசன். பெரியாரியல், தமிழகப் பள்ளிக் கல்வித் துறை வெளியீடு". ப.55.
12. 'குடி அரசு' 'தலையங்கம்', 12-2-1944
13. வே.ஆனைமுத்து (பதிப்பாசிரியர்) பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் தொகுதி இரண்டு, ப 1162
14. Periyar E.V.Ramasami, Reform of Education, Page-7
15. Periyar E.V.Ramasami, Reform of Education, Page - 7
16. விடுதலை. 5-5-1972
17. வே.ஆனைமுத்து (பதிப்பாசிரியர்) பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் தொகுதி இரண்டு. ப.1165
18. 'குடி அரசு' 16-1-1927
19. உண்மை. 14-12-1972
20. 'குடி அரசு' 16-1-1927
21. வே.ஆனைமுத்து, பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் தொகுதி இரண்டு. ப 1166
22. வே.ஆனைமுத்து, பெரியார் ஈ.வெ. ரா. சிந்தனைகள் தொகுதி இரண்டு. ப. 1166
23. மேலது ப. 1166
24. 'குடி அரசு' 27-5-1928
25. என்.கே.பால்ராஜ், இந்தியக் கல்வியில் இன்றைய பிரச்சினைகள், ப. 126
26. மா.நன்னன், பெரியாரியல், கல்வியில் பகுத்தறிவு ப. 45
27. ஔவை நடராசன், பெரியாரியல். 'பெரியார் காணவிழைந்த கல்வி நலம்', ப.57 (தமிழகப் பள்ளிக் கல்வித்துறை வெளியீடு)
28. கி. வீரமணி, புதிய கல்வி, ப. 8
29. மா.நன்னன் பெரியாரியல் 'கல்வியில் பகுத்தறிவு" ப.65
30. மா.நன்னன் பெரியாரியல் 'கல்வியில் பகுத்தறிவு' ப.65
31. வே. ஆனைமுத்து (பதிப்பாசிரியர்) பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் தொகுதி இரண்டு. ப. 1165

**ஆசிரியர் குறிப்பு :**

***பேரா. முனைவர் உ. பிரபாகரன்***

*இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர் (பணிநிறைவு)*

*அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை,தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 010*

**எழுதியுள்ள நூல்கள் :**

*1) பெரியார் ஈ.வெ.ரா.வின் கல்வியியல் சிந்தனைகள் (2007இல் தமிழ்நாடு அரசின் சிறந்த நூலாசிரியருக்கான விருது பெற்றது) 2) தமிழ் கற்பித்தல் (பொதுத்தமிழ்) 3) தமிழ் கற்பித்தல் (சிறப்புத்தமிழ்) 4) நடைமுறைத் தமிழ் இலக்கணம் 5) அறிவியல் தமிழ் (தமிழ்நாடு அரசு பாடநூல் நிறுவனம், சென்னை) 6) கற்பித்தலுக்கான வகுப்பறைத் திறன்கள் மற்றும் கற்பித்தல் நுட்பங்கள் 7) ஆசிரியர் கையேடு. 8) தொடக்கக் கல்வியில் தர மேம்பாடு (ஆய்வேடு) 9) கல்வி உளவியலும். பள்ளி ஆட்சிமுறையும் ( தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்) மற்றும் பதிப்பாசிரியராக பல நூல்களை வெளியிட்டுள்ளார். பல விருதுகளைப் பெற்றுள்ளார். பன்னாட்டுக் கருத்தரங்கங்கள் பலவற்றில் கலந்து கொண்டுள்ளார்.*

## *I belong to the Dravidian stock*

"I claim Sir, to come from a country, a part in India now, but which I think, is of a different stock, not necessarily antagonistic. **I belong to the Dravidian stock.**

**I am proud to call myself a Dravidian.** That does not mean that I am against a Bengali or a Maharashtrian or a Gujarati. As Robert Burns has stated, "A man is a man for all that".

I say that I belong to the Dravidian stock and that is only because I consider that the **Dravidians have got something concrete, something distinct, something different to offer** to the nation at large".

*(maiden speech in the Indian Parliament*
*– Council of States (Rajya Sabha) – April 1962)*

# Dr. C.N. ANNADURAI

Hon'ble Chief Minister of Madras State & Tamil Nadu (subsequently renamed),
Union of India (1967-69)

# மனித மாண்புகள் வளர்க்கும் மரபுக்கலைகள்



முனைவர் ஆ.அழகுசெல்வம்

**ஆய்வுச் சுருக்கம்:**

*இந்தக் கட்டுரை மனித சமூகத்தின் கல்வி முறையை ஆராய்கிறது."மனித சமூகத்தின் கல்வி முறை என்பது நிறுவனக்கல்வித்துறை (Academic) மட்டுமல்ல, ஒவ்வொரு தனி நபரும் சமூக வாழ்வியலில் இருந்து (Learning through Life) கற்பதும் ஆகும்.மனிதர்கள் எந்த ஒவ்வொன்றையும் குழுவாக (Collectiveness) இணைந்து நிகழ்த்துவதன்-வாழ்ந்து, செயல்படுவதன் வழியாகக் கற்றுக் கொள்கிறார்கள்" எனக் குறிப்பிடுகிறது.*

*மற்றும் மரபுக்கலைகளின் மேன்மையை ஆராய்ச்சி செய்து, "மரபுக் கலைகள் உடலையும் குரலையும் மனதையும் மையமிட்டு நிகழ்த்தப்பெற்று, கற்றல்–கற்பித்தலில் (Teaching–Learning), முழுமையான (Complete), நிலைத்த (Sustainable), நீடித்த (Longterm) மாற்றத்தை ஏற்படுத்தும். இவ்வாறான கற்பித்தல் செயல்த் திட்டங்கள் வழியாக, பள்ளி–கல்லூரிகளில் கற்போரின் உடல்–மன நலன்களை மாற்றுவதோடு, நடத்தையில் மாற்றத் (behavior change)தையும் உண்டாக்க முடியும்" எனச் சுட்டிக்காட்டுகிறது.*

*தமிழ் மொழியின் சிறப்பினை தமிழிசையோடு ஒப்பிட்டு நோக்குகிறது, 'உலகமொழிகளுள் சிறந்து விளங்கும் தமிழ் நீண்ட இலக்கிய – இலக்கண மரபை உடையது. செவ்வியல் தன்மையோடு பயணப்பட்ட தமிழிசை மரபை உலகம் அறியச் செய்தல் வேண்டும். வாழ்வினாலும் பண்பாட்டாலும் நாகரித்தினாலும் பெற்ற, 'எல்லாம் எல்லாருக்கும்';அனைவரும் இணையானவர்கள் (All are Equal); 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; 'என்னும் இணைக்கோட்பாடு .தமிழ் மொழியிலும் மொழிவழி அமைந்த இசையிலும் அமைந்துள்ளது" எனத் தெளிவுபடுத்துகிறது.*

*மற்றும் "மெய்(உடல்) வழி,பயிற்சிப் பட்டறைகளை நடத்தி, கற்றல் – கற்பித்தல் முறையாக, மரபிசையையும் ஆட்டக்கலையையும் நடத்துகிற பொழுது, மாணவர் சமுதாயம் தமிழ் மரபிசை – தமிழ்க்கலைகள் வழியாக, மொழியைக் கற்றுக் கொள்வார்கள். ஆட்டங்களும் இசையும் – உடலையும் மனதையும் பக்குவப் படுத்துவதால்,மொழி வளமும் உடல் நலனும் மனவளமும் பெறுவார்கள்" என ஒரு வழிமுறையை ஆராய்ந்து பார்ப்பதற்காக நமக்குக் காட்டுகிறது.*

**முன்னுரை**

மனித சமூகத்தின் கல்வி முறை என்பது நிறுவனக்கல்வி முறை(Academic) மட்டுமல்ல, ஒவ்வொரு தனிநபரும் சமூக வாழ்வியலில் இருந்து (Learning through Life)கற்பதும் ஆகும். மனிதன் ஒரு சமூக விலங்கு என்ற பொருளில், எந்த ஒவ்வொன்றையும் குழுவாக (Collectiveness) இணைந்து நிகழ்த்துவதன்-வாழ்வதன் வழியாக, செயல்படுவதன் வழியாகக் கற்றுக் கொள்கிறார்கள்.

இக்குழுமனப் பான்மையும் அனுபவமும் கற்றலை எளிமையாக்குகிறது. அது மட்டுமன்று, வாழ்வும் - செயல்பாடும் கருத்தாக மட்டும்

உடலில் நில்லாமல், நிகழ்வுத்தன்மை கொண்டதாக (Performance), செயல்பாடாக (Activity) உடலில் தங்குகிறது. உடற்செயற்பாடு, மனச் செயற்பாட்டிற்கு அடிப்படையாக அமைகிறது.

சுவரின்றிச் சித்திரம் இல்லை என்பது போல. ஆடல், பாடல், விளையாட்டுகள்,நாடகம் முதலிய உடலையும் குரலையும் மையமிட்ட நிகழ்த்துதல் செயல்பாடு, வகுப்பறைச் சூழலில், கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டில் முழுமையான (Complete), நிலைத்த (Sustainable), நீடித்த (Longterm) மாற்றத்தை மாணவர்களிடம் ஏற்படுத்தும். இவ்வாறான கற்பித்தல் செயல் திட்டங்கள் வழியாக, கற்போரின் உடல் நிலை (நலனும்)யும் மனநிலை (நலனும்) யும் மாறுவதோடு, நடத்தையில் மாற்றத் (behavior change)தையும் உண்டாக்குகிறது.இதுவே ஒரு பண்பாட்டு நடவடிக்கை (Cultural behaviour) யாகவும் மாறுகிறது. கற்றலில் இருந்து பெறும் பண்பாட்டுச் செயல்பாடு அடிப்படையிலான நடத்தை, சமுக மதிப்புமிக்க மாணவர்களை உருவாக்கும்.

## பல்லினப் பண்பாட்டுச் சூழலும் மரபுக்கலைகளின் தேவையும்

பல்லினச் சமுதாயப் பண்பாட்டுச் சூழலில், மரபுக் கலைகளின் (நாட்டுப்புறக் கலைகள்) தேவை,அவற்றின் தாக்கம், விளைவுகள் குறித்து மாணவர்கள் அறிந்து கொள்வதோடு பாடல்,ஆடல்,விளையாட்டு மற்றும் நிகழ்த்துதல் கலைப் பயிற்சிகளால் உடலும் மனமும் வளம் பெறுகிறார்கள்.

மேலும் ஆடுதல்,பாடுதல்,நாடகம் நிகழ்த்துதல் முதலிய பங்கெடுப்புகள் வழி 'கற்றலில் இனிமை' நிகழ்கிறது. நிகழ்த்து கலைகளில் பொருள்களைப் பயன்படுத்துவதால் தொடு உணர்வும் அதன் வழி அக உணர்வும் அதன் வழி மொழியைக் கற்றுக்கொள்ளும் சூழலும் உருவாகிறது; நிகழ்கிறது. எனவே,மொழி எளிமையாகவும் இயல்பாகவும் பயன்பாட்டிற்கு உரியதாகவும் மாறுவதற்கு, சமூகம் - பெற்றோர் - மாணவர் - ஆசிரியர் உறவுநிலை கொண்ட மரபுக்கலைகள் அடிப்டையாக அமைகின்றன எனலாம்.

மேலும் கற்றுக்கொள்ளும் கலைகள் குறித்த உணர்வுகளை உண்டாக்குவதன் வழியாக, மாணவர்கள் தங்களுக்குள் ஒருங்கிணைந்து, கலைகளைச் செயல்வழி ஒருங்கிணைந்து கற்கவேண்டும் என்கிற ஒத்த சிந்தனைக்கு உட்படுத்தப் படவேண்டும். மாணவர்கள் செய்து பார்த்துக் கற்றுக் கொள்வதன் வழி, கலைகளில் பாண்டித்தியம் பெறுவதன்றி, கலைச் செயற் பாட்டில் உணர்வுடன் ஈடுபடவேண்டும். அப்போது மொழி(வளர்ச்சி)யைக்கற்றுக் கொள்ள முடியும்.

மேலும், குழு மனப்பான்மை (TeamSprit), ஈடுபாடு (involvement), கடமைஉணர்வு (commitment), படைப்பாற்றல் (creativity) முதலிய பல்வேறு விழுமியங்களைப் பெறுவார்கள். விழுமியங்களைக் கற்றுப் பெறுவதன் வழி, உடல் நலமும் மனவளமும் பெற்று, சமூகத்தை வளம் மிக்கதாக மாற்றும் நல்ல குடிமக்களாக உருவாவார்கள். மக்கள்,தங்களின் வாழ்வியல் அனுபவங்களின் ஊடாகப் பெற்ற கலை வடிவங்கள் மக்களுக்காகப் பேசவேண்டும்.

மொழி - சமூகம் - வரலாறு - பண்பாடு எனப்பாய்ந்து பரிணமிக்க வேண்டும். இயற்கை -வாழ்க்கை-கலைகள்-இயற்கை எனக்' கொடுக்கல் வாங்கல்' தன்மையை அடிப்படையாகக் கொண்டு, சுழற்சி முறையாக அமையும் கலைகள், உடலையும் மனதையும் பக்குவப் படுத்துகிறது என்னும் அறிவியல் பார்வை அணுகுமுறை கற்றலை ஆழமுடையதாக மாற்றுகிறது. கலைகளைக் கற்றுக் கொள்வதில் உள்ள அரசியலைப் புரிந்துகொண்டு, மரபுக்கலைகளின் உண்மைத் தன்மையைப் புரிந்து கொள்ளும் உணர்விலிருந்து விலகி, அந்நியமாகும் தன்மையைப் புரிந்து கொண்டு, அதைப் போக்கி, கலைகள் மீதான ஈடுபாட்டை வளர்த்தெடுக்க வேண்டும். மக்கள் கலைகள் 'செவ்வியல் தன்மை (Classical Art) உடையவை' என்பதை உறுதிப் படுத்திட வேண்டும்.

செவ்வியல் கலையெனில், அது மேலோர் மரபு என்னும் எண்ணத்தை அகற்றி, சாதி, மதம், இனம், மொழி மட்டுமன்றி,தேசம் கடந்த பன்மைத்துவமும் பன்மைத்துவத்தைக் கட்டமைப்பதும் மரபுக்கலைகள் என்பது உறுதிப்படல் வேண்டும். ஆகவே, கலைச் செயல்பாடு என்பது, உலகம் தழுவிய பண்பாட்டு அடையாளமாக மாறும்; அமையும். இது மனித சமுகத்தில் பிறப்பு முதல் இறப்பு வரை ஊடும்

பாவுமாகப் புகுந்து,பரவி, விரிந்து,ஆழமாக ஊடுருவிச் செல்கிறது.மனித வாழ்க்கையில் வேரொடும் வேரடி மண்ணொடும் பிண்ணிப் பிணைந்து கிடக்கிற கலைகள்,மனித உடலையும் மனித மனத்தையும் வாழ்க்கையையும் அழகாக மாற்றுகிறது.

அது அடுத்தடுத்த தலைமுறைக்கும் சங்கிலித் தொடராய்க் கையளிக்கப் படவேண்டும். அப்போது உலகமக்கள் அனைவரும் இப்பூமித்தாயின் குழந்தைகள் என்பது உறுதியாகும்.

## தமிழும் சிறப்பும்

தமிழ், உலகமொழிகளுள் சிறந்தது என்பதற்குப் பல்வேறு சான்றுகள் உள்ளன. எழுத்தின் அமைப்பும்;உச்சரிக்கும் ஒலிப்பு முறையால் தனித்து விளங்கும் 'ழ'கரச்சிறப்பும்; பா வகைகளும்; சங்க இலக்கியங்கள் எனப்படும் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும்; அன்பின் ஐந்திணைகளாகப் பகுக்கப்பட்டுள்ள பாங்கும்; முதற்பொருள், கருப்பொருள்,உரிப்பொருள் என்ற மைய இழையில் இயங்கும் கவிதை முறையும்; இயல்,இசை,நாடகம் என்று முத்தமிழாய் 'வளர் சிறப்பு' எய்திய நிலையும்; தமிழுக்கென்றே அமைந்த தனிச்சிறப்புடையன.நீதி நூற்கள் - காப்பியங்கள் - சமய இலக்கியங்கள் சிற்றிலக்கியங்கள் தற்கால - நவீன இலக்கியங்கள் என விரிந்து,பரந்து,கால வரலாற்றைக் கடந்து நிற்கின்ற தொன்மைப் பண்பும் புதிய சொற்கள் - புதிய பொருள் - புதிய சிந்தனை வழி,நிகழ் காலத் தன்மைகளோடு ஒத்திசைந்து... வளர்ந்து... செல்கின்றபுத்தாக்கத் தனித்தன்மையும்; அறிவியல் முறையால் பரிணாமம் பெற்று அறிவியல் தமிழாயும் சிறந்து நிற்கின்றதுமான மொழி தமிழாகும்.

உலகம் முழுமையும் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று உலகம் தழுவிய, மானுடம் போற்றும் உயர்ந்த பெரும் சிந்தனை மரபை வழங்கியது தமிழாகும். தமிழ் - தமிழர்தம் மொழி, வரலாறு, கலை, இலக்கியம், பண்பாடு, அறிவியல் மற்றும் தத்துவ மரபு முதலியவற்றை உடையதாகி, உலகப்பொது நலன்வேண்டி நிற்பதாகும். இதனைஉலகப் பொதுமறையாம் வள்ளுவம் எடுத்துக் கூறி, எந்நூலுக்கும் முதல் நூலாய் நின்று வழி காட்டுகின்றது. உலகம் முழுமையும் எட்டுத்திக்கும் சென்று, பரந்து, இருந்து, வாழ்வாங்கு வாழ்கின்ற தமிழ்ச்சான்றோர் பெருமக்கள், தமிழை-மொழியை- அதன் சிறப்பை - தமது நேரிய வாழ்வியல் முறையால், வாழ்தலின் வழி தொடர்ந்து பாதுகாத்து வருகின்றனர்.

தம் வாழ்வியல் அடையாளங்களுள் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்றாய் முத்தமிழைக் கருது கின்றனர். இயல், இசை,நாடகம் என்று அமைந்த தமிழின் பெருஞ்சிறப்பைப் போற்றிப் பாதுகாத்து,அடுத்த தலைமுறையினருக்கும் கொண்டு செல்லும் நோக்கத்தோடு "என்கடன் பணிசெய்து கிடப்பதுவே" எனத்தொண்டு செய்து வருகின்றனர்.

இன்றையச்சூழலில் நவீனத்தொழில் நுட்பங்களோடும் தொழிற்கருவிகளோடும் இணைந்து - சேர்ந்து வளர்த்தலின் மூலமே தமிழை அடுத்தடுத்து வரும் தலைமுறையினரின் நீண்டகாலப் பரப்பிற்குள் பயணிக்கச் செய்யமுடியும் எனக் கருதிப் பணி செய்கின்றனர்.

முத்தமிழின் தொல்மரபில் இசைத்தமிழுக்குத் தனிச்சிறப்பு உண்டு.இயற்றமிழும்நாடகத்தமிழும் இசையாய்.. இசைப்பயனாய்.. அமைபவையாகும். தமிழர்தம் ஆதிஇசை மொழியப்பட்டபோது, மக்களிசையாய் இருந்தது. மரபிசையாய் வளர்ந்தது.இயற்கையின் பாற்பட்ட வாழ்க்கையின் விளைபொருளாய் இசை உருவாகி, வளர்ந்து.. சிறந்து.. வளர்ந்தது. மக்களிசை, நாட்டார் இசை, மரபிசை என்றெல்லாம் பெயர்பெற்று, செவ்வியல் தன்மையோடு பயணப்பட்ட தமிழிசை..இன்னும் அறியப்படாமல் இருக்கிறது. இயற்றமிழோடும் நாடகத் தமிழோடும் இணைந்து.. இயைந்து.. இசைத் தமிழையும வளர்த்தெடுக்க வேண்டிய வரலாற்றுக் கட்டாயமும் கடப்பாடும் நமக்கு உள்ளது

தமிழ் இலக்கண நூலாகவும் இலக்கிய நூலாகவும் விளங்குகின்ற தொல்காப்பியம் "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் / பாடல்சான்ற புலனெறி வழக்கம் /கலியே பரிபாட்டு ஆயிரு பாங்கினும் / உரியதாகும் என்மனார் புலவர்" எனக் குறிப்பிடுகிறது.

நாடக வழக்கென்பது செய்யுள்-பா வழக்கு என்றும்; உலகியல் வழக்கு என்பது பேச்சுவழக்கு என்றும் உணர்த்தப் படுகிறது.கலியும் பரிபாட்டும் 'இசைக்கும் பாட்டுக்கும்' உரியதாக - எடுத்துக்

காட்டாகப் பேசப்படுகிறது. இயற்றமிழ்- எழுதப் படுவதாகும். கவிதை,சிறுகதை,புதினம் முதலியவை இதனுள் அடங்கும்.எழுத்து வடிவிலான நாடகம் இயற்றமிழினுள் அடங்கும்.

**இசைத்தமிழ்**

தமிழ் மொழி-எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்திலக்கண மரபினை உடையது. எழுத்தும் சொல்லும் அளபெடுத்து இயைந்து ஒலிக்கப்படும் பொழுது(அசைஇ) இசையாக மாறுகிறது. அளெபடுத்தல் என்பது,ஓர் எழுத்து,தான் ஒலிக்கப்படும் கால அளவை (மாத்திரை என்பதாகும்) விடக் கூடுதல் கால அளவில் ஒலிக்கப் படுதலாகும். எடுத்துக்காட்டாக 'ஆ' எனும் நெடில் எழுத்திற்கு இரண்டு(2) மாத்திரை எனில்,ஆ.... என்று நான்கு மாத்திரை கால அளவுக்கு மேலே ஒலிப்பது.இதுவே இசை(மொழி)க்கான அடிப்படையாகும்.

காய்கறிகள் விற்பவர் 'கீரை கீரே..... என நீட்டி ஒலிப்பதை இவ்விடம் நினைவுகூர வேண்டும். இந்த இசை-குழலிசை, நரம்பிசை, தோலிசை, குரலிசை என கருவிகள் வழி இசையாகவும் அமைகின்றது. பாட்டு,விசில், குலவை,ஒப்பாரி, (ஒப்புக்கு ஆரித்தல்),விம்முதல்,அழுதல் முதலியன இசைத்தன்மை உடைய செயல்களாகும். இவற்றை உள்ளடக்கிய தமிழ், இசைத் தமிழ் என்று அழைக்கப்படுகிறது. இதனை, தொல்காப்பியர் செய்யுளியலில், "மாத்திரை எழுத்தியல்/ அசைவகை எனாஅ" என்று குறிப்பிடுகிறார்.

அதாவது எழுத்து-சொல் ஆகியவற்றைச் சொல்லும்-ஒலிக்கும் கால அளவு மாத்திரை அளவு இவற்றைக் குறிக்கிறது. அதேபோல் வண்ணம் எனில் இசையின் வகை என்பதாகும். இன்று, இதனைச்"சந்தக் குழிப்பு" என்கின்றனர். அசைகள் நீட்டித்து,ஓர் அசை மற்றொரு அசையுடன் இயைந்து- இசைந்து,அளபெடுத்து,கால முறையில் அமையும் பொழுது, இசையாக, பண்ணாக (ராகம்) மாறுகிறது; அமைகிறது.

**இசை-மக்களிசை**

இசைத்தமிழ் மரபில் தோன்றி, இயற்றமிழ் பகுதியாக வழங்கி வருவது 'பண்ணத்தி' என்பதாகும்.

பண்ணத்தி என்பது நாடகச்செய்யுள் வகையாகும்; வடிவமாகும். அதாவது செய்யுள் வடிவில் நாடகத்தில் பாடப்படுவதாகும்.

இது பாடல்சான்ற புலனெறி(புலன்) வழக்கம் என்பதாக அமையக்கூடும். கழனிப்பாட்டு, உழவர்பாட்டு, மழைப்பாட்டு, ஏர்ப்பாட்டு, நடவுப் பாட்டு, நெற்களப் பாட்டு, போர்க் களப்பாட்டு, வெற்றிப்பாட்டு என பாடல்கள் அமைகின்றன. நாட்டுப்புறப் பாடல் வகைகளுள் ஒன்றான, பள்ளு வகைப் பாடல்கள் பண்ணத்தி வழிவந்தவை எனலாம். அதாவது, கதையைப் பாடலுக்குள் அமைத்து, பாடலுடன் இசை சேர்த்து, அதற்குப் பொருத்தமாக ஆட்டங்களை நிகழ்த்தி, நாடக வடிவில் கதை சொல்லுவதற்குப் பண்ணத்தி (இசைமுறை) பொருத்தமாக அமைந்தது. மரபிசைப் பாடலுள் (நாட்டுப்புறப் பாடல்) ஓசை குறைந்த இசைப்பாடல் பண்ணத்தி எனப்படுகிறது. இசைத்தன்மை குறைந்தது புலன் என்று அழைக்கப் பெறுகிறது. புலன் கதையை விவரிக்க-நாடக வடிவில் நிகழ்த்த உதவியது. இதனைத் தொல்காப்பியம், பொருளொடு புணரா பொய்ம்மொழி/பொருளொடு புணர்ந்த நகைமொழி (தொல்:செய்யுளியல்:166) எனக் குறிப்பிடுகிறது.

பாடல் வகையினின்று மாறுபட்ட, வாய்மொழித் தன்மை வாய்ந்த பாடலாகப் பண்ணத்தி அமைகிறது. மக்களிசை - மரபிசைப் பாடல்களில் இத்தன்மை விருத்தமாக அமைகிறது. கதை வடிவிலான நாடகமுறை ஆட்டங்களில் 'கதையைச் சொல்ல' உதவுகிறது.

*பாடல்- பண்* தமிழில் 'பண்' என்பது இசையை - தாளத்தைக் (ராகம்) குறிக்கிறது. வடமொழி 'ராகம்' என்கிறது. தமிழ் எழுத்துக்களைக் குறில்,நெடில் எனப்பகுத்து, மாத்திரை (ஒலிக்கும் கால அளவு) அளவில் ஒலிக்கிறோம். எ-டு:குறில்தனித்தும்-க/ குறில் ஒற்றும்-கல்/நெடில்தனித்தும்-கா/நெடில் ஒற்றும்-கால் என அமையும்.

இப்படிச் சொற்கள் பாக்களில்(யாப்பு) அமைந்தால் நேரசை எனப்படும்.குறில்நெடில் இணைந்தும்-கலா/குறில்நெடில் ஒற்றும்-கலாம்/இருகுறில் இணைந்தும்-கல/இருகுறில் இணைந்து ஒற்றும்-கலம்/- என்றும் சொற்கள் பாக்களில் அமைந்தால்

நிரையசை எனப்படும். நேரசையும் நிரையசையும் பொருந்தி, சீர்களுக்குள் இணைப்பை அமைக்க வேண்டும்.

இந்தப் பொருத்தத்திற்கு-இணைப்பிற்குத் 'தளை' என்று பெயர்.தளை எனில் கட்டுதல் என்று பொருளாகும். எழுத்துக்களால் அசை உருவாகி;அசை, சீர்களுக்கிடையே கட்டினை(தளை) ஏற்படுத்த வேண்டும். பாடலின் அடிகள் தோறும் இவ்வாறு பொருத்தமுற அமைத்து,பண் (தாளம்) அமைக்க வேண்டும். எழுத்துக்கள், பிழையின்றியும் ஓசை(ஒலி) தவறின்றியும் ஒலிக்கப்படும் (உச்சரிப்பு) பொழுது, பண் பிழையாகாது. எ-டு:அகர/ முதல / எழுத்தெலாம் / ஆதி / பகவன் / முதற்றே / உலகு.

இக் குறளில் (7) ஏழுசீர்கள் உள்ளன. 1-அகர / 2-முதல / 3-எழுத்தெலாம் / 4-ஆதி / 5-பகவன் / 6-முதற்றே / 7-உலகு / இப்பொழுது,

அக/ர;முத/ல எனப்பிரிப்போம்.

அக-இருகுறில், எனவே நிரையசை/ 'ர' தனிக்குறில்- நேரசை. இதேபோல், முத-இருகுறில் எனவே நிரையசை; 'ல'-தனிக்குறில் நேரசை.ஆகவே, அக ர / முத ல ஆகிய இரு சீர்கள்;அதாவது நான்கு அசைகள். முதற்சீரில், நிரை நேர் (அக ர) இருக்கிறது. இரண்டாம் சீரில் (முத ல) நிரை நேர் இருக்கிறது. இவ்விடத்தில், நேர்நேர்--தேமா; நிரைநேர்- புளிமா; நிரைநிரை-கருவிளம்; நேர்நிரை- கூவிளம் என்ற, பா(டல்) யாப்பிற்கான வாய்ப்பாட்டைப் பொருத்திப் பார்க்கவேண்டும். அப்படியெனில்,

அக ர /முத ல ஆகிய சீர்களை, நிரைநேர் நிரைநேர் எனக்கண்டு,முதற்சீர் புளிமா எனக்கொள்ள வேண்டும்.அடுத்த சீரும் புளிமா என அமைகிறது.ஆக,நிரைநேராகிய புளிமா முன்,நிரைநேர் (புளிமா) அமைவதைக் காணலாம்.

அதாவது, இங்கு 'மா முன் நிரை' அமைகிறது. செப்பலோசை (தாளம்) உடைய வெண்பாவின் யாப்பிலக்கணம் மாமுன் நிரையும்; விளம்முன் நேரும் ஆகும். இலக்கணப்படியே இலக்கியம் அமைந்துள்ளது. பாடல்-தொகையறா, பல்லவி, அநுபல்லவி, சரணம் என்று அமைக்கப்படுகிறது. அகவல் (ஆசிரியப்பா), செப்பல்(வெண்பா), துள்ளல்(கலிப்பா),தூங்கல்(வஞ்சிப்பா) என்று ஓசை, பாவிற்கேற்பப் பிரித்தறியப் படுகிறது. இவை மரபு ஆட்டங்களுக்குப் பொருத்தமாயும் சில வேளைகளில் அமைகின்றன. பா ஓசையைத் தாண்டி பண்ணத்தி முறையிலும் பாடலாம்.துறை,தாழிசை, விருத்தம் எனச்சேர்த்தும் பண்ணமைத்துப் பாடலாம்.பாடல் எழுதுவதைக் 'கட்டுதல்' என்பர். அளவடியால் கட்டுவது அடிப்படையாகும். அதாவது ஓரசை, ஈரசையால் அமைத்துக் கட்டுவது இயல்பும் எளிமையும் ஆகும்.அதாவது, தன் ன/தன் ன/ தன் ன/ தன் ன -எனும் தாளநிலையில் பாடுவதைக் குறிக்கும்.நான்கு அளவுகளும் ஒன்றாக அமைவது அளவாகும்; அளவடியாகும். இதனையே கணிதம், இணையான பக்க அளவுடையதை சதுரம் (பக்கம்×பக்கம்) என்கிறது. இணையான அளவுடைய சுரத்தை(ஸ்வரம்-ஒலிக்கால அளவு)) உடைய தாளமுறையை, வடமொழி சதுஸ்ரம்(சதுரம்+ஸ்வரம்) என்கிறது. இதை தமிழ் இசை மரபு ஆதிதாளம் என்கிறது.தம் வாழ்வினாலும் பண்பாட்டாலும் நாகரித்தினாலும் பெற்ற 'எல்லாம் எல்லாருக்கும்'

அனைவரும் இணையானவர்கள்- All are Equal), "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் "என்ற இணனக்கோட்பாடு .தமிழ் மொழியிலும் மொழிவழி அமைந்த இசையிலும் அமைந்து உள்ளதைப் பார்க்க முடிகின்றது.

## தமிழ் இசைக்கருவிகள்

தமிழின் ஆதி மரபிசைக் கருவிகள் தவில், நாதசுவரம், பம்பை, உறுமி,தாளம் தமக்கு, பறை முதலியனவாகும். இக்கருவிகளின் தோற்றம், அமைப்பு, இசைக்கப்படும் முறை, தாளமுறை, பண்பாட்டு அடையாளம் முதலியன குறித்து தனித்தனியாக-விரிவாகப்பேசவேண்டும்.

## தாளமும், பாடலும்

தமிழின் மூத்த மரபிசைக் கலைஞர்களைத் தெரிவுசெய்து, தொடர்பு கொண்டு, அவர்களிடம் தனிப்பாடல்கள் மற்றும் ஆட்டங்களுக்கானப் பாடல்கள் முதலியவற்றைக் கேட்டபொழுது, பல்வேறு கருத்துக்களை முன்வைத்தனர்.

பாடல்களுக்கான தாளம்-தத்தகாரம் முறையில் குறிப்பிடப்பட வேண்டும்.அதே பாடலின் தாளத்திற்கேற்ற இசைக்கருவியின் சொற்கட்டு(தவில்,பம்பை, உறுமி)கள் குறிப்பிடப்பட வேண்டும். இவ்விரண்டையும் பொருத்தி அமைத்து, பாடல்,பாடகரால் பாடப்பெற,மரபிசைக்குறியீடுகள் வழி(நாதஸ்வரம்-தத்தகாரம்;தவில்-சொற்கட்டு) இசையாளர்கள் வாசித்திட வேண்டும். இதனைப் பொதுக்குறியீட்டு தன்மை(General Notation)க்கு மாற்றி அமைக்க வேண்டும். இக்குறியீட்டின் அடிப்படையில் எவர் ஒருவர் இசைக்கருவியை வாசித்தாலும் ஒத்த தன்மை உடையதாக அமையும் என்னும் கருத்துக் கிடைக்கப் பெற்றது.

மேலும் தேர்வு செய்யப்பெற்ற, தமிழ் மரபிசைப் பாடல்களுக்குத் தத்தகாரங்களைக் (தாளக்கட்டு) குறித்து, அந்தப்பாடலுக்கான தவில், நாதசுரம், பம்பை,உறுமி ஆகிய இசைக் கருவிகளின் இசை வாசிப்பு முறையைப்பதிவு செய்து,சொற்கட்டுக்களை எழுதி,குறிப்புரைகளுடன் பயிற்சிக் கையேடாக (Training Manual)மாற்றிட வேண்டும். இதற்குத்

தமிழ்மரபில் உள்ள, தெம்மாங்கு, நையாண்டி, தாலாட்டு, ஒப்பாரி, லாவணி போன்று, வகைக்கு ஒரு பாடலைத்தேர்வு செய்திடலாம்.

மேற்குறித்த முறையின் அடிப்படையில் தமிழ்மரபு ஆட்டக் கலைகளான ஒயில்,கரகம், காவடி, காளையாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம் முதலிய ஆட்டங்களுக் கான இசை வாசிப்பு முறையைப் பதிவு செய்து, சொற்கட்டுக் களையும் உருவாக்கமுடியும். முத்தாரிப்பு, பல்லவி, அநுபல்லவி, சரணம், எடுப்பு- தொடுப்பு ( ஜாயிண்ட்), தீர்மானம் முதலிய முழுநிகழ்வின் வாசிப்பு முறைகளின் சொற்கட்டுகளையும் குறிப்பிட்டு, முழு (ஆட்டம் மற்றும்பாடல்) நிகழ்வுக்கான இசைக் குறிப்புகளை உருவாக்கிடலாம். கலந்துரையாடல்களைத் தொடர்ந்து செய்வதன் மூலம், இசைக் குறிப்பை செம்மைப் படுத்தலாம். எடுத்துக்காட்டாக

"ஆனை வாரதப் பாருங்கம்மா

ஆனை அசைஞ்சு வாரதப் பாருங்கம்மா!

ஆனைத்தடம் போல அழகு நாச்சிக்கு அட்டியல்

மின்னலைப் பாருங்கம்மா! "-

என்ற பாடலடியைத் தெரிவு செய்து, அதற்கான சொற்கட்டினை

(தத்தகாரம்) உருவாக்கிக் காண்போம்.

**தத்தகாரம் :**

தான னன்னன்னே தான னன்னே-தன/ தான னன்னன்னே

தான னன்னே/

தானன னன் ன ன தானனன்ன-தன

தானன னன் ன ன

தானனன்ன-

என்று தொடர்ந்து போகும்.

தத்தகரத்தைப் பிரித்துப் பார்த்தால், இலக்கணம் குறிப்பிடும் நேரசை/நிரையசை முறையில் அமைந்து, இசையோடு இயைந்து எளிமையாகப் பாடக்கூடியதாக உள்ளது.

ஓர் ஆட்டக்கலையை, இசையுடன் சேர்த்து ஆடி முடிக்கும் பொழுது,

1. தத்தா தன னன தா
2. தத்தா தன னன தா/
3. தத்தா தன னன தா/

தா.தா.தா/ என்று மூன்று முறை வாசித்து முடிப்பர்.இது மரபாகும்.இதற்கு முத்தாரிப்பு-முடிப்பு)

மேலே விளக்கப்பட்ட தத்தகாரங்கள் அல்லது இசை(தாளம்) முறைகளுக்கு ஏற்ப, சொற்களை அமைப்பது சொற்கட்டு எனப்படும். அதாவது, இசையைத் தரும் கால அளவை ஒத்த சொற்களை அமைக்கவேண்டும். தா ன= ஆ ன/

னா ன ன=வா ர த

தா ன னன்னா=

பா ருங் கம் மா--என்று பொருத்திப் பார்க்க வேண்டும்.

தமிழ் மரபிசையும் ஆட்டங்களும் ஒத்திசைந்து இயங்கக்கூடிய இடம் இதுதான்.

இசையும் பாட்டும் ஆட்டமும் ஒரு சேர நிகழ்த்தப்படும். எனில் முத்தமிழும் சேர்கிறது எனலாம்.

### இசைக் கருவிகள் :

பாடலைப் பாடுவதற்கும் இனிமையுடன் கேட்பதற்கும் பண்ணிணைப்(இராகம்) பின்பற்றுவதற்கும் இசைக்(தாளம்) கருவிகள் வேண்டும்.

இயற்கையிலிருந்து இசையையும் இசைக் கருவிகளையும் மனிதன் உருவாக்கிக் கொண்டான். இறந்த மிருகங்களின் தோலில் காற்றுப் பட்டபோதும், மூங்கில்கள் உரசிக்கொண்ட போதும், கைகளைத் தட்டி ஆரவாரித்த போதும் இசை உருவானதென்பர். குழலிசை,நரம்பிசை,தோலிசை என இசைதரும் பற்பலக் கருவிகள் உள்ளன.

புல்லாங்குழல்,நாதசுரம்,கொம்பு போன்றவை குழலிசைக் கருவிகளாகும்.யாழ்,கொன்றைக்குழல், ஆம்பர்(ல்)குழல், முல்லைக்குழல் எனப் பூக்களின் வடிவை ஒத்துக் குழலிசைக் கருவிகள் அமைந்தன. தோலிசைக் கருவிகளாகப் பறை,தவில்,உடுக்கை,முரசு,தமுக்கு, பம்பை,உறுமி போன்றவை உள்ளன. தமிழ் இசைக் கருவிகளில் தாளம் முக்கியமான-அடிப்படையான இசைக்கருவியாகும்.இதனைச் 'சிஞ்சா' என்றும் அழைப்பர். பண்ணின் கால அளவைக் குறிக்கவும் கட்டுப்படுத்தவும் இது பயன்படுகிறது. இசைக்கப்படும் காலத்தை- நேரத்தை,' ஒண்ணாங்காலம்','ரெண்டாங்காலம்', 'மூணாங்காலம்' எனக்குறிப்பிடுவர். ஆட்டத்தையும் இசையையும் மெதுவாகவோ, வேகமாகவோ அமைக்க இது உதவுகிறது. தவில்,நாதசுரம், பம்பை,உறுமி, தாளம் ஆகியவை மரபிசை-மரபுக்கலைகள் நிகழ்த்துவதற்கு அடிப்படைக் கருவிகளாகும். இக்கருவிகள் குறித்தும் தனித்தனியாக ஆய்வுகள் செய்யவேண்டும்.

அறிவியல் முறையில் (இயற்பியல் மற்றும் கணிதம்) செய்யப்படும் இந்த ஆய்வினால் தமிழ் மரபிசைக் கருவிகளின் நுட்பமான அமைப்பும் இசைத்தல் முறையும் இசையும் பண்ணும்(தாளம்) தொன்மையானவை தனிச்சிறப்புடையன எனக்கண்டு உறுதிப்படுத்திட முடியும்.

### முடிவுரை

தமிழ் மரபு ஆட்டங்களான ஒயில்,கும்மி, கோலாட்டம்,கரகம், பொய்க்கால் குதிரை, காளையாட்டம், பறை முதலிய ஆட்டக்கலைகள், கலைகளின் அடவுகள் குறித்துத் தனித்தனியாகப் பயிற்று முறைக்கு உதவும் வகையில் நூற்களைத் தயாரிக்க வேண்டும். தமிழ் மரபிசையும் ஆட்டங்களும் ஒத்திசைவாகச் செயல்படும் நிலையைப் பொருத்திக்காட்டி மாணவர்கள்- இளைய தலை முறையினர் எளிமையாகக் கற்றுக்கொள்ளும் முறையில் பாடத்திட்டம் (Syllabus) அடிப்படையில் உருவாக்கிட வேண்டும்.அதைப் பயிற்சிக் கையேடாக/நூலாக வெளியிட்டுப் பள்ளி-கல்லூரிகளில் பாடத் திட்டமாக வைக்கவேண்டும்.

பயிற்சிக் கையேட்டின் துணையோடு பயிற்சிகள், பயிற்சிப் பட்டறைகளை நேரிடையாகவும் இணைய வழியிலும் நடத்தி, கற்றல்-

கற்பித்தல் முறையாக மரபிசையையும் ஆட்டக்கலையையும் நடத்துகிற பொழுது, மாணவர் சமுதாயம் தமிழ் மரபிசை- தமிழ்க்கலைகள் வழியாக, மொழியைக் கற்றுக் கொள்வார்கள். ஆட்டங்களும் இசையும்- உடலையும் மனதையும் பக்குவப் படுத்துவதால் மொழி வளமும் உடல் நலனும் மனவளமும் பெறுவார்கள். இன்னும் வரும் நூற்றாண்டுகளைக் கடந்து, காலந்தோறும் தமிழ் நிலைத்து, நீடித்து நிற்கும். தமிழியல் வாழ்வின் முத்தமிழ் மரபில் இசை அறிந்து வாழின் இசை பெறலாம். மனித மாண்புகளை வளர்க்கும் மரபுக்கலைகள் பழகுவோம்.

### கலைகள் கற்போம்!

கலைவழி கற்போம்!
கலைவழி கற்பிப்போம்!

### சான்றுகள்


1. தொல்காப்பியம், எழுத்து, பிறப்பில், நூற்பா-1
2. மேலது, நூற்பா-1362
3. மேலது, பொருளதிகாரம், அகம், நூற்பா-1
4. மேலது, அகத்திணையில், நூற்பா-56
5. மேலது, எழுத்தியல், நூற்பா-3
6. மேலது,எழுத்தியல், நூற்பா-4
7. மேலது, எழுத்தியல்,நூற்பா-6
8. தொல்.எழுத்தியல்நூற்பா-7
9. மேலது, செய்யுளியல், நூற்பா-310
10. மேலது, செய்யுளியல்

**ஆசிரியர் குறிப்பு :**

**ஆ.அழகுசெல்வம்**

*(அழகு அண்ணாவி), எம்.ஏ., எம்ஃபில்., பிஎச்.டி.,*

*விரிவுரையாளர், தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, (ம.கா.பல்கலைக் கழகம்), அருப்புக்கோட்டை.*

***வெளியீடு:***

*மூன்று கவிதை நூற்கள். ஆறு ஆய்வு நூற்கள். 40-க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள். 300-க்கும் மேற்பட்ட பயிலரங்குகள். 50க்கும் மேற்பட்ட வானொலி நிகழ்ச்சிகள். 50க்கு மேற்பட்ட வீதி நாடகங்கள் இயக்குநர் - தயாரிப்பாளர், குறும்படங்கள் - இயக்குநர். ஒயிலாட்டம் மற்றும் நாட்டுப்புறக் கலைகள் பயிற்றுநர். இயக்குநர்-கூடல் கலைக்கூடம்.*

***பயணங்கள் :***

*கற்றல்-கற்பித்தல் பயிலரங்கம் கல்வி அமைச்சகம், உமறுப்புலவர் கல்வி நிலையம்-சிங்கப்பூர், 2017, 2018 மற்றும் 2024, 10-வது உலகத்தமிழ் மாநாட்டில் பங்கெடுப்பு-சிகாகோ, அமெரிக்கா,2018, வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையில் ஒயில் கலைஞராக - பயிற்றுநராகப் பங்கெடுப்பு - அமெரிக்கா, 2018, மரபுக்கலைகள்-அரங்கம் வழி, கற்றல் - கற்பித்தல் பயிற்சி, மலேசியா, 2024, மரபுக் கலைகள் வழி கற்றல்-கற்பித்தல் பயிற்சி-ஏற்பாடு, வட அமெரிக்கா,2024 மற்றும் 2025.*

# தந்தை பெரியாரின் தொலைநோக்குப் பார்வையில் தமிழின் வளர்ச்சியும் எதிர்காலமும்



முனைவர் **பி.இரா.வீரமணி,** (பேராசிரியர்)



**ச.உஷா,** (முனைவர் பட்ட ஆய்வாளர்)

**கட்டுரைச் சுருக்கம்**

*“தந்தை பெரியாரின் தொலைநோக்குப் பார்வையில் தமிழின் வளர்ச்சியும் எதிர்காலமும்” என்ற இந்த ஆய்வுக்கட்டுரை தமிழ் மொழியின் தன்னிகரில்லாத வளர்ச்சிப் பாதையைக் காட்டுகிறது. தமிழ் மொழியின் வளர்ச்சிப் பாதையில் பயணிக்க முக்கியக் காரணமாக பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தம் அமைகிறது. பெரியார் ஒரு சமூகச் சீர்திருத்தவாதி என்ற நிலையைக் கடந்து மொழிக்காகத் தன்னை அர்ப்பணித்த வரலாற்றை இக்கட்டுரை எடுத்தியம்புகிறது. பகுத்தறிவுப் பாதையில் பயணித்த அவரின் மொழி குறித்த கருத்துக்கள் மறுக்க இயலாதவை. அவர் பிற மொழிகளைத் தாழ்த்தி தமிழை உயர்த்திப் பிடிக்கவில்லை. மாறாக, அனைத்து மொழிகளும் உயர்ந்தது தான் அதில் தமிழ் மொழியைச் சீர்திருத்தி எதிர்காலத்திற்கு எடுத்துச் செல்லும் கடமை நமக்கு இருக்கிறது என்பார். தாய்மொழி தமிழுக்காகத் தன்னலம் பாராது பொதுநலம் கருதி வாழ்நாள் முழுவதும் போராடிய தகைசால் தமிழர் தந்தை பெரியார் ஆவார். அவரின் தொலைநோக்குப் பார்வையில் நோக்கினால் தமிழின் எழுச்சிப்பாதையை அறியலாம்.*

## முன்னுரை

தாய்மொழி தமிழின் எதிர்காலம் குறித்துத் தந்தை பெரியாரின் தொலைநோக்குப் பார்வையை மையப்படுத்தியது இந்த ஆய்வுக் கட்டுரை. பெரியார் ஒரு சமூக சீர்திருத்தவாதி, சமத்துவப் போராளி, அரசியல் சிந்தனையாளர் மற்றும் பகுத்தறிவாளர் என்ற பல்வேறு நிலையைக் கடந்து மொழிப்பற்றாளர் என்பதை அறிய இக்கட்டுரை ஒரு வாய்ப்பாக அமையும். தொலைநோக்குப் பார்வையில் அவர் தமிழ் மொழிக்கு அளித்த முக்கியத்துவம் தமிழக வரலாற்றில் ஆழ்ந்த தாக்கங்களை ஏற்படுத்தியவை. தமிழ் மொழியில் அனைத்து துறைகளிலும் மறுமலர்ச்சி ஏற்பட வித்திட்டவர் ஆவார். அவரின் தொலைநோக்குப் பார்வை அவரது காலத்திற்கு மட்டுமல்லாமல் தமிழை இன்று வரை நல்ல

எதிர்காலத்தோடு பயணிக்க வைத்திருக்கிறது. இதுவரை ஜாதி வேறுபாடுகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தவர் என்ற அடையாளத்தைக் கடந்து தமிழ் மொழிக்கெனத் தனி அடையாளம் பெற்றுத் தந்தவர். அவரின் மொழிச் சீர்திருத்தம் தமிழக வரலாற்றில் முக்கிய பங்காற்றுகிறது. அவரின் மொழிப்பற்று முற்றிலும் பகுத்தறிவு சார்ந்ததாகவே இருக்கிறது.

உடலும் உயிரும் போலப் பெரியாரும் மொழியும் பிரிக்க இயலாதவை. பெரியார் மொழிக்காக ஆற்றிய தொண்டு அளப்பரியவை. நம் தாய்மொழி தமிழ் தழைத்தோங்க முக்கியக் காரணம் தந்தை பெரியார் ஆவார். அவர் தமிழ் மொழியின் மேன்மையைத் தரணி எங்கும் பரவச் செய்தவர். அவரின் தாய்மொழிப் பற்றும், தமிழுக்கான அவரது போராட்டமும் என்றும் நம் நினைவை விட்டு அகலாதவை. அவரின் மொழிப்பற்றால் தமிழகத்தில் நடந்த மறுமலர்ச்சி பற்றி இவ்வாய்வு கட்டுரையில் காணலாம்.

## மொழி வரலாறு

“மொழி என்பது வெறும் தகவல் பரிமாற்றத்திற்கான கருவி மட்டுமல்ல அது ஒரு மானுட வரலாறா”வது அதன் பயன்பாட்டால் தான். ஒரு மொழி கடந்து வந்த பாதையை வைத்தே அம்மொழியைப் பேசக்கூடிய மக்களின் வரலாறுகள் அறியப்படும். மொழி என்பது மனிதனின் எண்ணங்களை வெளிப்படுத்தக்கூடிய ஒரு செயல்முறை மட்டுமல்ல அது ஒரு இனத்தின் வரலாறை எதிர்காலத்திற்குப் பறைசாற்றும் வழிமுறை. மொழி வரலாறு என்பது மனிதன் எப்போது மொழியைப் பயன்படுத்தத் தொடங்கினான் என்பதில் தொடங்குகிறது.

> உலகில் 3500 மொழிகள் பேசப்படுகின்றன. இவற்றில் எழுத்து வடிவம் பெற்றவை 500 மொழிகள் ஆகும். மொத்தம் ஆறு மொழிகள் 5 கோடிக்கு மேற்பட்ட மக்களால் பேசப்படுகின்றன. தமிழ், தெலுங்கு, வங்காளி, இந்தி ஆகிய மொழிகள் அந்த மொழிகளில் அடங்கும். ஆப்பிரிக்கக் கண்டத்தில் மட்டும் 1250 மொழிகள் பேசப்படுகின்றன. ஐரோப்பாவில் 28 ஆட்சி மொழிகள் உள்ளன.23 முக்கிய மொழிகளைப் பயன்படுத்துகின்றன.
>
> (விடுதலை 31.7.1980)

உலகின் நீண்ட காலமாக வாழும் மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று. இந்தத் தமிழ் மொழியானது சங்க காலம் தொடங்கி நவீன காலம் வரை தன்னைச் செதுக்கி கொண்டே செல்கிறது. எந்த ஒரு மொழி தன்னைப் பண்படுத்திக் கொண்டு அனைவராலும் பயன்படுத்தப்படுகிறதோ அந்த மொழி சிறந்த மொழியாகும். அவ்வகையில் தமிழ்மொழி பழமை மாறாது புதுமையை ஏற்றுச் சிறந்த மொழியாக விளங்குகிறது. தமிழ்மொழி ஓர் அடையாளம் என்ற நிலையைக் கடந்து அது ஒரு கலைப்பொக்கிஷமாக விளங்குகிறது. அப்படிப்பட்ட இம்மொழி சுமார் 2000 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக் கொண்டது. இம்மொழி பல காலங்களைக் கடந்து நிற்கிறது. இந்த மொழி சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரை தனது பங்களிப்பை தவறாமல் இலக்கிய வடிவில் தந்து கொண்டே இருக்கிறது.

இன்றும் தமிழ் தொழில்நுட்ப வளர்ச்சியின் வாயிலாகத் தொன்று தொட்டு வளர்ந்து கொண்டே இருக்கிறது. எண்ணிலடங்காத எத்தனையோ இலக்கியங்கள் தமிழின் பழமையைக் காத்து வருகின்றன. இந்தத் தமிழ் மொழியின் வரலாறு பெருமை மிகுந்தது.

## தாய்மொழியும் தந்தை பெரியாரும்

தாய் வழியில் வந்த மொழி என்பதால் தாய்மொழி எனப் பெயர் பெற்றது. தாய்மொழி பற்றிய பெரியாரின் சீரிய சிந்தனைகள் வியக்கத்தக்கவை. அவர் திராவிட மொழிகள் நான்கிலும் பேசிப் பழகும் பயிற்சி பெற்றவர். பகுத்தறிவு இயக்கத்தின் தந்தை ஆகிய பெரியார் பாமரர் பேசும் தாய்மொழிக்கும் வழிகாட்டியாவார். அவர் தமிழ்மொழி மீது மிகுந்த மரியாதை கொண்டவர். தமிழ் மொழியைப் பிற மொழிகளின் ஆதிக்கத்திலிருந்து காப்பாற்ற வேண்டும் என அவர் மேற்கொண்ட முயற்சிகள் ஏராளம். அவர் தமிழை ஒரு மொழியாக மட்டுமல்ல அதனை

மானுட வாழ்வியல் அடையாளமாகவும் பகுத்தறிவு போராட்டத்தின் மிக முக்கியக் கருவியாகவும் பாவித்து அதற்காக அவர் செய்த அர்ப்பணிப்புகள் அளப்பரியவை.

> இன்றைய புலவர்கள் புத்தகம் படித்தவர்கள். நான் நடைமுறையில் உள்ள அனுபவ அறிவுடையவன் என்று பெரியார் கூறுகின்றார்.

மேலே குறிப்பிட்ட பெரியாரின் வரிகள் வாழ்வில் அனுபவ அறிவின் முக்கியத்துவத்தைப் பறைசாற்றுகிறது. மொழி பற்றிய பெரியாரின் சிந்தனை "மனிதன் தன்னுடைய உள்ளத்தில் தோன்றிய உணர்ச்சிகள் அல்லது கருத்துக்கள் ஆகியவற்றை மற்றவருக்கு அறிவிக்கும் சாசனம் மொழி" என்பதன் வழி, கருத்தை விளக்க உதவும் ஒரு கருவியாக மொழி பயன்படுகிறது என்பது விளங்குகிறது.

### மொழி பற்றிய பெரியாரின் மற்றொரு சிந்தனை

> மொழி என்பது உலகப் போட்டி போராட்டத்திற்கு ஒரு போர் கருவியாகும் போர்க்கருவிகள் காலத்துக்கு ஏற்ப மாற்றப்பட வேண்டும். அவ்வப்போது கண்டுபிடித்துக் கைக்கொள்ள வேண்டும்.
> நூல் : மொழி - எழுத்து.

பெரியாரின் இக்கருத்து மொழியின் முக்கியத்துவத்தையும் அதை மறு சீரமைக்கப்பட வேண்டிய அவசியத்தையும் தெள்ளத்தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. இந்தப் போராட்டமான உலகில் வெற்றி தோல்விகளை நிர்ணயிக்கும் ஒரு மிகப்பெரிய ஆயுதமாக மொழி விளங்குகிறது. தந்தை பெரியாரின் தாய்மொழிப்பற்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. அவர் தாய்மொழியின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்தவர். தாய் மொழியின் மேன்மையை இந்த உலகிற்குப் பறைசாற்றியவர்.

### மொழி – முரண்பாடு

மொழி என்பது ஒரு மனிதனுக்கு அவ்வளவு முக்கியமான சாதனம் அன்று. அது இயற்கையானதுமன்று. அதற்கு ஒரு கட்டாயமும் இல்லை. மேலே குறிப்பிட்ட பெரியாரின் கருத்து மொழிக்கு முரண்பட்ட கருத்தாகவே அறியப்படுகிறது. ஆனால் இக்கருத்து காலம் செல்லச் செல்ல பகுத்தறிவோடு ஆராய்ந்தால் அதன் உண்மை பொருளை விளங்கிக்கொள்ள இயலும். ஏனெனில் எந்த ஒரு விஷயமும் கட்டாயத்தால் கட்டமைக்கப்பட்டால் அது நாளடைவில் கலையிழந்து விடும்.

### பெரியாரின் மற்றொரு சிந்தனை

> "மொழி மனிதனுக்குக் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளும் அளவுக்கு விஷயங்களை புரிந்து கொள்ள வாய்ப்பளிக்கும் அளவுக்குத் தேவையானதே ஒழிய பற்றுக் கொள்வதற்கு அவசியமானது அல்ல மொழியானது சமுதாயத்தில் உள்ள சூழ்நிலைக்கு ஏற்றதே ஒழிய பொது வாழ்விற்கு உணர்ச்சிக்கு ஏற்றதல்ல"

பெரியாரின் மொழி குறித்த முரண்பாடான இக்கருத்து தொலைநோக்குப் பார்வையாலும் அறிவியல் வளர்ச்சியாலும் நோக்கினால் மட்டுமே எதார்த்தம் புரியும்.

> "நம் மேன்மைக்கு நமது தகுதிக்கு நம் முற்போக்குக்கு ஏற்ற தமிழை விட மேலான ஒரு மொழி இந்நாட்டில் இல்லை என்பதற்காகவே தமிழை விரும்புகிறேனே தவிர அது அற்புத அதிசயங்களை விளைவிக்கக் கூடியது என்பதற்காக அன்று."
>
> நூல் : மொழி — எழுத்து

என்ற இக்கருத்து பெரியாரின் பகுத்தறிவு சிந்தனைக்கும் பாகுபாடின்றிப் பாவிக்கும் மனப்பக்குவத்திற்கும் சான்றாகும்.

> "அற்புத அதிசயங்களை விளைவிக்கக் கூடியது என்பதற்காக தமிழ்மீது பற்றுக்கொள்ளவிலை. அற்புத அதிசயங்களை விளைவித்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. அக்கருத்து நமக்குத் தேவையில்லை.

ஆயிரம் முதலைகளை வைத்துக்கொண்டு பாடிப்பாருங்களேன். அவற்றில் எதுவாவது தான் தின்ற ஒரு மீனையாவது கக்குகிறதா என்று! தாழ்ப்பாள்இட்ட சிற்றரையின் முன்னே நின்று மனம் உருகிப் பாடிப் பாருங்களேன். சிறிதாவது தாழ்ப்பாள் அசைகிறதா என்று! அற்புத சக்தி நிறைந்த மொழி என்பது அறியாமை தான். அது தமிழ்ப் பண்பு கூட அல்ல. தமிழ் மொழியில்அதிசயம்-அற்புதம்-சக்தி-முதலிய சொற்களேஇல்லை.."

(நூல் மொழி — எழுத்து)

### மொழிச் சீர்திருத்தம்

மொழிச் சீர்திருத்தம் என்பது காலத்தால் கட்டாயமாக்கப்பட்ட ஓர் செயல்முறை. தொலைநோக்குப் பார்வையில் நோக்கினால் எந்த ஒரு மொழி தொடர்ந்து சீர்திருத்தப்படுகிறதோ அதுவே சீரிய சிந்தனை பொருந்திய மொழி என்பதாகும். ஒரு சமூகத்தின் வளர்ச்சியையும் கல்வி மற்றும் கலாச்சார மேம்பாட்டையும் மொழிச் சீர்திருத்தம் கட்டமைக்கிறது. எனவே மொழியைச் சீர்திருத்த வேண்டிய அவசியத்தைப் பின்வரும் பெரியாரின் சிந்தனை வரிகள் உணர்த்தும் அவை,

"ஒரு பாஷையோ, ஒரு வடிவமோ அல்லது வேறு பல விஷயமோ எவ்வளவு பழையது, தெய்வீகத்தன்மை கொண்டது என்று சொல்லிக் கொள்கின்றோமோ அவ்வளவுக்கு அவ்வளவு சீர்திருத்த வேண்டிய அவசியம் இருக்கின்றது என்பது அதன் உண்மை தத்துவமாகும்"

இவ்வாறு பல்லாயிரம் ஆண்டுகளாக வரிவடிவிலும் எழுத்து வடிவிலும் எவ்வகையான சீர்திருத்தத்தையும் தமிழ் மொழி பெறாது இருந்தது. தந்தை பெரியார் துணிந்து எழுத்துச் சீர்திருத்தத்தைப் பெருமளவில் கொண்டு வந்தார்.

"தமிழ் ஏற்பட்டது இன்று நேற்று அல்ல. எழுத்துக்கள் ஏற்பட்டது இன்று நேற்று அல்ல. ஆனால் எழுத்துக்கள் கல்லிலும், ஓலையிலும் எழுதும் காலம் போய் காகிதத்தில் எழுதவும், அச்சில் வார்த்துக் கோர்க்கவும் ஏற்பட்ட காலந்தொட்டு இன்று வரை அவற்றில் யாதொரு மாற்றமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஆதலால் யாராவது ஒருவர் துணிந்து இறங்க வேண்டியதாயிற்று"

என்ற பெரியாரின் பொருள் பொதிந்த இந்தக் கருத்துக்கள் காலத்தால் அழியாத கல்வெட்டுகள். பெரியாரின் துணிவும் பணிவும் சேர்ந்து மொழிச் சீர்திருத்தத்திற்கு முக்கியக் காரணமாகிறது.

### எழுத்துச் சீர்திருத்தம்

தமிழக வரலாற்றில் எழுத்துச் சீர்திருத்தம் வர முக்கியக் காரணமானவர் தந்தை பெரியார். அவரின் எழுத்துச் சீர்திருத்த பணிகள் எண்ணிலடங்காதவை. அவரின் இதழ்களாக வந்த குடியரசு, பகுத்தறிவு, விடுதலை,உண்மை ஆகிய இதழ்களில் அவர் சீர்திருத்தி வெளியிட்ட எழுத்து வடிவங்களையே பயன்படுத்தி வந்தார். அவரின் எழுத்துச் சீர்திருத்தமும் நடைமுறைக்கு ஒத்ததாகவே இருந்தது. எழுத்துச் சீர்திருத்தம் குறித்து அவர் கூறியதாவது

"இன்னமும் தமிழ் பாஷை எழுத்துகளில் அநேக மாறுதல்கள் செய்ய வேண்டி இருந்தாலும், இப்போதைக்கு இந்தச் சிறு மாறுதலை அனுபவத்திற்குக் கொண்டு வரலாம் என்பது கருதி, அந்தப்படியாகவே எழுத்துக்களைப் பயன்படுத்தி, அடுத்தாற்போல வரும் குடியரசு பத்திரிக்கையில் பிரசுரிக்கலாம் என்று இருக்கின்றேன்."

இவ்வாறாகப் பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தம் இன்று வரை எழுச்சியை ஏற்படுத்துகிறது.

### பிறமொழிப் பார்வை

பெரியார் எனும் ஒரு பகுத்தறிவாளரின் பார்வையில் மனிதனிடத்திலேயே பாகுபாடு கூடாது எனில் மொழிகளிடத்தில் பாகுபாடு பார்ப்பது என்பது கிடையாது என்பதை அறியலாம். அவர் தாய்மொழி போன்றே பிற மொழிகளையும் பாவித்தார். அவரின் பிறமொழிப் பார்வையும் பகுத்தறிவின் பார்வையில்தான் பார்க்கப்பட்டது. இருப்பினும், மூடநம்பிக்கைகளை ஏற்படுத்தும் பிற மொழிக்கு எதிராகக் குரல் கொடுக்கவும் செய்தார்.

"தமிழில் ஆரியம் புகுந்ததால் மற்ற மக்கள் எல்லாம் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த

காலத்தில் கப்பலோட்டிய வாணிகம் நடத்திய தமிழர் மரபில்- இன்று ஒரு நியூட்டன் தோன்ற முடியவில்லை, பழமையிலுள்ள மோகத்தை முதலில் விட்டொழிக்க வேண்டும். தமிழைப் புதுமொழியாக்க சகல முயற்சிகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**நூல்: மொழி –எழுத்து"**

மேலே குறிப்பிட்ட பெரியார் நிகழ்த்திய உரையின் மூலம் பழமைவாதத்தை விடுத்து புதுமையைப் படைக்கும் சமுதாயத்தை நகர்த்தும் முயற்சிகள் தெளிவாகிறது.பிறமொழி குறித்து பெரியாரின் சிந்தனை சீரிய நோக்கம் கொண்டது.

தமிழ் — தெலுங்கு - கன்னடம் - மலையாளம் ஆகிய நான்கு மொழிகளும் தனித்தனி மொழிகள் என்றோ தமிழில் இருந்து பிரிந்த மொழிகள் என்றோ என்னுடைய அனுபவத்திற்கும் ஆராய்ச்சிக்கும் தோன்றவில்லை என்றார் பெரியார். ஒரே மொழி அதாவது தமிழ் தான் நான்கு இடங்களிலும் நான்கு விதமாகப் பேசப்படுகின்றது என்றே கருதுகின்றேன்.

"தமிழ் -தெலுங்கு -கன்னடம்- மலையாளம் என்பவை தனித்தனி மொழியா? இந்தப்படி மொழி பேசுகின்றவர்கள் தனித்தனி தேசிய இனமா? இதற்காக அவர்கள் பிரிந்து வாழ வேண்டுமா? அறிஞர்கள் சிந்திக்க". விடுதலை தலையங்கம் 2.2.1953

"என்னருந்தமிழே! நீயேதான் தெலுங்கு! நீயேதான் மலையாளம்! என்று தான் நான் கூறுவேன். இவை நம் மக்களுக்கு உணர்த்தி ஒரே நாடு,ஒரே மொழி, ஒரே மக்கள் என்று ஒன்றுபட்ட நிலையை உண்டாக்க வேண்டும். நூல்:மொழியாராய்ச்சி ( 1948)

பெரியாரின் இந்தத் தேசிய ஒருமைப்பாட்டுச் சிந்தனை வரிகள் காலத்தால் அழியாத கல்வெட்டில் பொறிக்கப்பட வேண்டிய வரிகள் ஆகும்.

பெரியாரும் - அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியும் இன்றைய நவீன காலத்தின் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியில் தந்தை பெரியாரின் பங்கு இன்றியமையாதது. அவர் தமிழ் மொழியில் கொண்டுவந்த எழுத்துச்சீர்திருத்தம் இன்றைய கணினியுகம் வரை காலம் கடந்தும் தமிழின் எதிர்கால வளர்ச்சிக்குக் காரணமாகிறது. இந்தியாவில் கணினித்தொழில்நுட்பம் 1980களுக்குப் பிறகு வளர்ச்சி பெற்றது. பெரியாரால் கொண்டுவரப்பட்ட எழுத்துச்சீர்திருத்தம் இன்றைய கணினி வரை பெரிய புரட்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

தந்தை பெரியாரின் அறிவியல் மனப்பான்மையும், சமத்துவக்கொள்கைகளும் தமிழை எதிர்கால வளர்ச்சியை நோக்கி நகர்த்தின. அவரின் எதிர்காலம் குறித்த தொலைநோக்குப் பார்வையால் தொழில்நுட்பமும், கணினி கல்வி வளர்ச்சியும் எட்டாத உயரத்தை அடைந்தன. அவரின் அனைத்து சமூக மக்களும் தொழில் நுட்ப வளங்களை அனுபவிக்க வேண்டும் என்ற உயரிய நோக்கம் தான் இன்றைய தமிழின் உயர்ந்த நிலைக்குக் காரணமாகிறது. அவரின் அறிவியல் மனப்பான்மை ஊக்குவிக்கும் விதமும் இன்றைய நவீன யுகத்தின் புதிய கண்டுபிடிப்புகளுக்கு மிக முக்கியக் காரணமாகிறது.

**முடிவுரை**

பகுத்தறிவு பகலவன் பெரியாரின் மொழி குறித்த கருத்துக்கள் சிந்திக்க வைப்பவை. அவை பெரியாரின் ஆழ்ந்த அனுபவத்தால் விளைந்தவை. திராவிட மொழிகள் நான்கு மொழியில் தனித்தனி மொழிகள் என்றோ தமிழில் இருந்து பிரிந்த மொழிகள் என்றோ என்னுடைய அனுபவத்திற்கும் ஆராய்ச்சிக்கும் தோன்றவில்லை என்றார் பெரியார். ஆதலால், தமிழ் தான் நான்கு இடங்களிலும் நான்கு விதமாகப் பேசப்படுகின்றது என்றே கருதுகின்றேன் என்பதன் வழி தமிழ்தான் தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய பல பெயர்களில் அழைக்கப்படுகிறதா என்பது தொடர் ஆய்வுக்குரியதாகும்.

**சான்றுகள் :**

இராமநாதன், (2005), முதல் பதிப்பு. பெரியாரியல் பாடங்கள் தொகுதி 1.சென்னை: பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம்.

இராமநாதன், (2006), முதல் பதிப்பு. பெரியாரியல் பாடங்கள் தொகுதி 2.சென்னை: பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம்.

**சுயவிவரக் குறிப்பு-:**

### பேராசிரியர் பி. இரா.வீரமணி

*ஆங்கிலத்துறை பேராசிரியர் முனைவர் பி.இரா. வீரமணி அவர்கள் ஆங்கில மொழி மற்றும் இலக்கியத்தை மையமாகக் கொண்டு 32 சர்வதேச ஆய்வுக் கட்டுரைகளையும், 9 புத்தகங்களையும் ஆசிரியராக இருந்து வெளியிட்டுள்ளார். அவரது ஆய்வுகள் பின் காலனித்துவ ஆய்வுகள், சுற்றுச்சூழல், மனிதநேயம் மற்றும் கருத்தியல் விமர்சனம் ஆகியவற்றை உள்ளடக்கியது. அவர் 10 முனைவர் பட்டஆய்வாளர்களை வெற்றிகரமாக வழிநடத்தியுள்ளார். மேலும் 10 முனைவர் பட்ட ஆய்வாளர்களை வழிநடத்திக் கொண்டுள்ளார். இவர் தஞ்சை அருகில் பூண்டியில் உள்ள திரு புட்பம் கல்லூரியில் ஆங்கில இணைப் பேராசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். தற்போது பெரியார் மணியம்மை நிகர்நிலைப்பல்கலைக்கழகத்தில் மொழிகள் துறையில் பேராசிரியராக பணிபுரிகிறார். இவரது வழிகாட்டுதலின் கீழ் ஆய்வு மாணவர்கள் ஆய்வைத் தொடர்கின்றனர்.*

**சுயவிவரக் குறிப்பு :**

### முனைவர் பட்ட ஆய்வாளர் ச. உஷா

*முனைவர் பட்ட ஆய்வாளர் ச. உஷா ஆங்கில இலக்கியத்தில் ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றவர். அவர் தனது இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பை தஞ்சையில் உள்ள மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரியில் பயின்றார். பின்னர் திருச்சி அரசு கலைக் கல்லூரியில் ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றார்.கடந்த ஒன்றரை ஆண்டுகளாக ஆங்கிலத்துறையில் உதவிப் பேராசிரியராக பணியாற்றிய அவர் தற்போது பேராசிரியர் பி.இரா.வீரமணி அவர்களின் வழிகாட்டுதலின்படி ஆங்கில இலக்கியத்தில் முனைவர் பட்ட ஆய்வை தஞ்சை பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு வருகிறார். அவரது முனைவர் பட்ட ஆய்வு பிரிட்டிஷ் பெண்ணிய எழுத்தாளர் சாராமாஸ் அவர்களின் நாவல்களையும், அதன் உளவியல், பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த சமூகப் பிரச்சனைகளையும் மையப்படுத்தியது. அவரின் கவித்திறமைக்கு கவிதைகளம் கவிப்பாவை குழுமத்தின் சார்பாக தங்கத்தாரகை விருது பெற்றார். தஞ்சையில் ஏடகம் மகளிர் முற்றம் சார்பில் நடைபெற்ற பட்டிமன்றத்தில் பங்கேற்றார். அவர் சுமார் 30 ஆராய்ச்சி மற்றும் கற்பித்தல் தொடர்பான ஆசிரியர் மேம்பாட்டு திட்டங்கள் மற்றும் பயிற்சிப் பட்டறைகளில் கலந்து கொண்டுள்ளார்.*

# திராவிடப்பொழில் – இணைய வழிக் கூட்டம்

பெரியார் பன்னாட்டு அமைப்பு, அமெரிக்கா சார்பாகத் திராவிடப்பொழில் (அக்டோபர்-டிசம்பர் 2024) ஆய்விதழின் ஆய்வரங்க இணைய வழிக்கூட்டம் 19.10.2025 ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணிக்கு(தமிழ்நாடு நேரம்) நடைபெற்றது. நிகழ்வினைத் தொடங்கி வைத்து பெரியார் பன்னாட்டு அமைப்பு அமெரிக்காவின் இயக்குநர் மருத்துவர் சோம.இளங்கோவன் அவர்கள் “அருமைத் தமிழ் நெஞ்சங்களே, உலகெங்கும் வாழும் பெரியார் தொண்டர்களே, திராவிடப் பற்றார்களே, அனைவருக்கும் வணக்கம்.இன்றைய நாள் நமக்கு மிகவும் ஒரு சிறப்பான நாள்.தமிழரின் பெருமை, திராவிடச் சித்தாந்தத்தின் வெற்றி, உலகெங்கும் ஆக்ஸ்போர்டிலிருந்து, ஆஸ்திரேலியா, அமெரிக்கா என்று பரவிக் கொண்டிருக்கிற நேரத்திலே, நாம் வெறும் பேச்சாக இல்லாமல்,இதை வரலாற்று ஆய்வுக் கட்டுரைகளாகப் படைத்து அதை உலகெங்கும் காட்டவேண்டும் என்ற ஆர்வத்திலே தொடங்கப்பட்டதுதான் திராவிடப்பொழில் இதழ்.5ஆம் ஆண்டிலே நடந்து கொண்டிருக்கிறது. இனி வேகமாக ஓடத்தொடங்கும் என்று நினைக்கின்றேன். நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்திக் கொண்டே இருக்கின்றோம். நமக்கெல்லாம் மிகவும் பெருமை தரக்கூடிய அளவிலே, நாமெல்லாம் நன்கு அறிந்த அய்யா பாலகிருஷ்ணன் அய்.ஏ.எஸ். அவர்கள், சிந்து வெளி நாகரித்தைப் பற்றி உலகெங்கும் பரப்பி வருபவர். திராவிடப்பொழில் இதழ் ஆசிரியராக வந்தது நமக்கெல்லாம் மிகவும் பெருமை. திராவிடப்பொழில் இதழில் வரும் கட்டுரைகளில் இரண்டு கட்டுரைகளை ஆய்வு செய்ய ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஏற்பாடு செய்து வருகின்றோம். அந்த வகையில் இரண்டு கட்டுரைகளை ஆய்வு செய்ய உள்ளோம்.இந்த நிகழ்ச்சியை நடத்தித் தருமாறு பகுத்தறிவு எழுத்தாளர் மன்றத்தலைவர், பகுத்தறிவாளர் அமைப்பு என்றும் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் அமைப்பு என்றும், கவிஞர்கள் இணைப்பு என்றும் பல்வேறு வழிகளிலே இளைய தலைமுறையை ஊக்குவித்து அவர்களை எல்லாம் பணி செய்ய வைக்கும் சிறப்பான பணியைச் செய்து வருபவர் நேரு அவர்கள். நேருவின் அம்மா ஆசிரியர் பணியிலே இருந்து அவரை அருமையாக வளர்த்து உள்ளார். நேரு படைத்த ‘பங்குனி உத்திரமும் பள்ளிக்கூடமும்’ என்னும் கவிதை நூலை அவரின் அம்மா முன்னிலையிலே மதுரையிலே வெளியிட்டபோது ‘ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும்’ என்னும் வார்த்தைக்கு அர்த்தத்தை அங்குப் புரிந்துகொண்டேன். நேரு அவர்களை நிகழ்ச்சியை நடத்தித்தருமாறு திராவிடப்பொழில் சார்பிலும் உங்கள் சார்பிலும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்’ என்று குறிப்பிட்டுத் தொடங்கி வைத்தார்.

### முனைவர் வா.நேரு

திராவிடப்பொழில் இதழ் இணைய வழி ஆய்வரங்கம் நடக்கிறது. இந்த நிகழ்வை பெரியார் பன்னாட்டு அமைப்பு, அமெரிக்கா நடத்துகிறது. தொடர்ச்சியாக, திராவிடப்பொழில் இதழ் ஆரம்பித்த காலத்திலிருந்து ஒவ்வொரு இதழுக்கும் பெரியார் பன்னாட்டு அமைப்பு, அமெரிக்கா இந்த ஆய்வரங்கத்தைத் தொடர்ச்சியாக நடத்தி வருகிறார்கள். ஒரு மிகப்பெரிய ஊக்கமாக, எழுதக்கூடியவர்கள், அந்தக் கட்டுரைகளை ஆய்வு செய்யக்கூடியவர்கள் என்று ஓர் உற்சாகத்தைக் கொடுக்கக்கூடிய நிகழ்வாக இந்த ஆய்வரங்கம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. திராவிடப்பொழில் இதழினை திராவிடர் கழகத்தின் தலைவர், பெரியார் மணியம்மை நிகர் நிலைப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் அய்யா ஆசிரியர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். தொடங்கி வைத்ததோடு மட்டுமல்லாது இந்த இதழ் எப்படி

எல்லாம் வரவேண்டுமென்று தொடர்ச்சியான அறிவுரைகளை, ஆலோசனைகளை நமக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் இந்த இதழின் ஆசிரியர் குழுவில் இரண்டு பெரும் ஆளுமைகள் இணைந்திருக்கிறார்கள்.

உலகமெல்லாம் தமிழர்கள் மத்தியில் மட்டுமல்ல, உலக ஆய்வாளர்கள் மத்தியில் நெஞ்சம் நிறைந்த பாராட்டுகளைப் பெற்றுக்கொண்டிருக்கக்கூடிய, சிந்துச்சமவெளி நாகரிகத்திற்கும் மதுரை கீழடி நாகரிகத்திற்கும் இருக்கும் தொடர்புகளை ஆய்வுப்படைப்புகளாகக் கொடுத்துக் கொண்டிருக்கும் மதிப்புறு முனைவர் ஆர்.பாலகிருஷ்ணன் அவர்கள் மதிப்புறு ஆசிரியராகத் திராவிடப்பொழில் இதழில் இணைந்திருக்கிறர்கள். அவர் இந்தக் கூட்டத்திலும் இணைந்திருக்கிறார். அவரை இருகரம் கூப்பி வரவேற்று, இந்த இதழின் வளர்ச்சிக்கு பல்வேறு ஆலோசனைகளைத் தரவேண்டும் என்ற எங்களின் வேண்டுகோளையும் வைக்கின்றேன். அதைப்போலப் பெரியார் மணியம்மை நிகர்நிலைப்பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றும் அய்யா பி.ஆர்.வீரமணி அவர்களும் திராவிடப்பொழில் ஆசிரியர் குழுவில் இணைந்திருக்கிறார்கள். அவர் ஆங்கிலத் துறைப் பேராசிரியர். பல முனைவர் பட்ட ஆய்வாளர்களை உருவாக்கியவர். துடிப்போடு, ஓர் இளைஞர் போல் திராவிடப்பொழில் இதழுக்குப் பணியாற்றுகிறார். அவரையும் வரவேற்கின்றேன்.என்று குறிப்பிட்டு, ஆய்வுக்குத் தேர்ந்து எடுக்கப்பட்ட இரண்டு கட்டுரைகளைப் பற்றிக் குறிப்பிட்டு, முதல் கட்டுரையான “The Legacy of the Tamils Vis-à-vis iron and Early Civilizations” என்ற வே.சொக்கலிங்கம் அவர்கள் எழுதிய ஆங்கிலக் கட்டுரை பற்றி உரையாற்ற வந்திருக்கும் ச.உஷா அவர்களை அறிமுகப்படுத்தி அவரை உரையாற்ற அழைத்தார்.

**முனைவர் பட்ட ஆய்வாளர் ச.உஷா**

அனைவருக்கும் வணக்கம். எங்கள் மதிப்பிற்குரிய சிறப்பு விருந்தினர் இ.ரா.பாலகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ். அவர்களையும், திராவிடப்பொழில் ஆசிரியர்களையும், மரு.சோம.இளங்கோவன் அவர்களையும் வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த மதிப்பாய்வு செயல்முறை முழுவதும் மதிப்புமிக்க ஆதரவை அளித்த எனது வழிகாட்டி பேரா பி.இரா.வீரமணி அவர்களுக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மதிப்பாய்வுக்கு வருகை புரிந்துள்ள உங்கள் அனைவரையும் வருக! வருக! என வரவேற்கிறேன்.

நான் பெரியார் மணியம்மை நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில், மொழிகள் துறையைச் சேர்ந்த முனைவர் பட்ட ஆய்வாளர் ச.உஷா. இரும்பு காலமும் ஆதி நாகரிகங்களும் அதனூடான தமிழர்களின் தொன்மமும்(The Legacy of the Tamils Vis-à-vis iron and Early Civilizations) என்ற இந்த ஆய்வுக் கட்டுரையை மதிப்பாய்வு செய்ய ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. இந்தக் கட்டுரையானது திராவிடப்பொழில் பத்திரிக்கையில் அக்டோபர் - டிசம்பர் 2024 அன்று வெளியிடப்பட்டது. இந்த ஆய்வுக் கட்டுரையை எழுதியவர் வெ.சொக்கலிங்கம். வெ.சொக்கலிங்கம் அவர்கள் மதுரையைச் சேர்ந்த எழுத்தாளர் மற்றும் சிந்தனையாளர். அவர் மின்னணு பொறியியல் மற்றும் வணிக நிர்வாகத்தில் பட்டங்கள் பெற்றுள்ளார். அவர் அரசியல், அறிவியல், வரலாறு மற்றும் தத்துவம் போன்ற பல்வேறு தலைப்புகளைப் பற்றி எழுதுகிறார். அவர் ஒரு வலைப்பதிவையும் பராமரிக்கிறார். திராவிட மண்ணில் ஆரியர்களின் பண்பாட்டுப் படையெடுப்பு, தந்தை பெரியார் ஓர் அறிமுகம் மற்றும் பங்கு சந்தை மோசடிகள் உள்ளிட்ட பல புத்தகங்களையும், கட்டுரைகளையும் அவர் எழுதியுள்ளார். இந்தக் கட்டுரை இந்தியத் துணைக் கண்டத்தின் ஆரம்ப வரலாறு குறித்த சில சிந்தனையைத் தூண்டும் நுண்ணறிவுகளை வழங்குகிறது, குறிப்பாக இரும்பு யுகத்தில் தமிழ்நாட்டின் பங்கையும் ஆரம்பக்கால நாகரிகங்களின் வளர்ச்சியையும் மையமாகக் கொண்டுள்ளது. இந்திய துணைக்கண்டத்தின் வரலாற்றை மறுபரிசீலனை செய்ய வேண்டி இருக்கலாம் என்று இந்தக்கட்டுரை கூறுகிறது. ஆரிய நாகரிகத்திற்கு முன்பே கலாச்சாரம், சமூகம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு தமிழ்நாடு ஒரு முக்கியப் பங்காற்றியது. தமிழ்நாட்டில் சமீபத்திய கண்டுபிடிப்புகள் ஆரிய நாகரிகத்திற்கு முன்பே இரும்புக்காலம் இருப்பதற்கான சான்றுகளை வெளிப்படுத்துகின்றன என்று இந்தக் கட்டுரை கூறுகிறது. தமிழ்நாட்டில் கி.மு.3345ஆம் ஆண்டுக்கு

முன்பே இரும்பு பயன்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் புதிய அகழ்வாராய்ச்சியில் கொடுமணல், மயிலம்பாறை, ஆதிச்சநல்லூர் மற்றும் சிவகளை போன்ற இடங்களில் இரும்புக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தக் கண்டுபிடிப்புகள் இரும்புக்காலம் மேற்கு ஆப்பிரிக்காவில் கி.மு.1200இல் தொடங்கியது என்ற கருத்துக்குச் சவால் விடுகின்றன. ஆரியர்களுக்கு முன்பே தமிழர்கள் இரும்பு பயன்பாட்டில் முன்னேறி இருந்தார்கள். பீட்டா கார்பன் டேட்டிங் முடிவுகள் தமிழ்நாட்டில் இரும்பு பயன்பாடு சிந்து சமவெளியின் நாகரிகங்களின் முக்கிய காப்பர் பயன்பாட்டிற்கு முந்தையது என்று கூறுகின்றன. இந்து செய்தித்தாளின் கட்டுரை தமிழ்நாட்டில் இரும்பு யுக கலைப் பொருட்களின் கண்டுபிடிப்பைப் பற்றி விவாதிக்கிறது, அதில் முதுமக்கள் தாழிகள், இரும்பு பொருட்கள் மற்றும் பல்வேறு மட்பாண்ட வகைகள் அடங்கும். இந்தக் கண்டுபிடிப்புகள் ஆதிச்சநல்லூரை போலவே இப்பகுதியில் ஒரு தனித்துவமான இரும்பு யுக கலாச்சாரம் இருந்தது என்ற கருத்தை ஆதரிக்கின்றன. இந்த ஆய்வுக் கட்டுரையில் விவாதிக்கப்பட்டுள்ள மற்றும் பல தலைப்புகள்:

- தமிழர்களும் இரும்பும் : ஒரு தொழில்நுட்ப முன்னேற்றம்
- தொழில்நுட்ப வளர்ச்சி சிந்து சமவெளியுடன் ஓர் ஒப்பீடு
- திராவிடப் பாரம்பரியம் : ஒரு பகிரப்பட்ட பாரம்பரியம்
- கடந்த காலத்தின் ஒரு பார்வை : கொடுமணல் வாள்
- பாஜக தலைவர்களின் மௌனம்
- ஆப்பிரிக்காவிலிருந்து வெளியேறிய கோட்பாடு: விருமாண்டி
- சிந்து சமவெளி நாகரிகத்திலிருந்து நுண்ணறிவு
- மதுரை ஒரு நாகரிகத்தின் பரிணாமம்
- கீழடி ஆரம்பகாலத் தமிழ் நாகரிகத்தின் ஒரு சாளரம்

"இந்தக் கடந்த காலத்தைப் புரிந்து கொள்வது பெருமைக்காக மட்டுமல்ல, எதிர்காலத்தை வழிப்படுத்துவதற்கு அவசியம்."

என்ற வரிகள் இந்த ஆய்வுக் கட்டுரையைப் பற்றி,தமிழ் மண்ணில் மேற்கொள்ளப்படும் அனைத்து ஆராய்ச்சிகளும் தமிழின் தனித்தன்மையை மேற்கோள்காட்டிக் கொண்டே இருக்கின்றன" என்று குறிப்பிட்டு உரையாற்றினார்.

தொடர்ந்து கட்டுரை ஆசிரியர் வெ.சொக்கலிங்கம் அவர்களை அவைக்கு அறிமுகப்படுத்தி அவரை ஏற்புரை ஆற்ற வா.நேரு அழைத்தார். வெ.சொக்கலிங்கம் ஏற்புரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில்

“சான்றோர்கள் அனைவருக்கும் வணக்கம்.இந்த வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்த பெரியார் பன்னாட்டு அமைப்பு, அமெரிக்கா, திராவிடப்பொழில் ஆசிரியர் குழுவினர் அனைவருக்கும் நன்றி.மிகச்சுருக்கமாகச் சொல்லவேண்டுமென்றால், இந்தக் கட்டுரையை எழுதுவதற்கான காரணம், நாம் சங்க இலக்கியத்தைப் பற்றிப் பொதுவாக நிறையப்பேசுவோம். அப்படிப் பேசும்போது 2000 வருடத்திற்கு முந்தைய வரலாறு என்று சொல்வோம். இடைப்பட்ட காலங்கள் என்ன ஆனது என்ற கேள்வியை நோக்கும்போது, கண்டிப்பாக நமக்குத் தொன்மை இருக்கிறது. சங்க இலக்கியத்திற்கு முந்தைய காலகட்டம் தொல்லியல் வழியாகவும், நூல்கள் வழியாகவும் கிடைத்திருக்கிறது. அந்த அடிப்படையில் சிந்து சமவெளி இருக்கிறது, அதற்குப் பிறகு இப்போது நமக்குக் கீழடி இருக்கிறது. இதற்கு அடுத்து இரும்பின் தொன்மையைப் பற்றி நம் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார். அதை வைத்து நாம் இதையெல்லாம் இணைத்துப் பார்க்கும்பொழுது, நான் தொழில்முறையில் ஒரு தொல்லியல் ஆய்வாளர் அல்ல, இருந்தாலும் நிறைய நூல்களைப் படித்ததன் மூலமாக, நாம் ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையை எழுதலாம் என்று முயற்சித்ததன் விளைவாகத்தான் நான் இந்தக் கட்டுரையை எழுதி இருக்கிறேன். நான் இருப்பது மதுரை. தொன்மையான நகரம். அப்போது நமது நகரத்தைப் பற்றி... என்னும் ஆர்வத்தில் நிறையப் படிக்கும்போது ஐராவதம் மகாதேவன் அவர்களின் எழுத்துகளைப் படிக்க நேர்ந்தது. அதில் அவர் சிந்து சமவெளியில் சதுரம் சதுரமாக உள்ளது நீங்கள் மதுரையின் அமைப்பை இப்போது பார்த்தாலும், அந்த மீனாட்சி அம்மன் கோயிலைச்சுற்றி சதுரம்

சதுரமாகத்தான் இருக்கிறது. அப்புறம் கீழடி, அண்மையில் வந்த இரும்பின் தொன்மையை வைத்து எல்லாம் பார்க்கும்பொழுது நமக்கு எப்படிப்பட்ட வரலாறு இருக்கிறது என்பது தெரிகிறது. ஆரியர்கள் வருவதற்கு முன்பே இங்கு நல்ல ஆட்சியோடு நாகரிகத்தோடு இருந்திருக்கிறோம். எப்படி ஆரியர்களின் ஆதிக்கத்தால் நமது வாய்ப்புகள் விட்டுப்போனது? அப்படியென்றால் நாம் நிறையப் பேசவேண்டும், நிறைய எழுதவேண்டும். இதை மக்களிடம் கொண்டு போய்ச் சேர்க்கவேண்டிய கடமை நம் எல்லோருக்குமே இருக்கிறது. அந்த வகையில்தான் இந்தக் கட்டுரையை நான் எழுதி இருந்தேன். குறிப்பாக இன்றைக்கும் ஆரியம் தொடர்வதற்கான காரணம் பற்றி ஒரு பத்தி எழுதியிருக்கிறேன். பிஜேபி தலைவர்களின் மௌனம் என்பது பற்றி... இன்றைக்கு வரை தமிழ் நாட்டின் இரும்பின் தொன்மையைப் பற்றிப் பேசவில்லை. கீழடி ஆய்வு அறிக்கையையும் அவர்கள் வெளியிடத் தயாராக இல்லை. இவையெல்லாம் நமக்குச் சுட்டிக் காட்டுவது அந்த 2000 ஆண்டு கால வரலாறு என்பது இன்றைக்கும் தொடர்கிறது என்பதைத்தான். வேறு வேறு வடிவங்களில் இன்றைக்கும் இருந்து கொண்டு இருக்கிறது. இதனை முறியடிப்பதற்கான நமக்கு இருக்கும் ஒரே வாய்ப்பு, அறிவுத்தளத்தில் இதைக் கொண்டு செல்வதுதான். அதுவும் தமிழைத் தாண்டி, இதை ஆங்கிலத்தில் கொண்டு செல்ல வேண்டும். என்னும் எண்ணத்தில்தான் இந்தக் கட்டுரையை நான் முயற்சி செய்தேன். அனைவருக்கும் நன்றி" என்று குறிப்பிட்டு உரையாற்றினார்.

அவருக்கு நன்றிகூறி பேரா சுலோச்சனா அவர்களின் கட்டுரையைப் பற்றி ஆய்வு செய்ய இருக்கும் கோதை அவர்களை அவைக்கு அறிமுகப்படுத்தி, அவரை உரையாற்ற நிகழ்வின் ஒருங்கிணைப்பாளர் அழைத்தார்.

**கோதை அவர்களின் உரை...**

அனைவருக்கும் வணக்கம். நாம் இன்றைக்குப் பார்க்க இருக்கும் கட்டுரை 'போராட்டங்களும் சமூக நீதிப் பாடங்களும்'. இந்தக் கட்டுரையை எழுதியவர் பேரா நா.சுலோச்சனா அம்மா அவர்களைப் பற்றிய சிறப்புகள் கட்டுரையின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திராவிடக் கொள்கைகள் என்று பார்க்கும்பொழுது, அதில் சமூக நீதி, தமிழ் மொழி மேம்பாடு,தமிழின மேம்பாடு, பெண்ணுரிமை, ஜாதி ஒழிப்பு. இதற்கு எல்லாம் பொதுவாக இருப்பது சமூக நீதி. அப்போ, இந்த சமூக நீதி சீர்கெடும்போதெல்லாம் அநேகமான சமூக நீதிப்போராளிகளும், பெருந்தலைவர்களும் தலையிட்டு அதைச் சீர்படுத்தியிருக்கிறார்கள். அதில் நமக்கெல்லாம் தெரிந்தவர் தலைவர், நமது தந்தை பெரியார் அவர்கள். பெரியார் பல போராட்டங்களை நிகழ்த்தி இருக்கிறார். ஆனால் பெரியாரோடு இணைந்து பல பெண்கள் வரலாற்றில் இடம் பிடித்து இருக்கிறார்கள். வரலாறு முக்கியம். நமது தமிழ்ப்பெண்கள் எவ்வளவு போராட்டம் செய்திருக்கிறார்கள் என்பது இந்தக் கட்டுரையில் முத்தாய்ப்பாக எழுதப்பட்டிருக்கிறது. பெரியார் சொல்வார், ஒரு பெண்ணுக்குப் பெண்தான் போராட வேண்டும் என்பதைச் சொல்வார். நம் நா.சுலோச்சனா அம்மா, பெண்களை இந்தக் கட்டுரையில் சரமாரியாகத் தூக்கி நிறுத்தி, அனைத்துப் பெண் போராளிகளைப் பற்றியும் எழுதியிருக்கிறார்கள். அதில் நாம் ஒன்னு ஒன்னாய்ப் பார்க்கப்போகிறோம்.

முதலில், போராட்டங்களங்களில் நாகம்மையார். நாகம்மையார் பற்றிக் கட்டுரையில் குறிப்பிடுகின்றார். காந்தியாரிடம் போய்க் கேட்கிறார்கள். இந்த மதுவிலக்குப் போராட்டத்தை அப்படியே திருப்பி வாங்கிக்கொள்ளுங்கள் என்று கேட்கிறார்கள். "அதெல்லாம் என் கையில் கிடையாதுங்க. அது ஈரோட்டிலே இரண்டு பெண்ணுங்க இருக்கிறாங்க. அவங்க கிட்டத்தான் இருக்கிறது" என்று காந்தி சொல்கிறார். அப்படிப்பட்ட ஆளுமை வாய்ந்த பெண் நமது நாகம்மையார். வைக்கம் போராட்டத்தில் பெரியார் சிறை பிடிக்கப்படுகிறார். அந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த முயற்சிக்கிறார் நாகம்மையார். அப்போது நாகம்மையாரிடம் போய்க் காவலர்கள் கேட்கிறார்கள். "நீ என்ன ஜாதி" என்று கேட்கிறார்கள். அதற்கு நாகம்மையார் அவ்வளவுதான் நீ முடிஞ்ச என்று சொல்வதுபோலச் சண்டை போடுகிறார்கள். எப்படி என்று பாருங்கள். ஆண்கள் எல்லாம் போராட்டம் நடத்துகிறார்கள், அதையெல்லாம் காவலர்கள் எதிர்கொள்கிறார்கள். ஆனால் பெண்கள் போராடும்போது அப்படியே திகைத்துப்போகிறார்கள். என்ன, இத்தனை பெண்கள் வந்து போராடு

கிறார்களே, அப்படியென்று நமக்கு எல்லாம் முன்னோடியாக இருந்தவர் அன்னை நாகம்மையார் அவர்கள். அதுமட்டுமல்ல, இயக்கத் தோழர்களை அரவணைத்து, அன்னமிட்டு அன்னையாக மாறியிருக்கிறவர் நமது நாகம்மையார் என்று சொல்கிறார். அப்புறம் நாகம்மையார் இறப்பின்போது பெரியார் கூறியிருக்கிற தகவல் என்ன என்று பார்த்தால்" தான் காங்கிரசில் இருக்கும்போது மறியல் விசயங்களிலும் வைக்கம் சத்யாகிரகம் விசயத்திலும் நாகம்மையார் ஒத்துழைப்பு அளித்து வந்தது உலகம் அறிந்தது" என்று குறிப்பிடுகிறார். பெரியாரே சொல்கிறபோது, அப்போது எவ்வளவு ஆளுமையோடு நாகம்மையார் இருந்திருக்கிறார் என்பது நமக்குத் தெரிகிறது. இது மட்டுமில்லாமல் திரு.வி.க. அவர்கள் "வீட்டின் ஒரு மூலையில் பேடெனப் பதுங்கிக் கிடந்த நாகம்மையார் தீண்டாமை என்னும் பேயை வெட்டி வீழ்த்துவான் வேண்டி வைக்கம் சத்தியாகிரகப் போரில் புகுந்து சிறை சென்று அரசாங்கத்தை நடுங்கச் செய்ததுடன் அமையாது மாலையும் சூட்டினார் அதை வென்றும் காட்டினார்" என்று திரு.வி.க. அவர்கள் புகழாரம் சூட்டினார் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

சடங்குகளுக்குச் செய்யும் பணத்தைக் கொண்டு போய்ப் பிள்ளைகளைப் படிக்க வைங்க அப்படின்னு போராட்டம் செய்கிறார் எஸ்.ஆர்.கண்ணம்மாள். அடுத்ததாக முக்கியமாக நாம் பேச வேண்டியது இராமாமிர்தம் அம்மையார். அவருடைய வாழ்க்கை பெண் சமூகத்திற்கு ஓர் உந்து சக்தியாகவே அமைந்திருக்கிறது.

'வீரத்தாயை இழந்தோம்...' என்று கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் இராமாமிர்தம் அம்மையார் பற்றி எழுதிய கவிதை இக்கட்டுரையில் உள்ளது. இராமாமிர்தம் அம்மையாரின் நினைவாக நமது அரசு திருமண உதவித்திட்டம், புதுமைத் திட்டம், உயர்கல்வி உறுதித் திட்டம் அப்படின்னு பல வகைகளை நமக்கு நினைவூட்டுவதில் மூலம் அந்த அம்மையாருடைய ஆளுமையும் அவங்களுடைய செயல்திறனும் நமக்குத் தெரிகிறது. இது மட்டும் இல்லாம அவங்க தேவதாசி குலத்துல பிறந்திருந்தாலும், தேவதாசி முறையை ஒழிக்க வேண்டும் என்பதற்காக. பல போராட்டங்களில் ஈடுபட்டு இருக்காங்க. நமது மருத்துவர் முத்துலட்சுமி அம்மா அவர்களுக்கு முன்பாகவே தேவதாசி ஒழிப்பு முறையைப் பற்றி அவர்கள் பேசி இருக்கிறார்கள். இது மட்டும் இல்லாம நாகபாசத்தார் சங்கம் என்பதை, தந்தை பெரியார் மற்றும் பல தலைவர்கள் துணையுடன் இந்தச் சங்கத்தை எடுத்து நடத்துறாங்க தேவதாசி முறையை ஒழிக்க வேண்டும் என்று பலவகையில் பாடுபடுகிறார்கள். இது மட்டும் இல்லாம 1925இல் மயிலாடுதுறை, மாயவரத்துல 'பொட்டறுப்பு மாநாடு நடத்தி பொட்டறுப்பு மாநாட்டில் என்ன பண்றாங்க அப்படின்னு பார்த்தீங்கன்னா தேவதாசிகளுக்கு அந்த மேடையில திருமணம் நடத்தி வைக்கிறார்கள். இது எவ்வளவு பெரிய துணிச்சலான போராட்டமாக அமைந்திருக்கும் என்பதை இங்கு நீங்கள் நினைத்துப் பாருங்கள். இது மட்டும் இல்லாம ஒரு நல்ல எழுத்தாளர் ஆக இருந்திருக்காங்க எப்படின்னு கேட்டீங்கன்னா 'தாசிகளின் மோசவலை' அல்லது மதி பெற்ற மைனர்' அப்படிங்கிற புதினத்தை எழுதி, எப்படி எல்லாம் துன்பத்திற்கு ஆளாகிறார்கள் தேவதாசிகள் என்பதை விளக்கியிருக்கிறார்கள். 'தேவதாசிகள் என்ற கூட்டமே ஆரியப் பார்ப்பனர்களிடமிருந்துதான் உற்பத்தியாகி இருக்க வேண்டும்' என்று தன் புதினத்தின் முன்னுரையில் எழுதி இருக்கிறார். இன்றைக்குக் கூடப் பல பேர் தாயின் பெயரை முன்னெழுத்தாகப் போடுவதில்லை. தந்தையின் பெயர் மட்டும்தான் போடுகிறோம். தன்னை வளர்த்த வளர்ப்புத்தாய் பெயரின் முதல் எழுத்தை தன் முன்னெழுத்தாக ஆ.இராமாமிர்தம் என்று போட்டவர். இப்படி ஒரு சாதனையைப் படைத்த அவரின் மேல் ஒரு பெரிய மதிப்பு வருகிறது.

அடுத்ததாக அன்னை மீனாம்பாள் சிவராஜ். இவங்க வந்து தாழ்த்தப்பட்ட இயக்க தலைவர் சிவராஜ் அவர்களுடைய துணைவியார். இதுமட்டும் இல்லாம பெரியாருக்குப் பெரியார் என்ற சிறப்புப் பெயரை அழைக்க ஏற்பாடு செய்தவர்களில் இவங்க ரொம்ப முக்கியமான ஓர் ஆளா இருந்திருக்கிறார். கல்வி ஒன்றால் மட்டுமே சமூகத்தில் உயர்ந்த சமநிலையை அடைய முடியும் என்று இவர் முழங்கி இருக்கிறார்.

அடுத்த பெண்மணி மருத்துவர் தர்மாம்பாள். அவருடைய இயற்பெயர் சரஸ்வதி. அவருடைய கணவர் ஒரு நடிகர் முனுசாமி. இவங்க ரெண்டு

பேருடைய திருமணம் பார்த்தீங்கன்னா ஜாதி மறுப்புத் திருமணமாக அமையுது. பெரியாரின் மீதும் பெரியாருடைய கருத்துகள் மீதும் மிகப்பெரிய ஈடுபாட்டுடன், இருந்திருக்கிறார். பல பெண்கள் கல்வி முன்னேற்றம், வேலை வாய்ப்புப் பெற உதவியிருக்கிறார்.

'தமிழ் மாதர் கழகம்' என்னும் அமைப்பினைத் தர்மாம்பாள் தோற்றுவித்திருக்கிறார். அதன் தலைவராகப் பண்டித நாராயணி அம்மையாரும். செயலாளராகத் தர்மாம்பாளும் இருக்குறாங்க. கல்வி அறிவின்றி, அறியாமையால் மூழ்கிக் கிடந்த பெண்களிடையே, மண்டிக் கிடந்த மூடப் பழக்கங்களை எடுத்துக் கூறி அவர்களிடம் பகுத்தறிவு பிரச்சாரம் செய்துள்ளார். கல்வி அறிவின்றி அறியாமையில் மூழ்கிக் கிடந்த அப்படின்னு, ஏன் அதைச் சொல்றேன்னா. இன்னைக்குக் கல்வி அறிவு இருக்கு. எல்லாரும் பட்டப்படிப்பு படிச்சிட்டோம். இன்னைக்கு நல்லா பேசுறோம். இன்னிக்கி யார் போய்ப் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்யறதுன்னு எனக்கு இந்தக் கேள்வி வந்தது. நல்ல கல்வி அறிவில் இருக்கும் பெண்கள் கூட இன்னும் சடங்குகளில் மூழ்கித்தான் கிடக்கிறார்கள். நன்றி, பல வருடங்களுக்கு முன்பே கல்வியறிவில் இல்லாத பெண்களுக்காகப் பிரச்சாரம் செய்கிறார் தர்மாம்பாள். முக்கியமாகப் பெண்கள் மாநாட்டின் தூண்களாகச் செயல்படுகின்றனர் தமிழகத்திற்கே கழகம் அப்படிங்கிற பெயரை கொடுத்ததே நம்ம தர்மாம்பாளாக இருக்கிறார். எத்தனையோ கழகங்கள் இன்னும் வந்துக்கிட்டே இருக்கு.

1938இல் நடந்த பெண்கள் மாநாட்டைப் பற்றியும், அதில் பெரியாருக்கு பெரியார் என்ற பட்டம் கொடுத்தது பற்றியும் விரிவாக இக்கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார். அப்ப எவ்வளவு வரலாற்றில் முக்கியமான மாநாட்டை இந்தப் பெண்கள் நடத்திக் காட்டியிருக்கிறார்கள்

அடுத்தது நீலாவதி ராமசுப்பிரமணியம் அம்மா அவர்களைப் பற்றி இக்கட்டுரை சொல்கிறது. 1930இல் இவருடைய ஜாதி மறுப்பு திருமணம் நடைபெறுகிறது. இவருடைய திருமணத்திற்கு அடுத்து நிகழ்ந்த நிகழ்வுகள் பற்றி இக்கட்டுரை விவரிக்கிறது.

அடுத்ததாகக் குஞ்சிதம் குருசாமி அவர்கள் பற்றி இக்கட்டுரை பேசுகிறது. இந்தியாவின் முதல் பெண் கல்வி அதிகாரியாகப் பணியாற்றிய பெருமைக்குரியவர். 'ஆண்களின் அடக்குமுறைக்குக் பெண்களின் கல்வியின்மையே காரணம்' என்று முழங்கியிருக்கின்றார்.

அம்மா வீரம்மாள் பற்றி விரிவாக இக்கட்டுரை விளக்குகிறது.பெண் அடிமைத்தனத்தை ஒழிக்க அயராது பாடுபட்டவராக இருந்திருக்கிறார் 1943ல் ஆதிதிராவிடர் நலத்தொடக்கப் பள்ளியை ஆரம்பிக்கிறார். கோயில் வழிபாடு முறைகளை அவர் ஒதுக்கி இருக்கிறார். திருச்சிராப்பள்ளியில் 'அன்னை ஆசிரமம்' என்று ஒன்றை இவர் ஆரம்பித்து இருக்கிறார். இதில் குழந்தைகள் இலவசக் காப்பகம், குடும்ப நலப் பள்ளி மையம், உடல் ஊனமுற்ற குழந்தைகள் இல்லம், பணிபுரியும் பெண்கள் நலவிடுதி என்று பல விஷயங்கள் இந்த அன்னை ஆசிரமத்துக்குள்ள நடந்திருக்கிறது. இவங்கள 'ரேடியோ தாயார்' அப்படின்னு எல்லாரும் பாராட்டுறாங்க அப்படின்னு இந்தக் கட்டுரை அனைத்துப் பெண்களைப் பற்றியும் அழகாகச் சொல்லுகிறது.

தொடர்ந்து தந்தை பெரியாரும் பெண் விடுதலையும் என்ற தலைப்பில் 'பெண்கள் வளர்ந்து திருமணம் செய்யும்போது அவர்களே தேர்வு செய்த ஆணைத் திருமணம் செய்வது சிறந்தது' என்று பெரியார் சொன்னது உட்பட பல கருத்துகளைக் குறிப்பிட்டுள்ளார். மனைவி கணவனை மதிக்க வேண்டும் என்றால் ஏன் கணவன் மனைவியை மதிக்கக் கூடாது என்று கேட்டார். ஆண்மை என்ற பதம் அழியவேண்டும் என்றார். அது அழிந்தால் மட்டும் தான் பெண்களுக்கான விடுதலை பிறக்கும் என்றார். அதே மாதிரி எப்பவுமே பெண் விடுதலைக்கு ஆண்கள் போராடமாட்டார்கள். ஓநாயிடம் ஆடுகள் எப்படிச் சுதந்திரத்தை எதிர்பார்க்க முடியும் என்றார். முக்கியமாக இந்த மொழி அரசியல்... எப்படி விபச்சாரி அப்படிங்கற வார்த்தைக்கு விபச்சாரகன் அப்படிங்கிற வார்த்தை இல்லை, அதைப்போலப் பல சொற்கள்.. அப்படி என்றால் பெண்ணை ஒரு அரசியலுக்குள்ள தள்ளி ஒரு மொழி அரசியலுக்குள்ளே தள்ளி இன்னும்

அடிமையாகவே வைத்திருக்கிறது என்று விளக்கி, 'எங்காவது வெள்ளைக்காரர்களால் இந்தியர்களுக்குச் செல்வம் பெருகுமா? எங்காவது பார்ப்பனர்களால் பார்ப்பனரல்லாதவர்களுக்குச் சமத்துவம் கிடைக்குமா? என்று பெரியார் கேட்ட கேள்விகளைக் கட்டுரை ஆசிரியர் குறிப்பிட்டிருக்கிறார்.

நீலாவதி அம்மையார், மலர் முகத்தம்மையார், பொற்செல்வி, சத்தியவாணி முத்து அம்மையார், மஞ்சுளா பாய், மிராண்டா கஜேந்திரன், பரிபூரணத் தம்மையார், சிவகாமி அம்மையார், கே.ஏ.ஜானகி அம்மையார் மேலும் அலமேலு மங்கைத்தாயாரம்மாள், ப.நூர்ஜகான் பேகம், அலமேலு அப்பாதுரையார், ராணி அண்ணாதுரை, அன்னை மணியம்மையார், ஏ.பி.ஜே. மனோரஞ்சிதம் அம்மையார், திருமகள் இறையன், வெள்ளக்கோயில் இரங்கநாயகி அம்மாள், தங்கமணி குணசீலன், பார்வதி கணேசன், மீரா ஜெகதீசன் வழக்குரைஞர் அருள்மொழி, ஓவியா இப்படிப் பல பெண்கள் நமக்காகக் களமாடினார்கள், களமாடிக்கொண்டிருக்கிறார்கள் அதற்கு அவர்களின் உறுதியான மனநிலை, கொள்கைப் பிடிப்புமே காரணம் என்று குறிப்பிட்டு இந்தக் கட்டுரையை ஆய்வு செய்ய வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைக் கூறி விடை பெற்றுக்கொண்டார்.

**முனைவர் நா.சுலோசனா அவர்களின் ஏற்புரை:**

சமூக நீதிக்காக எத்தனை பேர் போராடி இருக்கிறார்கள் களமாடி இருக்கிறார்கள் ஏற்கனவே பெண் போராளிகள் எல்லாம் முன்னிறுத்தப்பட்டார்கள், அவர்களை எல்லாம் அசைபோடும் விதமாக இந்தக் கட்டுரையைப் போராட்டங்களும் சமூகநீதி பாடங்களும் என்னும் இந்தக் கட்டுரையை எழுதினேன் தந்தை பெரியார் அவர்கள் சொன்னதைப் போலக் கரண்டி பிடிக்கும் கைகளில் புத்தகங்களைக் கொடுங்கள் அதேபோலப் பெண் கல்வி என்பது இந்தச் சமூகத்தில் இருக்கிற அடிமைத்தனத்தை ஒழிக்கும் பேராயுதமாக இருக்கும் என்பதையும் சொன்னார். எல்லாப் பெண் போராளிகளும் பெண் கல்வியை வலியுறுத்தி எழுதியிருக்கிறார்கள், பேசி இருக்கிறார்கள் என்பதை வரலாற்று ரீதியாக நாம் பார்க்கிறோம். மூடநம்பிக்கை ஒழிப்பு, பகுத்தறிவை நிலை நாட்டுவது என்பவற்றிற்கும் சாதி மறுப்புத் திருமணம், திருமணத்திற்கு ஏன் இவ்வளவு செலவழிக்கிறீர்கள் இந்தப் பணத்தை ஏழைகளின் படிப்புக்கு உதவி செய்தால் அந்தச் சமூகம் வளர்ச்சி பெறும் என்பதை கல்வி உள்ள சமூகமாக அறம் உள்ள சமூகமாக மாற்ற வேண்டும் இந்தக் கல்வி ஒன்று தான் பேராயுதம் என்பதே.

வட மாநிலங்களில் நிறையத் தலைவர்கள் இருந்தாலும் கூடத் தந்தை பெரியார் அவர்கள் கொடுத்த களங்கள் நாம் எண்ணத்தக்கது. இன்று நாம் சுயமரியாதை வாழ்வே சுகவாழ்வு என்று வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். அதற்கு அடிப்படை வித்தாக அமைவது 1929 செங்கல்பட்டு மாநாட்டில் பெண்களுக்கெல்லாம் சுயமரியாதையும் சொத்துரிமையும் வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுதான். இன்றைக்குப் பெண்களுக்குத் திருமணம் ஆனால் கூடத் தங்கள் கால்களில் நிற்பதற்குக் கல்வியும், சொத்துரிமையும்தான் அடிப்படையாக அமைந்திருக்கிறது. ஒரு நம்பிக்கை ஊன்றுகோலாக அவைதான் இருக்கின்றன. அதை மறுப்பதற்கு இல்லை, மறைப்பதற்கு இல்லை. நாகம்மையாரோ, கண்ணம்மாளோ, நீலாவதி ராமசுப்பிரமணியம், அது மாதிரி வீரம்மாள், குஞ்சிதம் குருசாமியோ இப்படிப் பல பெண் தலைவர்கள் இருந்திருக்கிறார்கள். மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் பற்றி இந்த இடத்தில் கண்டிப்பாகப் பதிய வேண்டும். திருமண நிதி உதவி திட்டத்திற்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் பெயர். பெண்கள் எட்டு வரை படித்தால் உதவி. பொம்பள புள்ளைங்க எட்டாவது வரை படிக்கட்டும். உதவி கிடைக்கும் என்று சொன்னார்கள். அதுக்கப்புறம் ஒரு பத்து வரை படி என்று சொன்னார்கள். அரசு ஒரு 5000 ரூபாய் தர்றாங்களா, அது வாங்குவது வரைக்கும் நீ படி என்றார்கள். இப்படிப் பெண்களின் கல்வித் தகுதியை கொஞ்சம் கொஞ்சமாகக் கூட்டினார்கள். பெண் பிள்ளைகள் கல்வியைக் கற்க வேண்டும். இந்தச் சமூகத்தில் கல்வியின் தரத்தையும், பெண்களின் மேம்பாட்டையும் மூவலூர் ராமாமிர்தம் அவர்களின் பெயரை வைத்து மேம்படுத்திக் கொண்டே இருந்தார்கள். இப்போது கல்லூரிகள் நுழைந்தால் புதுமைப்பெண் திட்டத்தின் மூலமாக மாதம் ஆயிரம் ரூபாய் தரப்படுகிறது. உயர் கல்வி உறுதித் திட்டம் என்று பெயர்

மாற்றம் செய்யப்பட்டுச் செயல்படுத்தப்படுகிறது. ஆகையால் கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்று நாம் பெருமையாகப் பேசலாம். சென்னை தரமணி மருத்துவர் தருமாம்பாள் அவர்கள் பெயரில் மகளிர்களுக்காகவே நிறுவப்பட்டது. அவர்கள் ஜாதி மறுப்பு, கடவுள் மறுப்பு, தாலி மறுப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள். இப்படிக் களமாடியவர்களாக வரலாற்றில் நாம் பார்க்கிறோம் அதேபோல மொழிப்போர் ஈகியர்களைப் பற்றிப் பேசியது ஆண்களைப் பற்றி எல்லாம் நாம் சொல்கிறோம் ஆனால் பெண்களிலும் மொழிப்போர் தியாகிகள் எல்லாம் இருந்திருக்கிறார்கள்.

1930களில் நீலாவதி அம்மையார், தனலட்சுமி ஆகியோர் எல்லாம் தமிழ் வாழ்க என்று இந்தி திணிக்கப்பட்ட போது எதிர்ப்புக் குரலை எழுப்பி இருக்கிறார்கள். வயிற்றில் குழந்தையோடு, இரணங்களைச் சுமந்து கொண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சிறை சென்றிருக்கிறார்கள். இறந்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் மூலக்கொத்தலம் சுடுகாட்டில் நினைவு தூண்கள் எல்லாம் எழுப்பப்பட்டிருக்கின்றன. இப்படிச் சமூகத்தில் சமூக நீதி நிலைநாட்டுவதற்காகப் பல்வேறு போராட்டங்களைக் கையில் எடுத்த இந்தப் பெண்களுக்கு எல்லாம் ஊன்றுகோலாக, மிக நம்பிக்கை தரக் கூடியவராக, தைரியத்தைத் தரக்கூடிய ஒருவராக, உந்து சக்தியாக, ஒரு போர்வாளாக யார் இருந்திருக்கிறார் என்றால் தந்தை பெரியார் இருந்திருக்கிறார். நான் இருக்கிறேன் நீ தைரியமாகக் களமாடு என்று தந்தை வீட்டில் சொல்வதைப் போல, இந்தச் சமூகத்தில் சமூக நீதிக்காக நீ களமாடு என்று பெண்களுக்குக் கருத்து ரீதியாகப் பெரியார் நின்று இருக்கிறார். அதனால் அவர்கள் எல்லாம் வீரத்தோடு களம் ஆடி இருக்கிறார்கள் என்பதை நாம் வரலாற்றில் பார்க்கிறோம். இப்படித்தான் மதுவிலக்குப் போராட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்று காந்தியாரிடம் கேட்டபோது அவர் சொல்கிறார் “அது என் கையில் இல்லை ஈரோட்டில் உள்ள இரண்டு பெண்கள் கையில் இருக்கிறது” என்று. அதைப்போல மீனாம்பாள் சிவராஜ் அவர்களுடைய வாழ்க்கை வரலாறு, தீண்டாமை ஒழிப்பு என்பது ஆண்களால் மட்டுமல்ல, பெண்கள் கையில் இருக்கிறது என்று அண்ணல் அம்பேத்கர் சொன்னதை எடுத்துக்கூறியிருக்கிறார். இப்படியான ஒவ்வொரு காலகட்டத்திலும் ஓர் உந்து சக்தியோடு அவர் இருக்கிறார் எங்கள் பின்னாடி, நமக்குப் பெரியார் இருக்கிறார், சிறியரையெல்லாம் தூக்கி விடுவதற்கு ஒரு பெரியார் இருக்கிறார் என்ற ஒரு பெரிய நம்பிக்கை தந்தது தான் இந்தக் களப்போராளிகளின் போராட்டம், சமூக நீதிக்காக நிலை நிறுத்தப்பட்டு இருக்கிறது என்பதை நாம் வரலாற்றில் நிறையப் படிக்கலாம். அவர்களுடைய வழியை நாம் பின்பற்றி நாம் உழைக்கவேண்டும். அப்படித்தான் தந்தை பெரியார் சொன்ன கருத்தியலை பெண்கள் எல்லாம் அடுத்த சமூகத்திற்குக் கடத்த வேண்டும் என்பதற்காகத்தான் இவர்கள் எல்லாம் களம் ஆடி இருக்கிறார்கள். தங்களுடைய இன்னுயிரை எல்லாம் நீத்திருக்கிறார்கள். பல சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். பிறர் மானம் காக்க வேண்டும் என்றால் தன்மானத்தை இழந்தவர்களால் முடியும் என்று களத்தில் போராடிய திராவிட இயக்க போராட்டப் போராளிகளை நாம் கண்கொண்டு பார்த்திருக்கிறோம். வரலாற்றில் படித்திருக்கிறோம். அப்படியாகப் பெண் போராளிகள் எவ்வளவு தூரம், அந்தச் சமூகநீதி, சமத்துவ நீதிக்காக அவரவர்களுடைய பகுதிகளில் இந்தச் சமூக நீதிச் சிந்தனைகளைக் கடத்துவதற்குப் போராட்டம் செய்திருக்கிறார்கள். என்பதைத்தான் இந்த வரலாறு பேசுகிறது. அப்படியாகத் தான் நான் நாகம்மையார், கண்ணம்மையார் நீலாவதி ராம்சுப்பிரமணியம் என்று பலரை எழுதியிருக்கிறேன். இப்ப எல்லாம் பாதுகாப்பு குழு என்று நாம் பார்க்கிறப்ப, இன்னைக்கு எல்லாம் பெரிய பெரிய தலைவர்களுக்கெல்லாம் ஒரு பெரிய பாதுகாப்பு குழு போடுவாங்க. அதைப்போல அன்று 1930களில் நீலாவதி — இராமசுப்பிரமணியம் அவர்கள் இருவரும் சாதி மறுப்புத் திருமணம் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். தாலி மறுப்புத் திருமணம் என்றால் எவ்வளவு பெரிய எதிர்ப்பு வரும் சமூகத்தில் அப்படின்றதை உணர்ந்து தந்தை பெரியார் ஒரு மாதம் காலமாகத் தன்னுடைய பகுதியில் அவர்களை வைத்திருந்து, எப்படித் தாய்க்கோழி அடைகாத்து தன்னுடைய குஞ்சுகளைக் காப்பாற்றுமோ அதை மாதிரி அந்த

இருவரையும் அடைகாத்துக் காப்பாற்றியிருக்கிறார் என்பதை நாம் அறிகிறோம். பல நூல்களிலும் நாம் பார்க்கிறோம். இப்படி நிறையச் செய்திகள் அடங்கியதுதான் இந்தச் சமூக நீதிப் போராட்டப் போராளிகளின் வரலாறு. இன்னும் வரலாற்றில் நிறையப் பக்கங்கள் இருக்கிறது. நாம் படிக்க வேண்டிய பக்கங்கள் இருக்கிறது. அதனுடைய நீட்சியாகக் கோதை ஜெயராஜ் அவர்கள் அந்தப் பட்டியலையும் வாசித்தார்கள். அந்தப் பட்டியல் எப்படித் தொடர் ஓட்டப்பந்தயத்தில் கையில் இருப்பதை அடுத்தவர்களுக்குக் கடத்திவிட்டு ஓடச்செய்வார்களோ, அப்படி இன்றைய தலைமுறை நம் முன்னோடிகள் நடத்திய் போராட்ட களத்தைக் கையில் எடுத்துக்கொண்டு சுகவாழ்வாக நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் நம்முடைய வாழ்வை அடுத்தத் தலைமுறைக்குக் கடத்த வேண்டும் என்ற சிந்தனையாகத்தான் நான் இந்தக் கட்டுரையைப் பார்க்கிறேன்.

இந்தக் கட்டுரைக்கு இப்படி ஓர் ஆய்வரங்கம், ஒரு திறனாய்வு, நடத்தி எல்லோரும் படிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தமைக்கும் நான் நன்றி சொல்கிறேன் பெரியார் பன்னாட்டு அமைப்பு,அமெரிக்காவிற்கும், திராவிடப்பொழில் ஆசிரியர் குழுவிற்கும் திறனாய்வு செய்த கோதை ஜெயராஜ் அவர்களுக்கும் அதைப்போல நிகழ்வில் இணைந்திருக்கும் அனைவருக்கும் நன்றி கூறி முடித்துக்கோள்கின்றேன்" என்று குறிப்பிட்டு உரையாற்றினார்.

தொடர்ந்து நிகழ்வில் முழுமையாகக் கலந்துகொண்டு, **திரு.ஆர்.பாலகிருஷ்ணன் அய்.ஏ.எஸ்., அவர்களின் வாழ்த்துரை.** "

என்னைத் திராவிடப்பொழில் கௌரவ ஆசிரியராக இருக்கவேண்டும் என்று ஆசிரியர் என்கிட்ட கேட்டபோது எனக்கு ரொம்ப மகிழ்ச்சியாக இருந்தது. இது மட்டும் கிடையாது நிறைய விஷயங்கள் என்னுடைய வாழ்க்கையில் நடந்தது எல்லாமே திடீர் திடீர் என்று நடக்கும். அந்த மாதிரி தான் நான் நத்தத்தில் ஏழாவது படிக்கும்போது எங்க பள்ளிக்கூடத்துக்கு வெளியில் வந்து, அந்தச் சிறுநீர் கழிக்கிற அந்த இடைவேளையில்.. திடீர்னு தந்தை பெரியார் வேன்ல இறங்கி பேச ஆரம்பிக்கும்போது யாருன்னு பாத்துட்டு அப்படியே நின்னுட்டேன். அது ஒரு ரெண்டு மணி நேரம் உரை. பெரியாரின் பேச்சைக் கேட்டுவிட்டு வகுப்புப்பிற்குப் போய், அதுக்காக வாங்குன அடி இன்னைக்கும் கூட வலிக்கும். தந்தை பெரியாரை நேரில் பார்த்திருக்கிறேன் என்பதை விட வேற ஒன்றும் வேண்டியதில்லை. காமராஜர் கூடக் கார்ல போய் இருக்கேன். அவர் என்னை அரசியலில் இருந்து விரட்டி விட்டார். மாணவர்களை அரசியல் படுத்த வேண்டிய தேவையைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால் பெருந்தலைவர் காமராசர், நீ அரசியலுக்கு வராதே,போய் ஐ.ஏ.எஸ்.தேர்வு எழுதப்போ என்று விரட்டிவிட்டார். டாக்டர் கலைஞர் அவர்களை நெருக்கடி நிலை நேரத்தில் நான் சந்தித்து இருக்கிறேன். கல்லூரியிலிருந்து நான் வெளியேற்றப்பட்டதிற்குப் பல்வேறு காரணங்கள் முன்வைக்கப்பட்டாலும் கூட, அதுக்குப் பின்னாடி இருந்தது, நெருக்கடி நிலை சூழல், நாங்கள் எழுப்பிய குரல், நாங்கள் நடத்தி வந்த சிற்றிதழ். இப்படிப் பல வகையான அரசியல் படுத்தப்பட்ட காரணங்கள்தான் அதில் இருக்கும் அதற்குப்பின் தொடர்ந்து 40 ஆண்டுகள் நான் தமிழ்நாட்டில் வசிச்சதே கிடையாது.

பலபேர் மதிப்புறு முனைவர் பட்டம் கொடுக்க முன்வந்தபோது வேண்டாம் என மறுத்திருக்கிறேன். ஆனால் ஆசிரியர் அய்யா வீரமணி அவர்கள், பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்தின் சார்பாக 25வது ஆண்டுப் பட்டமளிப்பு விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக அழைத்தார். விருப்பமாக வந்தேன். அந்த இடத்தில் மதிப்புறு முனைவர் பட்டம் உங்களுக்குக் கொடுக்கிறோம் என்று சொல்லி, அய்யா ஆசிரியர் அவர்கள் இன்று முதல் பாலகிருஷ்ணன், மதிப்புறு முனைவர் என்று சொல்லி பட்டம்தனை அளித்தார். பெற்றுக்கொண்டேன். அதுபோல இப்போது திராவிடப்பொழில் ஆசிரியர் குழுவிற்கு வாருங்கள் என்றார். வந்திருக்கிறேன். அதற்காகத் தீவிரமாகச்செயல்பட வேண்டும்... முயற்சிகள் எடுக்கவேண்டும்.

இன்றைய தேதிவரைக்கும் உலகம் முழுவதுமே,ஒரு குறிப்பிட்ட வகையாக மனிதர்களுக்கு, ஒரு குறிப்பிட்ட வகையான கோட்பாடு உடையவர்களுக்குத் தந்தை பெரியார் ஒரு மிகப்பெரிய எழுச்சியாக இருக்கிறார் என்பதும் ஒரு குறிப்பிட்ட வகையான

கோட்பாடு உடையவர்களுக்கு அவர் இன்றைக்கும் அச்சுறுத்தலாக இருக்கிறார் என்பதைத்தான் இந்தக் கூட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட இடையூறு காட்டுகிறது. அதனாலதான் அவர் தந்தை பெரியார். அண்மைக் காலங்களில் பெரியாருடைய எழுத்துக்கள், அவருடைய நூல்கள், அவரைப் பற்றிய நூல்கள் பொதுவெளியில் விற்கப்பட்டதைப் போல 10,20 ஆண்டுகளுக்கு முன்னால் நடக்கவில்லை.கடந்த பத்து இருபது ஆண்டுகளில் ஒரு பெரிய எழுச்சி நடந்திருக்கு. இந்தச் செயல்பாட்டுக்கான தேவைகள் இன்னும் அதிகரிச்சிட்டு வருவதாகத்தான் நான் நினைக்கிறேன்.

இரும்பின் தொன்மையைப் பற்றி நினைவுபடுத்தும் போது நான் கரும்பின் தொன்மையைப் பற்றித்தான் பேசப்போகிறேன். ஓய்வு பெற்ற பிறகு சங்க இலக்கியம் குறித்தும் தொல்காப்பியம் குறித்தும் நிறையப் பேசுகிறேன். எது சரியானது என்பதைக் கற்றுக்கொண்டோம்.

நான் என்னை தூக்கத்தில் எழுப்பிப் பேச விட்டாலும் சங்க இலக்கியம் தான் பேசுவேன். சிந்துவெளி தான் பேசுவேன். தொல்காப்பியம்தான் பேசுவேன் மறந்தும் கூடக் கம்பராமாயணம் பேசமாட்டேன். கம்பராமாயணம் நன்றாகப் படித்தவன் நான். இப்போது பேசக்கூடாது. ஏன்னா மாற்று உரையாடலை இப்போது செய்ய வேண்டிய தேவை இருக்கு. நாம்தான் இந்தியாவில் முதல் மொழி என்று பேசுகிறோம். ஆனால் தரவுகள் கொடுக்கவேண்டும். நீங்க பேசிக்கிட்டே இருங்க, தெற்கே... நீங்க உங்கள பத்திப் பேசிட்டு இருங்க. நாங்க இங்க வேற பேசிட்டு இருக்கோம் என்று பேசுகிறார்கள். இது ஒன்றுக்கும் ஒன்று தொடர்புடையது போல நம் மீது வரலாறு கட்டமைக்கப்பட்டது இதை நீங்க தரவுகளால் மட்டும் தான் முறியடிக்கணும் இப்ப முதன்முறையா நம்ம தமிழ்நாட்டில் இருந்து இந்திய நாகரிகம் பேசப்படவேண்டும் என்ற குரல் எழுந்திருக்கிறது.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' அப்படிங்கிற புரிதல். ஒரு பெண். 'வாயிலோயே, வாயிலோயே' என்று எழுப்பும் குரல். நமது சமூகம் கேள்விகள் எழுப்பிய சமூகம். நான் தொடர்ந்து ஒரு சில கருத்துகளைப் பேசுறது, எனக்குச் சொல்லிக்கொடுத்த அந்தச் சங்க இலக்கியம், 'கடவுள் ஆயினும் ஆக' என்று உரிமையோடு போய் ஒரு தோழியை விட்டுப் பேசுகிற ஒரு சமூகத்தில் இருந்து வந்திருக்கோம். ஆறு ஆண்டுகள் நான் ரொம்ப முக்கியமானதாக நினைக்கிறேன்.

கொரனா காலத்தில் ஏற்பட்ட மாறுதல்கள். பசிப்பிணி. பசியால் நம் மக்கள் பட்ட துன்பம். அறிவு சார்ந்த பொருளாதாரத்தைப் பேசியிருக்கிறோம். நான் ஒவ்வொரு கூட்டத்திலும் பார்க்கிறேன். மென்பொறியாளர்கள், மருத்துவர்கள் எனப் பலதுறை சார்ந்தவர்கள் தமிழுக்குப் பணியாற்ற வருகிறார்கள். எதிர்காலம் வெறும் தமிழ் இலக்கியத்தைப் படிப்பவர்கள் கையில் மட்டும் இல்லை. தமிழின் எதிர்காலம், பொறியாளர்கள், விஞ்ஞானம் அறிந்தவர்கள், அறிவியல் அறிந்தவர்கள் தமிழையும் சேர்த்து படிப்பவர்களின் கையில் இருக்கிறது.

செயற்கை நுண்ணறிவு வந்திருக்கிறது. ஒரு 5000 பாடல் தமிழுக்கு என்று இணைத்திருக்கிறார்கள். எல்லாம் இடைக்காலத்தில் வந்த பாட்டுகள். ஒரு பாட்டுகூட சங்க இலக்கியத்தில் இல்லை. திருக்குறள் இல்ல. இதைத்தான் செய்யறிவுக்குக் கொடுத்திருக்கிறார்கள். இந்த உள்ளீடை வைத்துத்தான் எதிர்காலத்தில் செய்யறிவு பதில் அளிக்கப்போகிறது. எதிர்காலத்தில் திருக்குறளில் இல்லாத திருக்குறளை இருப்பதாகச் சொல்லப்போகிறது. நாம் அச்சடிக்காத நூல்களைப் பொய்யாக அதுவே உருவாக்கப்போகிறது. நம் பெயரில் இல்லாத பாடல்களை எழுதப்போகிறார்கள். குறுந்தொகைப்பாடல் என்று இல்லாத ஒன்றை செய்யறிவு மூலம் காட்டப்போகிறார்கள்.

அப்படிப்பட்ட ஓர் எதிர்காலத்திற்குள் நாம் போகப்போகிறோம். அப்படி நாம் போகும்போது இந்தக் கருத்தியல் சார்ந்த ஓர் இளைய தலைமுறையை நாம் உருவாக்கியிருக்கிறோம். இளைய தலைமுறை தயாராகி வந்திருக்கின்றது என்பது மிகச் சிறந்த ஆறுதல். எல்லாம் உடைஞ்சு போற மாதிரி ஒரு உணர்வு ஏற்பட்டது. ஆனால் அதையும் மீறி நாம் அனல்வாதத்தைப் பார்த்திருக்கோம், புனல்வாதத்தைப் பார்த்து இருக்கோம், நடுவுல எல்லாத்தையும் பாத்துட்டோம். யாரை யாரெல்லாம் திட்டுகிறார்கள்,திட்ட முயற்சிப்பார்கள் என்பதுதான் நாம் தொடர்ந்து பேச வேண்டியதற்கான தேவை. ஒரு வகையில் நான் 40 ஆண்டுகள் அரசுப்

பணியில் இருந்தவன் இப்போது திரும்பி வந்தவுடன் உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தினுடைய தலைவராக இருக்க வேண்டும் என்ற அரசினுடைய விருப்பத்தைக் கௌரவப்பதவி என்ற முறையில் நான் ஏற்றுக்கொண்டேன். செயல்பட்டு வருகிறோம். செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருக்கு. கருத்தியல் சார்ந்து இயங்க வேண்டி இருக்கிறது.

இனிமேல் பேச வேண்டியது கருத்தியல் அரசியல். நம் கருத்தியிலை அரசியல் படுத்துதல் என்பதை நான் தொடர்ந்து பேசி வருகிறேன். தேர்தல் அரசியல், பண்பாட்டு அரசியல், கருத்தியல் அரசியல் எனப் பல வகையான அரசியல் இருக்கு. தேர்தலில் நிற்கிறது, ஒரு தேர்தல் அரசியல் கூட்டணி அமைக்கிறது இதுவெல்லாம் தேர்தல் கூட்டணி அரசியல். ஆனால் பண்பாட்டு அரசியல் தொடர்ந்து சொல்லி வருகிறேன். பண்பாடு இல்லாத அரசியல் இருக்கலாம், ஆனால் அரசியல் இல்லாத பண்பாடு இல்லவே இல்லை. ஆம் எங்கோ ஆதாரங்களைத் தேடித் தேடி எடுத்து இந்தச் சிந்துவெளிக்கு உரிமை கோரவும், கீழடியில் தோண்டவும் கீழடியில் வந்த தரவுகள் எல்லாம் பொதுவெளியில் பேசப்படவும், ஆதிச்சநல்லூர் எவ்வளவோ புறக்கணிக்கப்பட்டும் இன்று அதை எல்லாம் மீறி இங்குப் பேசப்படவும் பண்பாட்டு அரசியல்தான் காரணம்.

அதனால்தான் சென்னையில் நடந்த ஒரு கூட்டத்தில் அய்யா ஆசிரியர் அவர்களைச் சந்தித்தபோது, என்கிட்ட சொன்னாரு பாலகிருஷ்ணன் நம்ம வர்ற செப்டம்பர் அதாவது செப்டம்பர் 20, 2025 இந்தச் சிந்துவெளி நாகரிகம் நூறாவது ஆண்டு நிறைவு பெறும்போது நாம கீழடியில் இருக்கணும். இயக்க தோழர்களை, மற்ற தலைவர்களை எல்லாம் அழைத்துப் பெரிய விழாவாக நடத்தவேண்டும் என்று சொல்லியிருந்தார். ஆனால் ஆஸ்திரேலியா போய்விட்டு வந்ததில், உடல் நலக்குறைவு ஏற்பட்டு அய்யா ஆசிரியர் மருத்துவமனையில் இருந்தார். அதனால் அவரைத் தொந்தரவு செய்யவில்லை.

இருந்தாலும் அய்யா ஆசிரியர் அவர்கள் சொன்னபடி நாங்கள் செப்டம்பர் 20,2025 அன்று கீழடியில் இருந்தோம்.8 ஆண்டுகளாகத் தொடர்ந்து ஒவ்வொரு செப்டம்பர் 20ஆம் சென்னைக்கு வந்து ஓர் ஆங்கில உரையை ஒரிசாவில் இருந்து வந்து நிகழ்த்தி விட்டு செல்கிற நான், இப்போது சிந்துவெளி வழி வடிவங்களுக்கும் கீழடிக்கும் உள்ள தொடர்புகளைப் படித்தபின்னால், அறிவிப்புக்குப் பின்னால், சிலை வைத்ததற்குப் பின்னால் மிக மனநிறைவோடு நிதி, பண்பாட்டுத்துறை, தொல்லியல் துறை அமைச்சர் அவர்களோடும் கூட்டுறவுத்துறை அமைச்சர், ஆம் இரண்டு அமைச்சர்கள் மற்றும் ராஜன்குறை உள்ளிட்ட ஆய்வாளர்கள், நானும் போயிருந்தோம் அங்கு, கீழடியில் ஐந்து நூல்கள் வெளியிடப்பட்டன. சிந்துவெளி நாளை இனி ஆண்டுதோறும் கீழடியில் கொண்டாடுவோம் இது ஒரு மாற்றத்தினுடைய தொடக்கம்.

இதுனால தான் இப்போ இல்லாத சரஸ்வதி நதி பற்றி ஆராய மீண்டும் பலவகையான முயற்சிகள் எடுக்கப்படுகிறது. தரவுகள் இல்லாத ஒரு விஷயத்தைத் தரவுகளால் முறியடிப்பது எளிது. நான் முன்பு எப்போதையும் விட இப்போதுதான் அதிக நம்பிக்கையோடு இருக்கிறேன். இந்த இடங்கள் வந்து நமக்கு நினைவுபடுத்துது. நம்மைச் சுற்றி நடக்கும் சில நிகழ்வுகள் நமக்கு நினைவுபடுத்துகிறது.

சங்க இலக்கியத்தில் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்று ஒரு மன்னனைப் பற்றிச்சொல்கிறது. அது அரசியல் இல்லையா? கடவுள் இல்லையே என்று மாங்குடி மருதனார் பேசுகிறார் என்றால் அதுக்குப் பேருதான் பண்பாட்டு அரசியல். இந்த அரசியலை, பெண்ணுரிமையை, கல்வி பரவலாக்கத்தை, எல்லோருக்குமான கல்வியை நாம் 2000 ஆண்டுகளுக்கு மேலாகப் பேசி வருகிறோம்.. அதற்கும் முன்னால் சிந்துவெளியில் கட்டி எழுப்பினோம். சிந்துவெளி நாகரிகம் என்பது நாம் கட்டி எழுப்பிய சுவர், நாம் கட்டியெழுப்பிய செங்கல், நாம் உருவாக்கிய நகர். அதனால்தான் அந்த நகர் மையப் பண்பாட்டினுடைய தொடர்ச்சியாகத்தான் சங்க இலக்கியத்தை, இந்திய பண்பாட்டில் வெளிச்சம் பாய்ச்சக் கூடிய ஒரு திறவு கோலாகத்தான் என்னைப் போன்றவர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இந்தத் திராவிடப்பொழில் இதழில் ஆசிரியர் குழுவில் சிறப்பான ஆட்களை நான் பார்த்தேன். திரு நேரு அவர்கள், நம் சீனிவாசன் அவர்கள் இருந்தாங்க. இன்னும் நிறைய ஆளுமைகள் இதுல கலந்து கொண்டு இருக்கிறார்கள். இதில் இணைந்து

செயலாற்றுவது எனக்கு விருப்பமான ஒன்றுதான். எனக்கு விருப்பமான கருத்தியல் இதுதான். அந்த வகையில் இதைத் தொடர்ந்து முன் எடுப்போம். இன்னும் நாம் பேச வேண்டியது நிறைய இருக்கு.

ஆங்கிலத்தில் எழுதக்கூடியவர்களை நாமே கூடத் தொடர்பு கொள்ளணும். எழுதி நமக்கு வந்த கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்து போடுவது ஒருமுறை. இன்னும் எழுத வேண்டியவர்களை அந்தக் கேட்ச்மென்ட் ஏரியாவை இன்னும் விரிவுபடுத்தி, நாம் அணுகி கட்டுரைகளை வாங்கவேண்டும். ஒரு பன்னாட்டு பண்பும் சார்ந்ததாக அவை இருக்கவேண்டும். உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் நான் அந்த முயற்சியைத் தொடங்கி இருக்கிறேன்.

எங்களுக்கெல்லாம் அய்யாஆசிரியருடைய, இந்த 92 வயதில் அவர் உழைக்கிற உழைப்பு, நடக்கிற நடை, பேசுகிற பேச்சு எனக்குப் பார்க்கும்போதே ரொம்ப மிரட்டலா இருக்கும்.அகஸ்தியர் பற்றிய பொய்மைகளை விளக்கி பேசவேண்டும் என்று முடிவு பண்ணி ஏராளமான புத்தகங்களைப் படித்து ஓர் இரண்டே கால் மணி நேரம் உடல் நலம் சரியில்லை என்றாலும் கூட நான் ஓர் உரையை நிகழ்த்தினேன். அந்த உரையை நிகழ்த்தி, அதை நாங்கள் வந்து ஒரு புத்தகமாகப் போட்டோம். எனக்கு இந்தப் புத்தகத்தை அகஸ்தியர் ஒரு மீள் பார்வை என்னும் இந்தப் புத்தகத்தை ஆசிரியர்தான் வெளியிடனும் என்று ஆசை. இந்தப் புத்தகத்தைக் கொடுத்துட்டு வந்தேன். எனது 'ஒரு பண்பாட்டின் பயணம்' இந்தியில் மொழிபெயர்க்கப்பட்டு, ஒரு சில பிரதிகள் மட்டும் எடுத்துட்டு வந்து நமது முதல்வர் அவரகள் வெளியிட்டார் அப்புத்தகம் இன்னும் ஒரு மாதத்தில் பெருவெளியில் வருவதற்குத் தயாராகிவிடும். டெல்லியில் இருந்து இந்தியில் வெகு சிறப்பாகப் பண்ணியிருக்காங்க இதை நாம் தொடர்ந்து பல்வேறு மொழியில் கொண்டு செல்லவேண்டும்.

எப்படித் தமிழ் செம்மொழி ஆவதற்கு, நான் அமைச்சரவைக்கான வரைவினை எழுதிட வாய்ப்பு எனக்குக் கிடைத்ததோ, அதேபோல ஒரிசாவின் ஒரியா மொழியைச் செம்மொழியாவதற்கும் வரைவினை எழுதுவதற்கும் ஒரியா மொழியின் உலக மாநாட்டை நடத்துவதற்கான முழுப் பொறுப்பும் எனக்குக் கிடைத்தது. பெரியாரைப் பற்றிய உரையாடல் இன்று வட இந்தியாவின் பல மாநிலங்களில் நடக்கிறது. இன்னும் அதிகம் நடக்கவேண்டும். அதனால்தான் இந்த நூலை இந்தியில் சிறப்பான மொழிபெயர்ப்பாளரை வைத்து மொழிபெயர்ப்பு செய்ததற்கு அதுதான் காரணம். அந்த வகையில் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்கு வாய்ப்பளிப்பதற்காக உங்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் தொடர்ந்து செயல்படுவோம். செயல்படுவதற்கான தேவை அதிகரித்துக் கொண்டே போகிறது மிக்க மகிழ்ச்சி. நன்றி" என்று குறிப்பிட்டு உரையாற்றினார்.

தொடர்ந்து மருத்துவர் சோம.இளங்கோவன் அவர்கள் திரு.பாலகிருஷ்ணன் அய்.ஏ.எஸ்., அவர்களுக்குப் பாராட்டு தெரிவித்து உரையாற்றினார். இறுதியாக முனைவர் வா.நேரு நன்றி கூறினார்.